சுத்தானந்தம்

(பொன் விழா மலர்)

பதிப்புரிமை
முதற் பதிப்பு மே 1946

சுத்தானந்தம்

(பொன் விழா மலர்)

அருள் நிலயம்
ராமச்சந்திரபுரம்
திருச்சி ஜில்லா

24379

விலை ரூ. 2—8.

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்

பதிப்புரை

சுத்தானந்த மலரை சுத்த சிவக் கனலான முருகன் திருவடியில் வைத்து வணங்குகிறோம். இன்று சுத்தானந்த ஜயந்தி; கவியோகி சுத்தானந்தர், சுத்தமூர்த்தியான பரம்பொருட் காதலர். உயிர்க் குலத்தையே கடவுளெனக் கண்டு திருத்தொண்டால் வழிபடும் மகான். இந்தப் 'பொன் மல'ரை அன்னாருக்கு அன்புக் காணிக்கையாகச் சூட்டுகிறோம்.

இம் மலரில் சுத்தானந்தரின் அருமை பெருமைகளை விளக்கும் புலவர்மணிகளுக்கெல்லாம் எமது நன்றி.

இப் பொன் மலர், சுத்தானந்தரை ஊக்கி 'யோகசித்தி'யைச் செயலாக்கி மணி மலராகி அருள் மணம் பரவுக.

ராமச்சந்திரபுரம்
௨௯. சித். விய (சூ ௲ உ)
11 - 5 - 1946
க—௧—௲

அருள் நிலயம்

பொருளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	5
பொருளடக்கம்	6
யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் (வாழ்க்கை வரலாறு)	9
H. H. Sri Swami Shuddhananda Bharatiji Maharaj, The Great Teacher & yogi —Message from H. H. Sivanandaji Maharaj	21
ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் ஆசி மொழிகள்	23
தவயோகி வாழ்க ! —கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	25
சுத்தானந்தர் தமிழ்ப் பணி —புலவர் மணி நா. கனகராஜையர், B. O. L.	26
" இனிய தமிழ் இலக்கணம் " —வி. ஜி. ஸ்ரீநிவாஸன்	55
கலைக் கோயில் கட்டும் பாரதியார் —ராவ்பகதூர், டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி	68
யோகி சுத்தானந்தரும் தமிழ்ப் பண்பாடும் —திவான்பகதூர், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்	72
பூச்செண்டு —வி. ஆர். எம். செட்டியார் B. A.	77

சந்திப்பு 80

—தங்கம்மாள் பாரதி

தமிழின் தவப் புதல்வர் 82

—புலவர்மணி ஜி. சுப்பிரமணிய பிள்ளை

மகான் தரிசனம் 88

—எஃப். ஜி. நடேச ஐயர்

வற்றாத தமிழூற்று 91

—கே. வி. வீரராகவன்

ஆறுதலும், கிளர்ச்சியும் 97

—வை. மு. ஸ்ரீநிவாஸன்

சம பங்கு 100

—ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

சுவாமி அவர்களின் தமிழ்ப் பணி 103

—ஆ. முத்துசிவன்

சின்மயானந்த ! 112

—விஜயம்

"யோக சித்தி" 113

—திருமலை இராமாநுஜன்

மகான் என்று அறிந்தேன் 118

—"வேலு"

எனது முதல் சந்திப்பு 125

—ஆர். நாராயணசாமி

சுத்தானந்தக் கவி யமுதம் 131
—தே. ப. பெருமாள்

தமிழரின் கலைக் கோயில் 137
—சே. ராஜம்

வழி காட்டிய ஆனந்தம் 143
—வி. எஸ். பார்த்தசாரதி

தவயோகிப் புலவர் பெருமான் 147
—ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

யோக சித்தியின் இரு உபதேசங்கள் 151
—"சோமு"

நான் அறிந்த சுவாமிகள் 154
—டி. எஸ். ராஜகோபாலன்

சுத்தானந்தக் கவிக் கனிகள் 165
—"நடனம்"

மான யோகி! 171
—வி. கு. நடராஜன்

சுத்தானந்தம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

(வாழ்க்கை வரலாறு)

"நேர்வழி நின்ற பெரியார்கள் புரிந்த செயல்களே புவியில் மிணக்கின்றன; பூத்துக் குலுங்கி என்றும் காட்சி கொடுக்கின்றன."

—கவி ஷெல்லி.

"மகான்களின் வாழ்க்கை வரலாறுக ளெல்லாம், நாமும் அவர்களைப் போன்று சிறந்த வாழ்வு வாழ்தல் வேண்டும்; நமக்குப் பிற்பாடு காலமெனும் பெரு மணல் பரப்பில், நமது காலடிச் சுவடுகளைப் பதித்துச் செல்லவேண்டு மென்பதையே அறிவித் திடுகின்றன."

—கவி லாங்ஃபெலோ.

அன்றொருக்கால் ராணி மாயாதேவி ஓர் புதுமைக் கனவு கண்டாள்; ஆறு கூர் கொண்ட பேரொளி கொடுத்த நக்ஷத்திரம் ஒன்று தனது வயிற்றின் வலப் பக்கத்திலே வந்து புகுந்தது போலக் கனவு கண்டாள்! அந்தக் கனவு நனவாகிடவே மகான் புத்தன் அவதாரம் செய்தான்!

தேவி காமாக்ஷியம்மாள் நான்காம் முறை கருவுற்றிருந்த காலத்து ஓர் புதுமைக் கனவு கண்டாள்! தமிழ் வடமலையில் 'நின்றவண்ணம் காட்டும்' திருமால், அம்மாளின் கனவினிலே ஒளிப்பிழம்பு போலத் தோற்றம் காட்டி, "என் அருளால் இக்குழந்தை பிறக்கிறது; கவனமாயிரு" என இயம்பி ஒரு தங்கமணி கொடுத்தாராம்! கருவுருவிலேயே இறைவன் அருள் பெற்றதாகிவிட்டது குழந்தை. கனவு நனவாகியது!

ஹேவிளம்பி வருஷம் சித்திரை மாதம், முப்பத்து ஒன்றாந் தேதி, புதன்கிழமையன்று (11—5—1897) உத்தர நக்ஷத்திரத்திலே நமது யோகியார் அவதாரம் செய்தார். 'அவதாரம்' செய்தார் என்பது உண்மை! "வெறும் புகழ்ச்சி யில்லை." பிறந்ததும் குழந்தை அழவில்லை; சிரித்தது. தாய்ப்பால் கூட இல்லை; பசும் பாலால் வளர்ந்தது.

பரம்பரை பழமையான பரம்பரை; பெரிய பரம்பரை; தயை, நட்பு, ஈகை நிரம்பிய புனிதவழித் தோன்றல்கள். 'உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்' கொண்டவர்கள். சிவபக்திச் செல்வம் பூரணமாகப் பொலிந்தது. தகப்பனார் ஜடாதரர் உடலுறுதி பெற்ற பக்தியோகி; தாய் காமாக்ஷியம்மாள் சிவமாகக் கனிந்த ஞானி. அறிவு, ஆற்றல், ஆண்மை, அழகு, அருள் எல்லாமே அளவுற அமைந்து, குழந்தை இன்பமே வடிவாகித் திகழ்ந்தான்!

தந்தையும் தாயும் குலம் விளங்க இட்ட பெயர் *வேங்கடசுப்ரமண்யம் என்பதுவே. குழந்தை மிகுந்த செல்வமாக வளர்க்கப்பட்டு "செல்லம்" என்றே அழைக்கப்

---

* வேங்கடேசப் பெருமாள் அருளும், முருகன் அருளும் கூடி பிறந்த தென்று இப்பெயரைத் தந்தை சூட்டினார். ஞான குரு சூட்டிய தீக்ஷா நாமமே சுத்தானந்தம். 'பாரதி' என்பது துறவறப் பெயர், இவர் பரமஹம்ஸ ஸந்யாசி யானார். ஆத்மாராமன், சுத்த யோகி என்று பல பெயர்களும் வழங்கும். பள்ளித் தோழர் இவரை 'யோகி' என்றே அழைப்பதுண்டு.

பட்டது. குழந்தைக்கு ஐந்து வயதாகிக்கொண்டிருந்த சமயம், மதுரையில் லக்ஷாதிப்பிரபுவாய் விளங்கிய மாமா வீட்டிற்குச் சென்றிருந்தான். செல்லத்தை, தனது பொக்கிஷத்திற்குள் அழைத்துச் சென்று பொன், வெள்ளி, அணி, பணி முதலியவற்றை வரிசையாகக் காட்டி "செல்லம், எனக்கு தத்துப் பிள்ளையாக வந்தால் இவ்வளவும் உனக்குத்தான்" என்று சொன்னார் மாமா! "நான் அன்னை பராசக்தியின் மகன்; நான் யாருக்கும் தத்துப் பிள்ளையாக முடியாது" என்று பதிலிறுத்தது குழந்தை! "அப்படியானால் உனக்கு இங்கே இடமில்லை; போ வெளியே" என்றார் மாமா! குழந்தை நேரே கோவிலுக்குச் சென்று, அன்னை அங்கயற்கண்ணியின் அண்மை நிலை சேர்ந்து அழுதது. சற்றுநேரம் அசைவற்றுக் கிடந்தது. மீனாக்ஷியின் அருட்பார்வை விழுந்தது, உடல் இன்பக் கடலாடியது, நாவில் கலைமகள் குடிகொண்டு விட்டாள்! "அம்மா பரதேவிதயா பரியே" எனத் துவங்கிய சிறு பாடல் அரும்பியது. ஆன்ம சோதனையின் முதற் படியிலேயே, ஐந்து வயதினிலே, அறியாப் பிராயத்திலேயே — வெற்றி கண்டது. "அந்தப் பாடல் இன்றும் என் மனத்தில் சுழன்றுகொண்டிருக்கிறது; அன்றிரவே நான் மறு ஜன்மம் எடுத்தேன்" என்றே குறிக்கிறார் யோகியாரும்! அன்றிருந்து "உள்ளப் பொய்கையிலிருந்து கவியூற்று கொப்பளித்துக் காவியக் கங்கையாகப் பெருகியது." உள்ளத் துறவும் ஏற்பட்டுவிட்டது.

அருள் விளக்கம் கண்ட குழந்தை அனுபவ முதிர்ச்சியும் பெறப் பல வசதிகள் ஏற்பட்டன. தமிழறிவும், கல்வியும் அடைய சௌகரியங்கள் பல கிடைத்தன. தாய் தந்தையருடன் ஊர் ஊராகச் செல்லுவார். ஹரி கதை, பஜனை முதலியவற்றில் ஈடுபடுவார். தந்தையிடமிருந்தே திருக்குறளின் மேன்மையையும், கம்பன் கவி யின்பத்தை

யும் துய்த்தார். அருட்பெரியார்களின் பாடல்கள் பல இவருக்குப் பாடம். இவரது பாட்டனாரும் இவருக்கு ஆன்மாவின் உண்மை நிலையை உணர்த்தி, யோக ஆசனங்களில் சிலவற்றைப் பயிற்றுவித்தார். இந்த நிலையில் இதய வித்தைதனையும், நாடி தாரணையையும் நன்குணர்ந்த ஒரு 'சித்தர்' இவருக்குத் திருமந்திர உபதேசம் செய்து "ஆதார ரகசியங்களை" விளக்கினார்; இவரது ஞானத் தந்தையாக விளங்கி "சுத்தானந்தன்" என்ற இனிமைப் பெயரையும் சூட்டினார். இதயத் துடிப்போடு 'ஓம் சுத்த சக்தி' மந்திரமும் ஒன்றிவிட்டது. இஃது இவரது ஒன்பதாவது வயதிலே நிகழ்ந்தது. அன்றிருந்து எங்கு பார்த்தாலும், எதைக் கண்டாலும் அன்னை பராசக்தியின் அருள் விளக்கத்தையே கண்டார்!

"அருவியும் குருவியும் அளித்தன கவிதை;
காடும் மலையும் கவிமலர் கொய்தேன்;
கொய்த மலர்களைக் கோத்துக் கோத்துச்
சுத்த சக்திக்கே சூட்டி மகிழ்ந்தேன்"

என்றே பகர்கிறார்.

இப்படிப் பண்பட்ட காவிய உள்ளத்திற்கு, முதியோர்தம் அனுபவமும், அவர்கள் வருணித்த பழைய நினைவுகளும், வரலாறுகளும் "கதை விருந்து" அளித்தன! தமிழின் சிந்தாமணியான திருக்குறள் சுத்தானந்தருக்குத் தமிழ்மொழி அன்பை ஊட்டித் தமிழையும், தமிழரையும், தமிழ் நாட்டையும் எண்ணும்படி செய்தது!

"அமுதே அழகே அன்பே அருளே!
தன்னிகரில்லா நன்மொழித் தமிழே!
இதயக் கடவுளை இலக்கிய தமிழே!
பண்ணார் தமிழே விண்ணோர் தமிழே!
வானுற ஓங்கி வாழ்கநின் பெருமை"

என்று ஏற்றிப் போற்றி உயர்தனிச் செம்மொழிக்குப் பெருமை தேட ஆரம்பித்துவிட்டார். பிராமணரான இவர் சந்தி, ஜப மந்திரங்களை எல்லாம் கூடத் தமிழ் மொழியி லியற்றி, 'வந்தனம்' செலுத்த ஆரம்பித்து விட்டார்! அவ்வளவு தமிழார்வம் பிடித்துவிட்டது இவருக்குச் சிறுவயதிலேயே! அன்று ஏற்பட்ட "தமிழுணர்ச்சி" தான் "தமிழ்க் கனல்" தெறித்துக்கொண்டிருக்கிறது; நாட்டிற்கு ஒளி கொடுத்துக்கொண்டிருக்கிறது.

தெய்வ சிகாமணிப் புலவரிடம் பாடம் கேட்டு வந்தார் சுத்தானந்தர். தமிழிலே நல்ல புலமை ஏற்பட்டது. இவரிடமே வேதாந்த சித்தாந்த நூல்களையும், யாப்பிலக்கணத்தையும் கற்றுக் கொண்டார். அதன் பயனாக எத்துணையோ கவிமலர்கள் பூத்தன. ஆனால், அந்தப் பாடல்களையெல்லாம் ஒருசேர எதிலும் குறித்துக்கொள்ளாது, ஆத்ம திருப்திக்காகவே பாடிப் பாடிக் கிழித்தெறிந்துவிடுவது வழக்கம்! இவர் ஓர்நாள் சந்தியா மடத்தின் சுவரிலே,

> "தெய்வ வொளிதனையே தேடு; பிறவெல்லாம்
> கைநழுவும் காலத்திற் காண்."

என்ற குறட்பாவை எழுதி வைத்தார்! இதைக் கண்டு மகிழ்ந்த புலவர், சுத்தானந்தரின் ஏனைய பாடல்களையும் பார்க்க விரும்பினார். பாடல்கள் கிழித்தெறியப் பட்ட விவரம் அறிந்து வருத்தமுற்ற புலவரும், "இனி அப்படிச் செய்யாதே, எல்லாவற்றையும் சேர்த்து என்னிடம் கொண்டுவா" எனப் பணித்தார்.

இவருக்கு பகவத்கீதை, தாயுமானவர் பாடல்கள் நேர்வழி காட்டின. இவர் தனிமையிலே, மோனத்திலே, தியானத்திலே இன்பம் கண்டார். "சுத்தாத்ம சக்தி"யைத் தேர்ந்தார்.

"ஆர்வமலர்களை அள்ளி அள்ளித் தூவிய" சுத்தானந்தருக்குச் சூழ்நிலையும், பழக்கமும் ராக, தாள ஞானத்தைக் கொடுத்தன. தான் புனைந்த கீர்த்தனங்கள் அனைத்தையும் ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டு அதற்கு "சங்கீத சாகரம்" என்ற பெயரும் சூட்டி வைத்திருந்தார். சிவகங்கையின் உயர் நிலைப் பள்ளியில் மாணவராக இருந்த காலம் அது; வகுப்பிலே ஒப்பிக்கப்படவேண்டிய தமிழ்ப் பாடல்தனக்குப் பதிலாகத் தாமே இயற்றிய பாடலொன்றை ஒப்பிக்க நேரிட்டது; ஆசிரியர் சினந்தார். சுத்தானந்தர் கையிலிருந்த "சங்கீத சாகரம்" தந்தானப் பாட்டுக்களும், நாடகப் பாட்டுகள் நிறைந்ததாகவுந் தோற்றியது. வீட்டுக்குச் செய்தி கிடைத்ததும் "சங்கீத சாகரம்" அக்னிக்கு ஆகுதி செய்யப்பட்டது. மனம் வெம்பிய சுத்தானந்தர், நோட்டுப் புத்தகத்தைக் காணாது தவித்தார். கொல்லையில் சென்று கண்டபோது அக்னி தேவன் சுவைக்காது விடுத்த "பயப்படாதிரு மனமே" என்ற பாட்டு வரி கிடைத்தது. மன உறுதி ஏற்பட்டது; பக்குவம் கிடைத்தது. கலங்கிய உள்ளம் தெளிந்தது. "சரி, போனது எண்ணூறு; வருவது எண்ணாயிரம்" என மனத்தைத் தேற்றிக்கொண்டார். ஆன்ம சோதனையில் மற்றுமோர் படி! ("பயப்படாதிரு மனமே" முழு உருவத்தோடு "தேவ கான"த்தில் திகழ்கிறது. பாட்டை ஒருமுறை படித்துப் பாருங்கள். பரசு ராகம் தெரிந்து திரிபுடை தாளமும் தெரிந்தால் பாடிப் பாருங்கள்!)

சுத்தானந்தர் ஆங்கிலக் கல்வி பயின்றதுடன் தமிழிலும் தக்க புலமை பெற்றார். நாடகக் கலையில் இவருக்கு நல்ல தேர்ச்சி யுண்டு; ஷேக்ஸ்பியரை உணர்ச்சியுடன் படிப்பார். பல புலவர் உறவால் இவர் அறிவு வளர்ந்தது.

நல்ல இடங்களில் மணமங்கையர் பலர் காத்திருந்தனர். வைராக்யங் கொண்டமனம் இணங்கவில்லை! "தாயெனக் காட்சிதரும் பெண்ணை மனைவியாகக் கொள்ள மாட்டேன்" என்று சொல்லி விட்டார். இந்த நிலையில் இவர் தமது தமயனுருக்கு எழுதிய நீண்டதொரு கடிதம் "பெரியார் வரலாறு" எனும் நூலில் "சாந்தன் துறவு" என்ற அதிகாரமாக விளங்குகிறது. படித்துப் பாருங்கள். பல உண்மைகள் விளங்கும்.

பள்ளி வாழ்க்கைக்கிடையே இவர், கோவிலென்றும் குளமென்றும், சாமியார் என்றும் தேடிக்கொண்டு, தலையை மொட்டையடித்துக் கொண்டு திரிந்ததும் உண்டு.

ஆங்கில மொழியில் நல்ல லாகவம், பட்டம் முதலியன வந்த பின்னர் வேலை பார்க்க விரும்பினார். ஆனால் 'மில்டன்' கவிதை நடையில் மனுச் செய்து கொண்டால் வேலை கிடைக்குமா என்ன? ஆனால், சிவகங்கை உயர் நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் இவரை உபாத்தியாயராக நியமித்தார். உபாத்திமைத் தொழிலில் நல்ல பெயர் கிடைத்தது. பல அரிய நூல்களைப் பயின்றார். பலப் பல பொருள்களைப் பற்றிக் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதிக் குவித்தார். இத்துறையில் போதுமான அனுபவம் பெற்றதும் மதுரைக் கடுத்த பசுமலையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். அங்கு படிக்கவேண்டியிருந்த ஒரு வருஷப் படிப்பை இரண்டே மாதங்களில் படித்து முடித்து, எஞ்சியிருந்த காலத்திலே பல உன்னதமான நூல்களைப் பயின்றார். மதுரை வந்து கீதாப் பிரசங்கங்கள் கேட்டதுண்டு. திருப்பரங்குன்றம் சென்று முருகனை வழிபட்டதுண்டு. கல்லூரி மேடையில் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நல்வழிப் பேச்சுக்கள்

நிகழ்த்தியதுண்டு 'ஏசுநாதர்' நாடகத்தை எழுதியதோடு, தாமே ஏசுவாக நடித்ததும் உண்டு. எவ்வளவு வேலை. ஆனால்; பரீக்ஷை முடிவில் வெற்றிப் பெயர்களில் முதலாவது சுத்தானந்தரதே! பசுமலையில் இருந்தபோதுதான் "பாதிரி" போல வாழத் தொடங்கினார். கிறிஸ்து மத உண்மைகளை ஆராய்ந்தார். 'பைபிள்' நூலைப் பயின்றார். "ஏசு சரிதை"யை விருத்தப் பாக்களில் அமைத்துப் பாடினார்.

"மனம் இறைவனிடத்து ஈடுபட் டிருக்கவேண்டும்; கை பொதுநலப் பணி புரிதல் வேண்டும். நாட்டிற்கும் மொழிக்கும் பெரும் பணி ஆற்றவேண்டும்" என்ற எடுப்பான கொள்கைகளை மேற்கொண்டார். நாட்டின் வறிய நிலை தெரிந்து, எளிய உணவையே கொண்டார்.

கற்றுய்ந் தறிந்தபின் அதன் படி நடந்து பயன் பழுக்க வாழ வேண்டு மல்லவா? பல கிராமங்களுக்குச் சென்று ஏழைகட்கு எழுத்தறிவித்தார். சின்னாட்களில் காட்டுப்புத்தூர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. அருகிலிருந்த (நெரூர்) சதாசிவ ப்ரம்மேந்திரர் சமாதி இவருக்கு யோகசாதனத் தவ நிலயமாக விளங்கியது. முன்பே வீட்டை மறந்து விட்டார். சாரணர்படை யமைத்துப் பல சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று அளப்பரிய பணி புரிந்தார். சாதிமத வேறுபாட்டை ஒழிக்க முற்பட்டார். ஹரிஜனத் தொண்டு செய்தார். உண்மையில், பாதிரி போல வாழ்ந்து சன்மார்க்கப் பிரசாரம் செய்தார்.

"ஒவ்வொருவரும் ஏதாவதொரு தொழில் புரிந்தே தத்தம் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும்" என்ற கொள்கை உடையவராதலால் மாணவர்கட்கு

அனுபவ பூர்வமான கல்வியைக் கற்றுக்கொடுத்தார். மாணவ நேயனாகத் திகழ்ந்து பல பயனுள்ள தொழிற் கல்வி புகட்டினார். வகுப்பில் ஓர்நாள் தீக்குச்சி செய்யக் கற்றுக் கொடுத்துக்கொண் டிருந்தபோது ஏற்பட்ட ஒரு சிறு பிசகினால் கலப்புப்பொடி வெடித்து விட்டது. உண்மையில் இவர் தலை தப்பியது! "மருந்து முகத்தில் வெடித்திருந்தால் ஆள் தீர்ந்து போயிருக்கவேண்டும்; இறைவன் நம்மை ஏதோ ஒரு அரிய பணிக்காகத்தான் காப்பாற்றியுள்ளான்" என்பதை ஓர்ந்தார். ஆன்ம சோதனையில் மற்றுமோர் படி!

பின்னர் இவர் வாழ்வில் மாறுதல் ஏற்பட்டது. நாட்டுப் பணி புரிய வெளிவரலானார். கிலாபத் இயக்கத்திலே பங்கெடுத்துக் கொண்டார்! உள்ளூர் மசூதியில் முகம்மதிய மத தத்துவங்களை ஆராய்ந்தார். அதன் விளைவாக நபிநாயகத்தின் வரலாற்றையும், 'குர்-ஆன்' சாரத்தையும் செய்யுளாகச் செய்தார். இங்கு தான், அரசியல் கிளர்ச்சி காரணமாக மகாத்மா காந்தியடிகள் அந்தப் பாதைவழி ரயிலில் சென்றார். மஹாத்மாவின் சத்திய வாழ்க்கையில் சுத்தானந்தர் காதல் கொண்டார். திருச்சியில் மஹாத்மாவைப் பார்த்து வந்தது முதல் காந்திப் பித்தரானார். ஒத்துழையாமைச் சங்கு ஊதியதும், முதலில் கதர் கட்டி-அன்னிய ஆடைகளைக் கொளுத்தி யெறிந்து, அடிமைத் தொழிலையும் விட்டுச் சுதந்தரரானார். அன்று முதலே இவருக்கு ஒற்றர் உண்டு.; அவர்களிடமும் இவர் ஒட்டுறவாகவே பழகினார். காந்தியின் சாந்த வழியே உலகினுக்குச் சிறந்த மருந்தாகும் எனக் கண்டார். கதர் வளர்ச்சி, மது விலக்கு, தீண்டாமை ஒழித்தல் முதலிய 'ஆக்க'ப் பணிகளில் மனமொப்பி ஈடுபட்டார்.

சிறிது காலம் விடுதலை உள்ளத்தோடு காற்றைப் போல, பல திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்றார். கொல்லி மலை, அரப்பளீசுர மலைகளில் தவம் கிடந்தார். எனினும் மனம் பாண்டி நாட்டை விழைந்தது. அதற்கு இசைந் தாற்போல இவரது பழைய பள்ளித்தோழர் ஒருவர் தேவகோட்டையில் தேசீயக் கல்வியூறி ஒன்று கண்டு சுத்தானந்தரை ஆசிரியராக அமர்த்தி, மாதம் ஐம்பது ரூபாய் கொடுத்தார். மொழித்தொண்டு, கதர்த்தொண்டு, சாரணீயம் முதலியன நடைபெற்றன. ஆனால், தேசீயப் பள்ளிக்கூடம் சர்க்கார் பள்ளிக்கூடமாக ஏற்பாடு நடந்தது; உடனே வேலையை விட்டு விட்டார்; இனி எவரிடமும் கூலி வேலை பார்ப்பதில்லை என்று விரதம் பூண்டார்.

இந்த வைராக்ய நிலையில்தான் சேர்மாதேவியில் "குருகுலம்" கண்ட வீரவிளக்கு ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அன்புப் பணிக்கு அழைத்தார். சுத்தானந்தர், தமது பணம், உழைப்பு முதலியன ஈந்து பாடுபட்டார். "பால பாரதி"யில் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். "பாரத சக்தி" மகா காவியத்திற்குப் புதுமெருகு கொடுத்தார். ஐயர்தம் பிரிவு ஆச்ரமப் பிடிப்பை விடச்செய்தது. பின்னர் இவர் வாழ்க்கை பம்பரம் போல வெகு வேக மாகச் சுழன்றது. பலதிறப்பட்ட துறைகளில் ஈடு பட்டார். "சமரஸ போதினி" ஆசிரியர் பீடத்தைச் சிறிது காலம் அலங்கரித்தார். திருவிடைமருதூரில் 'கௌதம நிலயம்' நாட்டினார். "தொழிற் கல்வி" என்ற பத்திரிகை யைப் பதிப்பித்தார். ஜீவ காருண்ய சங்கத்தில் சேர்ந்து 'கொலை மறுத்தல்' பிரசாரஞ் செய்தார். காஞ்சிபுரத் தில் வதிந்த காலத்தில் "இயற்கை"ப் பத்திரிகை நடத் தினார். சிலநாட்கள் சமண மதத்தை ஆராய்ந்தார். மகாவீரர் வரலாற்றை உணர்ந்தார். ஆராய்ச்சிப்

பயனாய் "ஜினானந்தம்" எனும் காவிய நூல் வெளிப் போந்தது.

சின்னாட்கள் சென்றபின், சென்னை சேர்ந்து, தமிழ் தினசரிப் பத்திரிகையாகிய "ஸ்வராஜ்யா"வின் ஆசிரியராக விருந்தார். தீவிர காந்தியத்தில் ஈடுபட்டுப் பல ஆர்வ மிக்க தலையங்கங்களையும் கட்டுரைகளையும் அனல் தெறிக்கத் தீட்டினார். காங்கிரஸ் மகாசபையின் சார்பில் பல ஊர்கட்குச் சென்று, ஆவேசப் பிரசங்கங்கள் புரிந் தார். மூவர்ணக் கொடி பறக்க விட்டு நாட்டுப்பற்றை ஊட்டினார். இப்படிச் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த காலத்திலேதான் தூத்துக்குடியில் "கப்பல் ஓட்டிய தமிழன்" வீர சிதம்பரம் பிள்ளையின் முன்னிலை யில் அரசியல் பிரசங்க மொன்று நிகழ்த்தினார். பேச்சின் நடுவிலே ஒரு "அத்யாத்மக் காட்சி"யைக் கண்டார். காட்சி, மனத்தை அடியொட்ட மாற்றிவிட்டது. உள்ளுணர்வு தோன்றியது. அரசியல் வாழ்வு கசந்தது. சன்மார்க்கப் பிரசாரத்திலே சில நாட்களே ஈடுபட்டார். பிறகு மனம் உள்முகப்பட்டுவிட்டது.

அருணாசலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ரமண மகரிஷியின் திவ்ய தரிசனம் இவரை ஐயந்திரிபற்றவ ராகச் செய்தது. விருபாக்ஷி குகையில் இருந்த மோன வாழ்வு பெரும் பயன் தந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் புதுவை சேர்ந்து அரவிந்தாஸ்ரமம் அடைந்து யோகி அரவிந்தரைக் கண்டார்! அரவிந்தக் காந்தம் சுத்தானந்தத்தைத் தன்னிடம் ஈர்த்துக்கொண்டது. தாம் ஈட்டிய பொருளை யெல்லாம் ஆஸ்ரமத்திற்குக் கொடுத்துவிட்டு, அமைதியாக வாழ் கிறார். 'அரவிந்தத்தேன் அருந்தும் வண்டென' உறை

கிறார். 'தாங்கரும் தவம் மேற்கொண்டு,' மோனத் தமர்ந்து, யோகியாய்ப் பொலிகிறார் சுத்தானந்தர். 'விள்ளரிய சுகானந்த வெள்ளம் தன்னில்' ஆடுகிறார். "துரிய மலைமீதேறிச் சோதிநடம்"கண்டு "சாகாக்கலை" பெற்று பொன் மேனி, காந்த முகம், அருட்பார்வை, முதலியன கொண்டு ஞானச்சிகரத்தில் ஜோதியாகி விளங்குகின்றார்.

யோகியின் வாழ்க்கை கடிகாரத்தைப்போல வரையறை, கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவற்றிற்கு உட்பட்டது. தியானம், மோனம், சமாதி முதலியவற்றை நாடுவது. தனிமையை விரும்புவது! ஆகையால் நாம் யோகியாரின் அந்தரங்க வாழ்வினுக்குள் புகுந்து ஆராய இடமில்லை. "யோக சித்தி"யே சுத்தானந்தர்; பார்த்துக் கொள்ளுங்கள்.

சுத்தானந்தர், தாம் ஓர் "யோகி" என்ற நிலையில் 'கண்மூடி மௌனியாகி' நாட்டிற்கும் தமக்கும் எவ்விதப் பிணைப்பும் கிடையாது என்ற நிலையில் இல்லை! தாம் பிறந்த தமிழ் நாட்டினுக்கும், தமிழ் மொழிக்கும் ஈடிணையற்ற, ஒப்புயர்வற்ற தொண்டாற்றி வருகிறார்.

இவர் புரிகின்ற தமிழ்ப்பணி, புகழ் வார்த்தைக்குள் அடங்காதது. "அன்பர் கேட்டதை அக்கணம் அருளும்" கற்பகத்தருவென 'வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து' நிற்கும் யோகியாருக்கு நன்றியும் வந்தனமும் செலுத்துகின்ற வகையில் "மாரிமாட்டு என்னாற்றும் இவ்வுலகு?" என்ற நிலையிலேதான் நாம் இருக்கிறோம்!

கவி யோகி சுத்தானந்தர் நெடிது நிலவித் தமிழ் நாட்டை வளப்படுத்திக்கொண்டே யிருக்கவேண்டும். அவ்வகைக்கு முருகன் அருள் பாலிக்க வேண்டும்!

வாழ்க யோகி ஸ்ரீ சுத்தானந்தர்! வாழ்க அவர் திரு நாமம்!!

AUM

Message from
H. H. SIVANANDAJI MAHARAJ, ANANDA KUTIR.

H. H. SRI SWAMI SHUDDHANANDA BHARATIJI MAHARAJ, THE GREAT TEACHER & YOGI

Salutations to the Great Teacher and Yogi, Sri Swami Shuddhananda Bharatiji Maharaj. Today (11-5-46) is the birthday of this dynamic Yogi.

Divine are his qualities, sublime are his thoughts, lofty are his ideals; valuable and illuminating are his teachings; spontaneous is his love.

He is an inspired poet, and a powerful writer, both in English and Tamil. His language is poetic. This is a rare attainment indeed. There is a peculiar charm, power in his writings.

As an ideal Yogin, he possesses unclouded experience of the absolute Reality of Brahman and of the identity of his own soul with the supreme Soul. He has attained the perfect spiritual freedom of God. His soul lives in the heights of Divine Peace and Joy. For long

years he did Tapasya and perfected himself in and out in all planes of consciousness. He is a Yogi, Brahma-Jnani and a Bhakta.

Swami Shuddhanandaji is quite original in his methods. Forms and dogmas he cares not. Wisdom flows from his lips as love rains from his looks and simplicity from his demeanour. There is a magnetism about him, a halo around his face and a sincerity in his words which make a lasting impression on those who are fortunate to behold him.

He stands high, ever striving to serve, ever leading aright and ever broadcasting love from his sweet, peaceful abode on the sea-shore of Pondicherry. Run to him now in time. Understand him while he is yet in his physical frame and mix with him before it is too late. Acclaim him, honour him, and adore him, you all who are anxious to realise religion and get nearer to God.

May the Great Swami live long and remain a beacon light to the wayfarers on the path of salvation, is my humble prayer to the Lord.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின்

ஆசிமொழிகள்

மகா குருவே! யோகியே! சுத்தானந்தமே! வணக்கம்.

இன்று (11—5—46) மனவலி படைத்த மாசிலாத் துறவி பிறந்த நன்னாள்!

இவர் தம் குணங்கள் தெய்விகமானவை; சிந்தனைகள் உன்னதமானவை; ஆதர்சங்கள் உயர்ந்தவை; போதனைகள் ஒள்ளிய மாணிக்கங்கள்; இவர் அன்பு சரளமானது.

இவர் ஆவேசக் கவி. ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த சொல்லோவியர். இவரது நடையில் கவிதை காணும். இது அருமைப் பேறு என்பதில் ஐயமில்லை, இவரது எழுத்துக்களில் விசேஷமான கவர்ச்சியும் சக்தியும் தோன்றுகின்றன.

பிரம்மத்தின் உண்மையை, பரிபூரணமான நிலையிலே, தமது மாசுமறுவற்ற அனுபவத்தால் உணர்ந்து, தமது ஆன்மாவும் பரமாத்மாவும் ஒன்றே எனக் கண்ட ஆதர்ச யோகி இவர். பூரணமான தெய்வ சுதந்தரர். இவரது ஆத்மா திவ்யப் பிரசாந்தத்திலும், ஆனந்தத்தின் உச்சியிலும் உறைவது. சைதன்யத்தின் பல நிலைகளில், உள்ளும் புறமுமாகப் பல்லாண்டுகள் தபசு செய்து தம்மை முழுமைப்படுத்திக் கொண்டவர். இவர் ஓர் யோகி, பிரமஞானி, பக்தர்.

சுவாமி சுத்தானந்தர் கைக்கொள்ளும் முறைகள் புதுமையும் தனிமையும் கொண்டவை. இவர் பிற விதிகளையும் மதசித்தாந்தங்களையும் பற்றிக் கவனம் கொள்வதில்லை. இவர் திருவாயினின்று ஞானவெள்ளம் பெருகும். பார்வை அன்பு மழை பொழியும்; நடத்தையில் எளிமை தோன்றும். இவரைச் சூழ்ந்து காந்த சக்தி நிலவும்; முகமண்டலத்தைச் சுற்றி ஜோதி வீசும்; பேச்சிலே உண்மையார்வம் காணும். இவரைக் காணும் பாக்கிய சாலிகளின் உள்ளத்திலே இவை நிரந்தரமாகப் பதிந்து விடும்.

உயர் நிலையில் நிற்கும் இவர், தொண்டாற்றப் பெரிதும் முற்படுகிறார். நம்மை நல்வழியில் கூட்டிச் செல்கிறார். புதுச்சேரிக் கடற்கரையில் இடங்கொண்டுள்ள தமது இனிய சாந்த நிலயத்திலிருந்து அன்பை எங்கும் பரப்புகிறார்.

காலாகாலத்தில் இவரிடம் விரைந்தோடுங்கள். இப் பூதவுடலில் காட்சி கொடுக்கும்போதே தெரிந்து கொள்ளுங்கள். காலந் தாழ்த்தாது அவரைக் கலந்து உறவாடுங்கள். ஆத்மீக உண்மை யுணர்ந்து இறைவனை அணுக விரும்புகின்றவர் அனைவரும், இவரை மதித்து வழிபடுங்கள்.

முக்தி மார்க்கத்தில் செல்லும் வழிப்போக்கருக்கு, சுவாமிஜீ, குன்றின்மேலிட்ட தீபம் போல நின்று பல்லாண்டுகள் நிலவ இறைவன் அருள்புரிக! இதுவே என் பிரார்த்தனை.

ஆனந்தக் குடில்,
ரிஷிகேசம்
16—3—1946.

— சிவானந்தா

தவயோகி வாழ்க !

கன்றும் கனியும், கரும்புங் கனியமுதும்,
தண்டமிழில் கொண்டுதரும் தண்ணளியான்—மண்டுபுகழ்ப்
பண்டிதன்சுத் தானந்த பாரதிசெய் பாவிருந்தை
உண்டறியார் உண்டோ? உரை!

ஆசையின் வேரை அறுத்த அறிஞனையும்
பூசனைக் கேற்றபெரும் புண்ணியனை,—மாசிலா
அன்புருவ மானசுத் தானந்த பாரதியை
மன்புவியில் வாழ்த்துமென் வாய்.

(வேறு)

கொண்டல் வண்ணா! கோபாலா!
கும்பிட்டுன்னை வேண்டுகிறேன் :
அண்டு மன்பால் தமிழன்னைக் (கு)
அல்லும் பகலும் அலுப்பின்றித்
தொண்டு செய்யும் தவயோகி
சுத்தா னந்த பாரதியிம்
மண்ட லத்தில் என்றென்றும்
வாழ வரம்நீ வழங்குவையே !

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சுத்தானந்தர் தமிழ்ப்பணி

புலவர்மணி நா. கனகராஜையர், B. O. L.

“புதுமை புதுமை” என்று புலவர் முழங்கும் காலம் இதுவே. பழமையுளே புகுந்து வரியறியாத, உரு விளங்காத எழுத்துக்களை நிரப்பிய ஏடுகளை அன்போடும் அடக்கத்தோடும் கையில் ஏந்தி, எழுத்து எழுத்தாக எண்ணிப் படித்துப் புலமை சிறக்க நினைத்த காலம் மலையேறிவிட்டது. நேற்று வரை நமக்கே உழைத்த நல்லோரை, இன்று நாம் மறப்பது குற்றமில்லை என்று நினைக்கும் காலம் இது. அறுபது ஆண்டுகள் ஒருவர் உழைத்தாலும், அவர் தலை மறைந்ததும், அவர் பணியில் என்ன குறை விளக்கலாம் என்று ஆராய்ச்சி எழுகின்ற காலம் இது. எழுத்திலே, சொல்லிலே, பொருளிலே, யாப்பிலே, அணியிலே, நடையிலே, பேச்சிலே, எந்த வழி புகுந்தாலும், புரட்சி புகுந்து புரட்டும் காலம் இது. ஆயிர ஆண்டுகளாகப் பல்லாயிர மக்கள் ஒரு படியாக நினைத்து நம்பியிருந்த ஒரு பொருளைப் பற்றி, அறிவின் நுட்பத்தால் தாமே கண்ட நுணுக்கம் என்று ஒருவர் ஒன்று கூற, அதைக்கேட்டு நூறு பேர் தலையசைத்து அவர் தமிழ்த் தொண்டைப் பாராட்டி அவர்க்கு ஒரு பட்டம் சூட்டும் காலம் இது. எல்லாம் புதுமை மயம்; எல்லாம் புரட்சிமயம்; எல்லாம் கிளர்ச்சி மயம்; எல்லாம் எழுச்சி மயம்.

பேச்சை இப்படித்தான் பேச வேண்டும் என்று சொல்ல ஒரு கூட்டம் கிளம்புகிறது. எழுத்தை இப்படித்தான் எழுதவேண்டும் என்று கூற ஒரு கூட்டம்

எழுகின்றது. பாட்டை இப்படித்தான் பாட வேண்டும் என்று கூற ஒரு கூட்டம் புறப்படுகிறது. எதை எடுத்தாலும் 'கலை, கலை' என்று சுவையுணரும் திறமை படைத்த சில தலைவர்கள் வருகின்றார்கள் "இது பாட்டு, இது செய்யுள்; இது கவி; ஆனால் இவைகளிற் கவிதை இல்லை" என்று கூறிப் பழமையைப் புதுமையாக்கும் பலர் தாண்டவம் ஆடுகிறார்கள். இப்படி எப்புறம் பார்த்தாலும் 'வேகம், வேகம்' என்று பெருகி வரும் நாளிலே, ஒருவர் ஓர் ஆசிரமத்திலே அடங்கி மவுன விரதமும் பூண்டு "நானும் தமிழ்ப்பணி செய்கிறேன்" என்று துணிந்து சொல்வாரானால், அவர் மனவுரன் நினைக்கத் தக்கதேயாகும். பிறரைப் புறங்கையால் ஒதுக்கித்தான் முன்னேறவேண்டும் என்றும் தன் கொள்கைக்கு நான்கு பேர் தலையசைக்க வேண்டும் என்றும் கருதும் பெரியோரே மிகுந்துள்ள இந்நாளிலே அரவிந்த ஆசிரமத்தில் அடக்கமாக யோகத்திலிருந்து சுத்தானந்த பாரதியார் செய்து வரும் தமிழ்ப் பணி ஒரு எல்லைக்குள் அடங்காமல், மனிதன் மனம் போலப் பரந்து விரிந்துள்ளது என்பது புதுமையிற் புதுமையே யாகும்.

தமிழ்ப் பணி பல துறை உள்ளது. தமிழ் மொழி பயில்பவர்க்கும் மகாமகோபாத்தியாயப் பட்டம் பொருந்தும் என்ற உண்மையைப் பல்லாண்டுகளின் முன்பு விளக்கிய உ. வே. சாமிநாதையர் அவர்கள், வாழ்நாள் முழுவதும் தாங்கிவந்த திருப்பணி ஒரு வகையாம். அது பழமையைப் போற்றுவது என்ற பெருந்துறையாம். அப்பெரியோரும் பின்னாளிலே புதுமைத் துறையிலே புகுந்து, பழமைக்கும் புதுமைக்கும் பகை இல்லை என்ற உண்மையை நனகு விளக்கினர். தேசபக்த சிகாமணியும் தமிழ்க்கவித் தலைமணியும் ஆகிய சுப்பிரமணிய பாரதியார் தமிழ்ப் பணி மற்றொரு துறையைத் தழுவியதாகும். அவர்

தொட்ட தெல்லாம் பொன்னாயிற்று; கருதியதெல்லாம் கலையாயிற்று. அவர்க்குப் பேச்சும் கலை; எழுத்தும் கலை; பாட்டும் கலை; கதையும் கலை. இறைவன் அவர்க்கு நீண்ட வாழ்நாள் கொடுத்திருந்தால் இனிவரும் நம் நாட்டின் சுதந்தர நிலைக்கு அடிப்படையாகிய தமிழ்ப்பணி பூண்ட பெருமையின் சிகரத்தை அடைந்திருப்பார். அப்பொழுது அவர், வறுமை முதலை ஒரு புறம் பற்ற, உரிமை உரிமை என்று உள்ளம் குமுற, நாளைக்கு என்ன செய்வோம் என்ற நினைவு இன்றி, அரசியற் குழப்பத்தே சிறையினும் கொடிய நிலையிலே இருந்தும் அவர் செய்திருக்கும் தமிழ்ப் பணியே பிறர் எவர்க்கும் வழிகாட்டியாக நிற்கும் பெருமை உள்ளது. இந்நாளிலே பலர் பாடுகின்றார், பேசுகின்றார், எழுதுகின்றார். விரைவிலே பொற்கிழி அவர்களை நாடி வருகின்றது. அச்சுத்தொழில் பத்திரிகைத் தொழில் அநேகரை முன்னணிக்கு அழைக்கும் காட்சியைப் பார்க்கிறோம்.

சுத்தானந்தர் தமிழ்ப்பணி இவற்றுள் எவ்வகையிற் சேர்ந்தது என்பதை நாம் சிறிது ஆராயவேண்டும். தமிழ் மொழி அவர்க்கு உயிர் என்று கூற வேண்டும். அவர் தம்மைத் தமிழ் மயம் ஆக்கியிருக்கிறார். ஒரு மொழிக்கு நற்பணி புரிய விரும்புவோர் பல மொழிகளிலே பயிற்சி பெற்றவராய் இருப்பது சிறப்பாம் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். சுத்தானந்தர், தமிழ்ப் பணியே தவப்பணியாகப் பூண்டிருப்பினும் ஆங்கிலம் பிரஞ்சு என்ற மேலை மொழிகளிலும் ஆரியம் ஹிந்தி முதலிய கீழை மொழிகளிலும் நல்ல பயிற்சி உள்ளவர். இயற்றமிழ் ஒன்றோ? இசைத் தமிழும் நாடகத் தமிழும் வல்லவர். தெலுங்கு மொழியிலே கருநாடக சங்கீதம் வளர்ந்த வகையை நன்கு அறிந்தவர். உணர்ச்சி ததும்பும் உள்ளம் உள்ளவர். அவ்வுணர்ச்சி வெள்ளத்தை எளிய இனிய நடையில்

அமைந்த பாட்டிலும் உரையிலும் வெளியிடும் திறமை உள்ளவர். இன்றளவும் அவர் எழுதிய உரைநடை நூல்கள் பலவாம். பாட்டுக்களோ கணக்கில்லை. **பாரத சக்தி** என்ற பெயரால் ஒரு மகாகாவியமும் இயற்றியிருக்கிறார். அவற்றுள் ஒன்றிரண்டை ஆராய்ந்து அவர் தமிழ்ப் பணியின் திறத்தை அளக்க முயலுவோம்.

சுத்தானந்தர் தமிழ்ப் பற்று

மொழிப்பற்று, நாட்டுப்பற்றோடு இணைந்திருப்பது மிகவும் சிறப்பாம். மகா கவி ரவீந்திரரும், பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயரும் இவ்வழியிலே தலைசிறந்தவர். தாய்மொழிப் பற்று உள்ள சிலர் நாட்டுப் பற்றில் குறைவு பூண்டிருக்கக் காண்கிறோம். நாட்டுப் பற்றில் மிகுந்த சிலர், தம் தாய்மொழியிலே பேசவும் எழுதவும் நாணுகின்ற காட்சிகளையும் காண்கிறோம். சுத்தானந்தர் இருவகைப் பற்றும் இரு விழிகளாக உடையவர். தெய்வ பக்தியே உள்ளமாக உடையவர். ஆகவே இவர் எழுத்துக்களில் நாம் காணும் இன்பக் காட்சிகள் பலவாம்; சில காட்டுவோம்:

"எண்ணுறும் போது தமிழையே எண்ணீர்;
இசைத்துழி தமிழையே யிசைப்பீர்
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர்;
உண்ணுறும் போதும் உறங்கிடும் போதும்,
உயிருளந் துடித்திடும் போதும்
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுவீர்!"

என்ற பாட்டில் அவர் தமிழ்ப்பண்பும், தமிழுள்ளமும், தமிழ் உணர்ச்சியும், தமிழ் உரனும், தமிழ்த் துடிப்பும்

நன்கு விளங்குகின்றன. முக் கரணங்களாலும் தமிழ்ப் பணி புரியாத வாழ்வை, அவர் பூரண வாழ்வு என்று கருதவில்லை என்பது இதனால் தெளிவாகிறது.

தமிழ்த் திருப்பாவை பாடுகின்றார்; மணிவாசகரும் கோதையும் உள்ளத்திற் புகுந்து வெளிவருகின்றனர்.

"முன்னை மொழிக்கெல்லா முன்மொழியை, முத்தமிழை
இன்னை மொழிக்கெல்லா மினிதா மிளந்தமிழைப்
பொன்னைப்போற் போற்றிப் புதுநயங்க ளேற்றிடுவோம்.
அன்னிய மாயத் தழுந்திக் கிடக்காதே;
சொன்னச் சுரங்கங் கரந்திருக்க வுன்மனையில்
இன்னொருவர் வீட்டில் விரந்துண்ணப் போவாயோ?
என்னேயுன் னேழைமைதான்! எம்மொழிக்குந் தாரகமாய்
அன்னைமொழி யோங்க அருட்பணிசெய் யெம்பாவாய்!"

இந்தப் பாட்டில் உள்ள நயங்களை, உள்ளத்தால் உணர வேண்டும்; உரைப்பது எளிதில்லை. சிறந்த புலவர் பாட்டுக்களில் உள்ள பெருமை எல்லாம் இங்கே விளங்குவது காண்கிறோம். உணர்ச்சிகளின் ஊற்றம் உருகிப் பெருகி வருவதையும் காண்கிறோம். தமிழ் மொழிக்கு எத்தனை சிறப்பு இசைத்தாலும் பற்றாது என்பது இப்புலவர் எண்ணம் என்றே தோன்றுகிறது. இறைவனுக்கு மணிவாசகர் இசைத்த பெருமையைத் தமிழ் மொழிக்கு இயற்கையாகப் பொருந்த அமைக்கிறார். இன்று உலகிற் பேசிப் பயிலவழங்கும் மொழிகளில் எல்லாம் தமிழே பழமை மிகுந்தது என்று கூறுவார் பலர் உளர்; அக்கொள்கையை உறுதியாய் உரைக்கின்றார். இன்று வழங்கும் மொழிகளுக்கு உள்ள இளமையிலும் தமிழ்மொழி குறைவற்றது என்று துணிந்து கூறுகின்றார். அன்னிய மாயத்திலே அழுந்தும் மயக்கில் தலை சிறந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி அறிவு புகட்டுகிறார். தமிழ்ச் செல்வத்தை

மனையிலுள்ள சொன்னச் சுரங்கம் என்கிறார். அதை அறியும் அறிவில்லாது ஆங்கிலம் போன்ற பிறமொழிப் பித்துப் பிடித்து அலையும் பேதை மக்களை நோக்கி: "இன்னொருவர் வீட்டில் இரந்துண்ணப் போவாயோ" என்று அழகாக உரைக்கிறார். வீட்டில் பொன்குவியல் புதைந்திருப்பதை அறியாது ஒருவன் பிறரிடம் கையேந்தி நிற்பது எவ்வளவு இழிவு என்பதை உணர்ச்சியோடு உரைக்கிறார். "என்னே உன் ஏழைமை" என்ற பேச்சு என்றைக்கும் கேட்பவர் உள்ளத்தே ஒலிக்கும் திறமை உள்ளது. அன்னை மொழி என்ற பெயரால் தாய்மொழியை அமைத்துக் கொண்டு உலக மொழிகளுக்கெல்லாம் தமிழ் மொழியே அன்னைமொழியாம் என்றதோர் உண்மையையும் கூறி, அது எம்மொழிக்கும் தாரகமாய் ஓங்கப் பணி பூண்க என்று கூறும் அழகை, நினைத்து நினைத்து இன்புற வேண்டும். இன்னும் இத் திருப்பாவையில் உள்ள அழகெல்லாம எடுத்துரைக்க விரிந்த இடம் அமைத்துக் கொண்டால் இப் புலவரது மற்றையத் தமிழ்ப்பணிகளையும் சுவைத்து இன்புற இடம் சுருங்குமே என்று கருதி இதனை இவ்வளவிற் சுருக்குகின்றோம்.

தமிழ் மகளின் உருவ வமைப்பை மனத்திலே பாவித்து அவ்வுருவத்துக் கேற்ற அலங்காரம் செய்கின்றார். ஆபரணம் எல்லாம் தமிழ்ப் பெருங் காவியங்களாகவே இருப்பதை இளம் பிள்ளைகளும் எளிதில் அறியலாம்.

"காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிருந் திருவடியும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க."

ஒவ்வொரு காவியமும் தன் பெயருக்கேற்ற ஆபரணமாக மாறியிருக்கும் அழகு, நினைத்து இன்புறத் தக்கது. திருக்குறள் தமிழரசிக்குச் செங்கோலாக அமைந்த அழகை அயலாரும் வியவாதிருக்க இயலாது.

கம்பன் பெருமையை உள்ளமார உணர்ந்து உருகி உருகி உரைக்கின்றார். கவிதை அழகின் உருவம் என்ற உண்மை இங்கு நன்கு விளங்குகின்றது.

"எல்லையில் அழகை யெல்லாம்இனிதுறமுகந்து நல்ல
சொல்லமு துடனே யாழ்ந்த பொருளணி சுவையிற் கூட்டிக்
கல்வியிற் பெரியகம்பன் கற்பகக் கவிதைதந்து
பல்கலை யுலகு போற்றும் பரிதியாய் விளங்கினானே"

இதன் நயம் எளிதில் விளங்கும்.

பாரதியார் பாட்டின் பெருமையை நன்கு அறிந்து பண்புபட அழகாகப் புகழ்ந்து உரைக்கின்றார்.

"மங்கிக் கிடந்த தமிழுக்கே—மறு
மலர்ச்சி வேகம் அளித்தனன்
பொங்குக பாரதியின் புகழ்—அவன்
போற்றிய செந்தமிழ் வாழ்கவே."

"எல்லாரும் ஓர்குலமே என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினான்-சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி; வீரத்
திருவில் வெடித்தெழுந்த தீ"

'சொல்லின் அருவி' என்ற பட்டம் சுப்பிரமணிய பாரதிக்கு மிகவும் பொருத்தம் என்பதை அவர் வாக்குகளைப்பயின்றவரே அறிவர். அதை அறிந்து உரைத்த பெருமை இங்கு நினைக்கத் தக்கது.

சுத்தானந்தர் நாட்டுப் பற்று

இப் புலவர், நாட்டுப் பற்றுல் உள்ள முருகி எழும் நாட்டுப் பணியே தவப் பணி என்று கருதும் நல்லோராவர். இத் துறையிலே இவர் பாடிய பாட்டுக்கள் பலவாம். ஒன்றிரண்டு சுவைத்துப் பார்ப்போம்.

"என்று விடுதலை என்று விடுதலை
என்றுளம் ஏங்குதம்மா—அந்த
ஒன்று கிடைத்தாலே நன்றினி வாழுவோம்
உண்மையி துண்மை யம்மா."
"பொன்னை யிழந்து புவியை இழந்து
பொறுமை யிழந்து விட்டோம்—தாயே
அன்ன விசாரம் அதுவே விசாரமாய்
அன்னியர் வாசல் நின்றோம்."
"இன்று மனிதர் படுந் துயர் எண்ணிடின்
என்மனம் பொங்குதம்மா—அங்கே
கொன்று குவிக்குங் கொடிய பகாசுரர்
கொட்ட மொடுக் கிடுவாய்

இன்று உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை இப்பாட்டுக்கள் விளக்கமாகச் சித்திரம் செய்து காட்டுவதும், நம் நாடு உள்ள நிலைமை அன்னவிசாரத்தால் மிகவும் கேடாவது இங்கு விளக்கப்பட்டதும் எளிதில் அறியத் தகும்.

"பாரத தேசமென்றால் —இன்பப்
பரவசம் பிறக்குதென் அறிவினிலே
வீரர்கள் காத்தநிலம்—ஞான
வித்தகச் சித்தர்கள் விளங்குநிலம்
தீரர்கள் ஆண்டநிலம்—நல்ல
செல்வமும் கல்வியும் செழித்தநிலம்
பாரெல்லாம் வணங்குநிலம்—தெய்வ
பக்தர்கள் பரமனைப் பாடும்நிலம்"

"கலையழகு குலுங்குவதும் எங்கள் வள நாடே
கற்பொளியால் விளங்குவதும் எங்கள் வள நாடே
கொலைமறுத்த சைவர்நிலம் எங்கள் வள நாடே
கொடைமிகுந்த செல்வர்நிலம் எங்கள் வள நாடே"

"இட்டருந்தும் வண்மையுள்ள தெங்கள் வள நாடே
இகபரத்தின் சுகந்தருவ தெங்கள் வள நாடே
கட்டறுந்தே சுதந்தரமாய் வாழ்க வெங்கள் நாடே
கடவுளருள் காக்குமெங்கள் கற்பக நன்னாடே"

தேசபக்தியை விளக்குவதே இப் பாட்டுக்களின் நோக்கமாயிருந்தும் நம் நாட்டின் உண்மையான பெருமையை உள்ளம் உருக உரைப்பது நினைக்கத் தகும்.

பாரததேவியின் திருவுருவத்தை மனக்கண்ணால் உணர்ந்து அழகும் நலமும் விளங்க உரைக்கின்றார்.

"வேத வாணியும் பாரத தேவி
வீர துர்க்கையும் பாரத தேவி
மாத வக்கனல் பாரத தேவி
மங்க லத்திரு பாரத தேவி"

"வீரர் வீரமும் பாரத தேவி
விஜயலக்ஷ்மியும் பாரத தேவி
பாரின் அன்னையும் பாரத தேவி
பாது காவலும் பாரத தேவி"

"கோடி கோடிச் சிரங்கள் வணங்கக்
கோடி கோடிக் கரந்தொழு தேத்தக்
கோடி தேவர்கள் ஆசிகள் கூறக்
கொலு விருப்பவள் பாரத தேவி!"

பங்கிம் சந்திரர் கீதம் போலவே இது சிறப்புப்பெறும் என்பது பாடுபவர்க்கு விளங்காதிராது.

நாட்டு வாழ்த்து என்று பாடிய பாட்டுக்களும் இக் கருத்தையே விளக்குகின்றன.

"வண்மை மிகுந்த நிலம்—அருள்
வாக்கு மலர்ந்த நிலம்
பெண்மையும் ஆண்மையும் கண்கருத் தொன்றிய
பேரின்பக் காதல் நிலம்"

"ஆனந்த வேத நிலம்—மலை
அருவிகள் பாடு நிலம்
தேன்மொழி சோலையில் ஞானசங் கீர்த்தனம்
தென்றலைக் கொஞ்சு நிலம்"

கொடிப் பாட்டு பலவாறு பாடியிருக்கிறார். அப்பாட்டுக்களில் ஒன்றிரண்டு பார்க்கத் தகும்.

ஒற்றுமை யாய்ப் பணிவோம்—தாயின்
ஓங்கும் ஜயக் கொடியை
வெற்றிகள் கூறிடுவோம்—சுற்றி
வீர நடம் புரிவோம்.

"எங்கள் மனவுறுதி—என்றும்
இமய மாமுடியில்
தங்கும் ஜயக் கொடியை—வீர
சக்திப் படல மென்போம்"

"இந்து முகம்மதியர்—கிறிஸ்துவர்
என்கிற பேத மில்லை
இந்தப் பொதுக் கொடிக்கீழ்—எல்லாரும்
இனிது வாழ்ந்திடுவோம்"

நாட்டுக்கு வேண்டுவது ஒற்றுமை யுணர்ச்சியே என்பது இங்கு நன்கு விளங்குகிறது.

சுத்தானந்தர் பக்தி மார்க்கம்

சுத்தானந்தர் ரமணாசிரமத்திலே பயின்று அரவிந்த ஆசிரமத்திலே பழுத்த யோக சித்தி உள்ளவர். அவர் மனம் 'ஓம் சுத்த சக்தி' என்று அடிக்கடி முழங்குவதுண்டு.

மூர்த்தி பேதத்தை அவர் மனம் அறிவதில்லை. மதங்கள் எல்லாம் ஒன்றையே சொல்லும் என்ற உண்மையை அவர் மனம் தெள்ளத் தெளிய உணர்கிறது. அவர் பக்தி பரவசத்தாற் பாடும் பாடல்களில் இன்ன தெய்வந்தான் என்று குறிக்கப்பெறாத பரம்பொருளே துதிக்கப் பெறுகிறது. குறள் உருவம் உள்ள மூலமும் உரையுமாக அவர் செய்த 'யோக சித்தி'யும் அவர் மனப்பண்பை நன்கு விளக்குகிறது!

அவர் வாக்கு சிவன் துதியைச் செம்மையாகச் சொல்லும். அரி துதியும் அழகாய் உரைக்கும். கிறிஸ்தவர் முஸல்மான்கள் முதலிய பிற மதத்தார் துதிகளையும் அவர் நெறி பிழையாமற் சொல்லும். இது முன்னாளில் எப் புலவரிடமும் காணப்பெறாத பெருமையாம்.

"உன்னடி நிழலில் உன்னருளாலே
உயிர்க்கின்றோம் உன்னடி யார்கள்;
உன்னருள் ஆட்சி யுலகெலாம் பரவ,
ஊக்கி யெம் வாழ்வினை நடத்தாய்;
அன்னையே, யெங்கள் அப்பனே, சச்சி
தானந்த குருநட ராஜா,
மன்னுசீர் அன்பு நிலயத்தில் விளங்கும்
மங்கல ஜோதியே சரணம்!"

இத் துதி நடராஜ மூர்த்தியைப் பரம்பொருளாகப் பாவித்துப் பாடியது. இப் புலவர் பாடிய "நடராஜ உபாசனை"யில் மந்திரம் என்ற ஒரு பகுதி உண்டு. அங்கு அரிய சில உண்மைகள் அகப்படுகின்றன. அவை வருமாறு:

" உலகெலாங் கோயில் உடையாய் போற்றி,
உயிரெலாம் உடலாய் உடுத்தாய் போற்றி,
ஒப்புயர் வில்லா ஒருவனே போற்றி,
பன்மையாய் விளங்கும் ஒருமையே போற்றி,

எப்பொரு ளுக்கும் இறைவா போற்றி,
எம்மதத் திற்கும் இசைவாய் போற்றி!
சைவம், வைணவம், சாக்தம், கிறிஸ்தவம்,
இஸ்லாம் ஆகிய எம்மதத் திற்கும்
சம்மத மான சாட்சியே போற்றி!
அரன்மால் அயன்குகன் அல்லா பிதாவெனப்
பலமதம் போற்றும் பரமா வணக்கம்!
அறிவதெல் லாமுன் அருளின் அறிவே''

முன்னைப் புலவர் எவரும் நினையாத வழியிலே அம்பல வாணன் அன்புரு விளக்கிய புலவரைத் தமிழுலகம் நன்கு அறிய வேண்டும்.

மகாசக்தியை மனத்தில் நினைந்து பலவாறு துதிக்கிறார். பாரததேவியை, மகா சக்தியென்றே பாடிய பாட்டுக்களும் பல உண்டு. ஒன்றிரண்டை இங்கு பார்ப்போம்:

''அத்தனையு முத்தாய், அரதனமாய், பொன்மணியாய்
வைத்து வடிவமைத்து வான முடிசூடி,
எங்குந்தா னாகி, யிடமெல்லாந் தன்னெழிலாய்க்
கங்குல்பக லில்லாத காட்சியொன்று கண்ணுறக்
கண்டேனத் தாரகத்தைக் காதல் விழிகளினால்!
வெண்டா மரையடியில் வீழ்ந்தேனோம் சக்தியென்றே!
யாதா லுவமிப்பேன் யான்கண்ட பேரழகை?
மாதா வுடனேதோ மழலைமொழி பேசிநின்றேன்!
மின்மினியைக் காட்டியிது விண்விளக்க மென்பதுவோ?
புன்றரையின் சித்திரத்தாற் பூரணத்தைக் காட்டுவதோ?
கையா லிறைத்துக் கடலாழங் கண்டிடவோ?
வையம் படைத்தவனை வாயா லளந்திடவோ?''

என்ன உருக்கம்! என்ன பொருளாழம்! என்ன உணர்ச்சி! நம் நாட்டிற்கே உரிய இப் பக்தித் துறையும் இப்புலவர்க்கு இயல்பாகவே அமைந்துள்ளது என்பது இதனால் நன்கு புலப்படுகின்றது.

"காவியமுங் கூத்துங் கனிமதுர கீதமுடன்
ஓவியமும் போன்ற உயர்ந்த கலைவளமும்
சூழ விளங்குகின்றாள் சொற்கரிய அற்புதமாய்
ஆழி முரசதிரும் அழகுமணிக் கோயிலிலே!"

மகாசக்தி என்ற தேவதை யார் என்பதை இக் கவிதை இனிது விளக்குகின்றது.

உலகம் இக் காலத்தில் உள்ள நிலைமையைச் சொல்லி இறைவியை வணங்கி உலக நலம் வேண்டுகின்றார். அறிவு படைத்த மக்கள் இறைவியை வேண்டத் தக்கது இதுவே என்பது இக் கவிதையைப் பார்க்கும்போது எளிது விளங்கும்.

"விண்ணேறிக் குண்டுகளை வீசுவார் கூசாமல்;
மண்ணெல்லாம் புண்ணீராய், மானிடர் பிணக்காடாய்
வையஞ் சுடுகாடாய், வாழ்வெல்லாம் சாங்குரலாய்ச்
செய்து மகிழ்ந்து செயபே ரிகையடித்துக்
கொண்டாட்டத் தோடு கொலுவிருப்பார் மன்னர்; அதைக்
கண்டு தருமங் கலங்கி நிற்கும் அப்பாலே!"
"இப்படியும் காலம் இருக்குமா தாயே! யென்று
அப்படியே நம்பித்தேன்........."
"கண்டேன் புதுயுகத்தைக் காதல் விழிகளினால்!
ஆணுள்ளம் பெண்ணுள்ளம் ஆண்டவனும் சக்தியுமே!
மாணுலக மெல்லாம் வளர்தெய்வ மந்திரமே!
தாரணியின் வாழ்வெல்லாம் சக்திசிவ லீலைகளே!
காரணமுங் காரியமுங் காட்சித் திருவருளே!
சாதி மதபேதத் தடங்காணேன்; எல்லாரும்
ஆதிப் பரம்பொருளின் அன்புக் குழந்தைகளே!"

இத்தகைய மனோதர்மம் மதவாதிகள் உள்ளத்தில் நுழையுமானால் உலகம் சுவர்க்கம் ஆய்விடும். என் தெய்வம் பெரிது; உன் தெய்வம் சிறிது என்ற பேச்சும், என்

வழி சிறந்தது; உன் வழி தாழ்ந்தது என்ற கூச்சலும் உள்ளவரையில் உலகம் நலம் பெற வழியில்லை. இவ்வுண்மையை உணர்த்த வல்லவரே புலவராவர். அப்புலவரினத்துள் சுத்தானந்தர் தலைமை தாங்குகின்றார்.

அன்னையின் அருள் நிலையை அழகுற அமைத்த பாட்டுக்கள் பல பாடியுள்ளார்.

“ வானம் உனது ஞான விரிவாம்”

* * *

அருவி மாமழை அருளின் பெருக்காம்

* * *

உயிரெலாம் உன்றன் ஓயா வுயிர்ப்பாம்
உலகமுன் ஆடல் ஓங்கும் கோயிலாம்

* * *

போரெலாம் உனது பொங்குஞ் சினமாம்

* * *

நீயே முக்தி, நீயே சித்தி

* * *

அன்பருக் கன்பும் அரக்கருக் கழிவும்
தூயருக் கொளியும் துரியருக் கின்பமும்
உதவி யருளும் யோகாம் பிகைநீ!

* * *

“ சிந்தையி லூறுந் தேனே பாலே”,

இங்ஙனம் உள்ள முருகிப் பரவிய பாடல்கள் பலவாம். இசைத் தமிழ்த் துறையிலே இப் புலவர் பாடிய துதிகள் எண்ணிலவாம். அவற்றை எல்லாம் ஆராய்ந்தால் இவர் மனத்தின் தூய்மையும் பக்தியின் திண்மையும் நன்கு விளங்கும்.

24377

பெரியோரைப் போற்றும் பெருமை

யானே பெரியவன் என்று இறுமாந்து திரியவே எவரும் நினைக்கும் உலகத்தில், அறிவின் செல்வமும் கலையின் செல்வமும் நிரம்பிய ஒரு புலவர் பிற பெரியோரைத் தம் உள்ளம் உருகிப் பாராட்டும் அழகும் நினைக்கத்தக்கது. சுத்தானந்தர் ஆத்ம சாந்தி நிரம்பிய யோக சாதனம் பெற்றவராதலால் எங்கெங்கு உண்மைப் பெருமை உண்டு என்பதை அறிந்தே பாராட்டுகிறார்.

"எழுந்தது சுதந்தர பாரத சூரியன்
எல்லாரும் இன்புறவே"

என்பது பல்லவி. இதற்கு அனுகுணமாகச் சரணங்களில் வரும் வாசகங்களில் ஒன்றிரண்டு பார்ப்போம்.

பரம ஹம்ஸவேதம் பரவி யொலித்தது;
பாரெல்லாம் வேதாந்த சிங்கம் கர்ச்சித்தது
வரம் பெற்ற அருட்சோதி வாசகம் பிறந்தது
வான்மணம் வீசி யரவிந்தம் மலர்ந்தது."

இந்தச் சரணத்தில் ஸ்ரீ. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஸமரஸ ஸித்தாந்தத்துக்கு இயற்றிய பரம உபகாரமும், விவேகானந்தர் உலக மெங்கும் வேதாந்த கர்ஜனை செய்த மேதகவும், இராமலிங்க சுவாமிகள் சமரச சுத்த சன்மார்க்கம் பாடிய அழகும், ஸ்ரீ அரவிந்த யோகியார் உலகம் கொள்ளக் கிருஷ்ண தத்வம் விளக்கிய வியப்பும் நன்கு விளக்கப்பட்டன. இதனால் இப்புலவர் மனம் ஸமரஸத்தில் லயித்துள்ளது என்பது நன்கு விளங்கும்.

தாகூர் மகாகவியைப் பாராட்டும் பாட்டு மிகவும் சுவையுள்ளது.

"ஜய ரவீந்திர, வரக விந்திர
தாகூர் வாணி வாழ்கவே!
பயமில் லாத சுதந்த ரத்தில்,
பரமா னந்தப் பண்கள் பொழிந்த (ஜய)

அருளும், பொருளும், அழகும், அன்பும்
அமைந்த ஜீவ வாணி;
கருடன் போலக் ககன வெளியில்
களித்துப் பறக்கும் கடவுள் வாணி" (ஜய)

திலகரைப் பற்றி அழகுறப் பாடுகிறார்.

"ஆற்றலிற் சிறந்தனை, அறிவினிற் சிறந்தனை;
நோற்றனை சுதேசம் வாழும் நோன்மைக் கர்ம வீரனே!"

* * *

"உண்மைக்கே யுயிர்த்தனை உலாவுங் கீதை யாயினை
எண்ண வெண்ண வுன்னை நெஞ்சில்
ஏறுந் தேசா வேசமே!"

'உலாவுங் கீதை யாயினை' என்பது திலகருக்கு மிகவும் பொருத்தம்.

ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிப் பாடும் பாடலிலே ஒருதனிச் சிறப்பு உள்ளது.

"வாழ்க அரவிந்தன்! வாழ்க பராசக்தி
வல்லபன் வாழியவே!
வாழ்க மஹாயோகி! வாழ்க மஹாஜோதி
வாழ்க ஜகத்குருவே!"

அரவிந்த யோகம் மகா யோகம் என்று அழைக்கப் பெறும். அதைப் பற்றி இப்புலவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரெஞ்சிலும் விளக்கமுற எழுதியுள்ளார். 'பராசக்தி வல்லபன்' என்பது சிந்திக்கத் தக்கது. மகாஜோதி என்றும் ஜகத் குரு என்றும் உரைப்பதற்குத் தக்க காரணங்களைத் தம் அனுபவத்தால் இப்புலவர் அறிந்தே உரைக்கின்றார்.

"மானவஜாதி யிங்கே அமரநிலைபெற
வாழும் வகையளித்தான்
போனது கலியுகம், பூத்தது புதுயுகம்
பூரணன் வாழியவே!"

மனித வருக்கம் இம்மையில் அமரத்துவம் பெறத்தக்க வழியை அரவிந்த யோகி தம் யோகத்தால் அமைப்பதாக உரைக்கின்றார். இதுவும் இப்புலவர் அனுபவமே.

ஸ்ரீ வ. வெ. சு. ஐயரைப் பற்றிய பாடல், கல்லையும் உருக்கும் கனிவு உள்ளது.

"முனியைப் போன்ற முகப்பொலி வாளர்
முரளி போன்ற குரற்கனி வாளர்
கனியைப் போன்ற கவின்மொழி யாளர்
கலைசி றந்த கதிர்விழி யாளர்"

இந்தப் பாட்டு ஐயரை அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் அவர் உருவச் சிற்பம் விளக்கும் கலைநயம் பொருந்தி இருக்கிறது.

"திருக் குறளைச் செகத்தினுக் கீந்தார்,
சிந்தை செய்கைசு தேசத்திற் கீந்தார்,
செருக்கி லாத தலைமையும் சான்றோர்
திலகர் காந்தி விநாயகர் போன்றோர்"

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்த வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் பாடியது அறிந்தும், வள்ளுவர் வாக்கின் வளத்தைப் பிறரைக் காட்டிலும் சிறப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற்கு உதவிய ஐயர் பெருமை இங்கு புகழப்படுகிறது.

மகாத்மா காந்தியைப் பற்றிய பாட்டு, குழந்தைகள் மனத்திலும் உணர்ச்சியை எழுப்ப வல்லது.

"தேசத்தி லேபெரிய தாத்தா—நாங்கள்
தெய்வம் எனக் கொண்டாடும் தாத்தா
நேசத்தி லேபெரிய தாத்தா—கொண்ட
நினைப்பைச் செய்து முடிக்குந் தாத்தா."

இதனினும் உறுதியும் அழகும் தோன்ற மகாத்மா காந்தியைப் பற்றி எளிய இனிய நடையிலே பாட முடியாது என்றே துணிந்து கூறலாம்.

"ஏழைக் கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
ஏக்கத்தை நீக்குகின்ற தாத்தா
கோழைத் தனம்விடுத்து நாங்கள்—சிங்கக்
கூட்டம்போல் எழச் செய்த தாத்தா."

காந்தியத்தின் உண்மை இங்கு நன்கு விளங்குகிறது.

"பாழுஞ் சிறையிலடை பட்டும்—கடும்
பட்டினி யிருந்துடலங் கெட்டும்—நாங்கள்
வாழும் விடுதலைக்கே நோற்ற— தூய
மாதவ ராஜரெங்கள் தாத்தா."

காந்தி மகான் இப் பாட்டின் உருவமோ, இப் பாட்டே காந்தியின் உருவமோ என்று நினைக்கும்படி இருக்கிறது.

இவ்வளவில் இப்பகுதியை முடிக்கிறோம். பெரியார் பெருமையை இப் புலவர் உரைநடையாலும் ஒரு பெரு நூல் எழுதி விளக்கி யுள்ளார். வள்ளுவனார் கம்பர் முதலிய பண்டைப் புலவரையும், தாகூர், பாரதி போன்ற இந்நாட் புலவரையும், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், இராமலிங்க சுவாமிகள், விவேகானந்தர், தயானந்தர் முதலிய வேதாந்திகளையும், லாலாஜி, திலகர் போன்ற தேச பக்தர்களையும், காந்தியைப் போன்ற மகான்களையும் பேரினத்திலே இணைத்து இனிய கவிதையாற் புகழ்ந்து புகழ்ந்து தமிழ்மலர் அர்ச்சனை செய்துள்ள சுத்தானந்தர்

மனப் பண்பு, நல்லோர் எவரும் நினைந்து பின்பற்றத் தக்கதேயாம். பெரியார் பெருமையை உள்ளவாறு அறியும் உள்ளம், இயற்கையிலே பெருமையில் மூழ்கித் தன்னை மறந்திருக்க வேண்டும்.

இப் புலவர் பாடிய பாட்டுக்கள் எத்தனையோ வகை உண்டு. புத்தக உருவத்தில் வந்தன பல. சங்கங்கள் கேட்டுப் பெற்றன பல. இன்னும் அச்சேருது கையெழுத்துருவில் இருப்பன பல. இவை எல்லாம் பலவகை உணர்ச்சிகளோடு எழுதப்பெற்றிருப்பினும் ஒவ்வொன்றிலும் கவி நயம் அமைந்திருப்பது பொது நோக்காளர்களுக்கு விளங்காதிராது. பக்தியை விளக்க எழுந்த கீர்த்தனங்களும் நாட்டியத்துக்கு உதவுமாறு எழுந்த கீர்த்தனங்களும் தனிச்சுவை உள்ளன.

இவை எல்லாம் ஒருபுறம் இமய மலைபோற் குவிய, மற்றொரு புறத்தே "பாரத சக்தி மகா காவியம்" மேரு மலை போல எழுகின்றது. இக் காவியம் ஆதியில் இருந்த உருவம் ஒன்று. இப்பொழுது வளர்ந்து பெருகித் தழைத்துக் கிளைத்துச் செழித்திருக்கும் உருவம் வேறு. இதன்கண் சில பகுதிகளில் உள்ள சுவைகள் சில இவ்வாராய்ச்சியிலே எடுத்துக்காட்டப் படும்.

பாரத சக்தியை உலகம் எல்லாம் பயில வேண்டும் என்பதே இவ்வாசிரியர் கருத்து என்பது நூற் பயன் உரைக்கும் கவியால் விளங்குகிறது. இப்பொழுது ஒரு பகுதியே வெளிவந்துள்ளது. மற்றப் பகுதிகளும் விரைவில் வெளிவரும். அப்பொழுது தமிழுலகம் இதன் முழுச் சுவையும் அறியலாம். சில்லறைக் கவிகளும் சரடு விருத்தங்களும் பாடுதற்கு வேண்டிய புலமை வேறு; மகா காவியம் பாடுதற்கு வேண்டிய புலமை வேறு. தமிழ் வழங்குந் துறை யெல்லாம், தம் கலைத்திறம் விளக்கிய

இப் புலவர் வித்தார கவியாக விளங்கும் பெருமையை இங்கே பார்ப்போம். இக் காவியத்தின் கடவுள் வாழ்த்திலே மகாசக்தி துதி வருகிறது.

"உன்னை யோதி யுருகுவ தல்லது,
பின்னை யேதும் அறிகிலன் பிள்ளையான்;
அன்னை யேயமு தேயென தாவியை,
மன்னு மங்கல மாகவி யாக்குவாய்!"

என் உயிரையே கவிதையாக்குவாய் என்ற வேண்டுகோள் அன்னையை நோக்கிப் பிள்ளை வேண்டுவதாக அமைந்திருப்பது எத்துணைப் பொருத்தமானது!

"கடலைக் காற்றைக் கதிர்வளர் வானத்தை,
இடம கன்ற புவியை, யியற்கையை,
உடலை, யென்னுள் உயிரைப் படைத்தவுன்
வடிவைப் பாட வரமருள் சக்தியே!"

மகாசக்தி தத்துவம் இங்கு எளிதில் விளங்கும். பாரத சக்தி என்பது இன்னதுதான் என்று தெளிவுபட உரைக்கிறார். அதுவே இக் காவியத்தின் உள்ளுறையாம். ஆதலின் நன்கு சிந்திக்கத் தக்கது.

"வீரர் வீறது; வித்தகர் சித்தது;
தீரர் யோகத் திறனது; மானிடர்
பூர ணம்பெறும் புண்ணியத் தீயது;
தார கம்அது பாரத சக்தியே!"

ஆகவே இக் காவியத்தில் வீரரின் வீரமும், ஞானியர் ஞானமும், யோகியர் யோக சித்தியும், உத்தம மக்கள் பூரண வாழ்வும், புண்ணிய சரித்திரம் பிறவும் இடையிடையே கலந்து வர ஒரு பூரண காதை பேசப்படும் என்பது தெளிவாகிறது.

அருட்குலம் என்ற ஒரு நற்குலத்தையும் அதற்கு மாருக மருட்குலத்தையும் காவியப் படைப்பாகப் படைக்கிருர். அருட் குலத்தின் குண மாண்புகள் சுருக்கமாக உரைக்கப்படுகின்றன.

"இனிய வாய்மையும், வீரமும், எழில்பெறுந் திருவும்,
முனிவர் போற்றிடு ஞானமு, முதற்குண வளமும்,
புனித வாழ்க்கையும், புலமையும் பொதுநலப் பணியும்,
மனித ராகிய தேவரின் மாண்பிவை யாமே!"

இவ் வருட் குலத்திலே பலர் பெயர் வருகின்றது. ஒன்ருே இரண்டோ நினைத்துப் பார்ப்போம்.

கண்ணன்

"ஊதினுன் குழல் உயிர்களின் உளத்தினைக் கவர்ந்தான்;
கோதி லார்தமைக் காத்தனன்; கொடியரைக் குமைத்தான்;
ஆதி பாரத மாக்கினுன்; அறம்வளர் கண்ணன்,
ஓதினுன் அருட் கீதையை உலகமின் புறவே!"

புத்த பகவான்

"பேதைச் செல்வத்தைப் பிணியெனத் துறந்து மெய்த்தவ
மேதைச் செல்வத்தை மேதினிக் கினிதுறத் தந்தான், [மார்
போதிச் செல்வனும் புத்தனைச், சித்தனை, ஞானச்
சோதிச் செல்வனைத் தொழுதவர் பதங்களைத் தொழுவாம்."

இவ்வண்ணமே பலரைப் புகழ்ந்து இக்குலத்திலே சத்தியன் என்ற ஒரு பெரியோன் பிறந்தான் என்று கதை தொடங்குகின்ருர். அவன் நாட்டைப் புண்ணிய பூமி என்றும் நகரைச் சித்தி நகர் என்றும் பொருத்தமாக உரைக்கின்ருர். இந்நாடு பாரத தேசமே என்பதும், நகரம் இந் நாட்டில் உள்ள புண்ணிய நகருள் எதுவும் ஆகலாம் என்பதும் ஊகிப்பார்க்கு விளங்கா திராது.

பெருங் காவியத்தில் நாட்டுப் படலம் நகரப் படலம் அமைய வேண்டும் என்ற இலக்கண முறை பிழையாமல் இவை நன்கு அமைந்துள்ளன. புண்ணிய பூமியின் இயல்பை மனோதர்மத்தால் அழகாக வகுத்துக்கொண்டு பல படியாக உரைக்கின்றார்.

"வேதமும் வாழ்வும் ஒன்றும்; வீரமும் அறமும் ஒன்றும்;
காதலும் கற்பும் ஒன்றும்; கண்ணுடன் கருணை யொன்றும்;
போதமும் குணமும் ஒன்றும்; புதுமையும் பண்டும் ஒன்றும்;
நீதியும் அருளும் ஒன்றும் நெறியினிற் பெரிய நாடே!"

ஒரு நாடு இங்ஙனம் அமைவது அபூர்வமே என்பதும் கவிகள் கற்பனையுலகில் இந்நாடு என்றும் உள்ளது என்பதும் உண்மை. இப்புலவர் கற்பனை ஞான உலகைப் படைக்க முயல்வதால் இது மிகவும் பொருத்தமே.

சித்தி நகரத்தின் சிறப்பையும் இவ்வண்ணமே உரைக்கிறார்.

"கவினெலாந் திரண்டிதன் காட்சி யானதோ?
தவமெலாந் திரண்டிதன் தரும மானதோ?
சிவமெலாந் திரண்டிதன் செல்வ மானதோ?
புவியெலாந் திரண்டிதன் புகழைப் போற்றுமால்!"

உள்ளம் உருக்கும் உணர்ச்சி கொப்புளிக்கிறது.

இந்த நகரில் வாழும் ஆடவர் பெண்டிர் இன்ன குண முடையவர் என்று கூறுகின்றார்.

ஆடவர்

"திண்ணிய தோளினர்; சித்தம் வென்றவர்;
புண்ணிய வினையினர்; புன்மை யற்றவர்;
மண்ணியில் வாழ்வினு மகிழ்வர்; சாதனம்
பண்ணிய யோகத்தின் பயனு மெய்துவார்."

பெண்டிர்

"நித்தியம் கல்வியும், ஆன்ம நேயமும் ;
பத்தியுங், காதலும், பணிவும் போற்றுவார் ;
சத்தியின் கனலெனத் தருமந் தாங்குவார் ;
பத்தினிப் பெண்டிரின் பாதம் போற்றுவோம் !"

ஆண்களும் பெண்களும் இங்கிலேயில் வாழும் நகரிலே அறம் செழிப்பதற் குறை யுண்டோ ?

நகர மக்களின் மனப்பண்பு மிகவும் சிறந்தது என்று நயம்பட உரைக்கிறார்.

"விலகறு மெய்வழி விரும்பிச் செல்லுவார்
'வில'கென யாரையும் வெம்மை செய்திடார்.
உலகுயர் ஆலயம் ; உயிரின் கூட்டமே
இலகுயர் கடவுளென் றிதயத் தெண்ணுவார்."

சில மக்களை விலகுக என்று கூறி ஒதுக்கும் பழக்கத்தை இங்கு நவீன நாகரீக முறைக்கு ஏற்ப அழகுறக் கண்டிக்கிறார். இனிவரும் வாழ்வு இதுவே என்பது இன்றே விளங்குகின்றது. இந் நகரின் அரசன் இதற்குத் தக்க வண்ணம் அமைய வேண்டும் என்பது. அவன் இயல்பை நகருக் கேற்ப உரைக்கின்றார்.

"கல்வியிற் பெரியோன் ; பொங்கும்
கருணையில் வானம் போன்றான் ;
செல்வியின் இருக்கை யாவான் ;
சீர்த்தியில் இராமன் போன்றான் !
அல்லலிற் கைகொ டுக்கும்
அன்பினில் அன்னை போன்றான் ;
பல்லுயிர் உலகம் வாழ
விளங்கிடும் பரிதி யன்னான் !"

இம்மன்னன் உயிர் வாழ விளங்குகின்ற பரிதி போன்றவன் என்பதிலே பல உண்மைகள் அடங்கி யுள்ளன. செங் கதிர்ச் செல்வன் கைம்மாறு கருதாது உயிர்களுக்கு இயற் றும் உதவிகளை எல்லாம் இங்கு சிந்திக்க வேண்டும். வாழ் வும் வளர்ச்சியும் அவனாலே உலகுக்கு அமைவது போலவே இந் நாட்டு மக்களின் நலமெலாம் இம்மன்னனாலேயே இயையும் என்பது விளக்கமாம். அல்லலிற் கை கொடுக் கும் அன்னை போன்றான் என்பது, வள்ளுவர் காட்டிய உடுக்கை யிழந்தவன் கை என்ற உவமை போன்ற சிறப் புள்ளது. குழந்தைக்கு எவ்வகைத் துன்பமும் வராமற் காப்பதே அன்னையின் குணம். குழந்தை நல்வாழ்வு வாழும் பொருட்டு அன்னை மருந்துண்பது தாய்மையின் சிறப்பாம். இவ்வுண்மைகளை உள்ளடக்கியே தன்னைத் தானே காத்துக்கொள்ள இயலாத குழந்தையைக் காத்து இடர் போக்கும் தாய் போலவே இம் மன்னன் தன் குடி களைக் காத்தான் என்று கூறுகிறார். மற்ற வழிகளால் அரசனுக்கு உரைக்கும் சிறப்புக்கள் எளிதில் விளங்கும்.

இம் மன்னனுக்கு அமைந்த அமைச்சர் சிறப்பு நினைக்கத் தகும். அரசன் ஏவல் மேற்கொண்ட உத்தி யோக வகுப்பும் நன்றே அமைய வேண்டுமன்றோ? அரசன் சிறந்தவனா யிருப்பின் அமைச்சர் தீயோ ராயிருக்க வழி யில்லை. அமைச்சும் அரசும் ஒன்றி யிருக்கும்போது உத்தியோக வருக்கம் தவறு செய்யச் சிறிதேனும் இட மிருக்குமா ?

அமைச்சர்

"கற்றறி புலவர், காலங் கணக்கிடங் கருவி, செய்கை
முற்றறிந் தொற்ற றிந்து முடிபுரை சூழ்ச்சி யாளர்,
விற்றறி யார்தம் வாழ்வை, வீணுரை யறிகிலாதார்,
கூற்றுல கியல்பறிந்து தொண்டுசெய் யமைச்சர்
[மாதோ!"

உத்தியோக வருக்கம்

"வடுவறு காட்சியாளர், மனத்தினைக் கரவார், நல்ல
விடுதலை வீரர், நாளும் பொதுநல விரதம் பூண்டார்,
கெடுதலைச் செய்யார், யாரும் கீழென நினையார்;
[உண்மை
நடுநிலை யாளர்; வேந்து நம்பிய தொண்டர் மாதோ!"

உத்தியோகஸ்தர் இந்த நற்குணம் பொருந்தி இருந்தால் நாடு நலம் பெறுவதற்கும் தடையுண்டோ?

சத்திய மன்னனுக்கு சுத்தன் என்ற மகன் பிறந்தான். இம் மகன் வரலாறு இக்காவிய முக்கியப் பொருளாம். இடையிடையே விரவும் பிற பெருமக்கள் வரலாறுகள் சுத்த சரிதமாகிய கங்கையிற் கலக்கும் உபநதிகளாம். இம் மகன் பிறந்தபொழுது பெற்றோர் பாராட்டும் அழகு நன்கு அமைந்துளது.

"கண்ணே, மணியே, கனகக் கிளியே கனியே, செம்
பொன்னே, புகழின் பொலிவே, புனிதத் தவமீன்ற,
விண்ணே, யமுதின் விளைவே, யழகே, யிசையாழின்
பண்ணே, யருளின் பயனே, வியனே, பகவானே!"

"சக்திக் கனியே, சாந்தக் கனியே தவமோங்கும்
சித்திக் கனியே, செல்வக் கனியே, செகசீவன்
முத்திக் கனியே, முருகார் திருவே, ஒருமுத்தம்!
சுத்தக் கனியே, சோதிக் கனியே, சுகவாழ்வே!"

* * *

"செங்கதிர் காணப் பொங்கி நகைத்துச் செய
வென்னும்;
திங்களை யன்புத் தீங்கனி யென்னுந்; திசையெட்டுந்
தங்க வியற்கைத் தாயெழில் காணும்; தனிநின்றே
'எங்குமென் அன்னை எங்குமென் அப்பன்'
[எனஓதும்"

உலகத்தை உம்பருல காக்கப் பிறந்த குழந்தை, எங்கும் என் அன்னை எங்கும் என் அப்பன் என்ற உண்மையைக் குழவிப் பருவத்தில் அறிவதில் வியப்பு ஒன்றுமில்லை.

குருகுலத்திலே கல்வி கற்கச் சென்ற இக் குழந்தை அங்கு மொழி பல கற்றதும் வியப்பில்லை. இயற்கைச் செல்வி அவனுக்குக் கலைத் திரு வளர்த்த அழகே நோக்கத் தக்கது.

> "ஓங்கு மாமலை ஓமெனு மருவியும், அன்னம்
> தூங்கு தாமரை வாவியும், தோகையுங் குயிலும்
> நீங்கு றுப்பசுஞ் சோலையும், நீலவான் பொலிவும்,
> ஊங்கு யர்கலை தூண்டின வுத்தமன் உளத்தே"

இச் செல்வன் வளர்வது தமது குருவுக்கே கேடுதரும் என்பது தெரிந்த அரக்கக் குழுவினர்; பொறுமை இன்ன தன்மை உள்ளது என்பதை :

> "வாளெனப் பாய்வது ; வஞ்சந் தீர்த்திட
> நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவது ;
> கோளிறு லுயிர்ப்பது ; கொடுமை செய்துபின்,
> ஆளினை யுண்பது பொறுமை யாகுமே"

என்று தெளிவாக உரைக்கிறார். இக் குருவுக்குத் தலைவன் கலியன் என்றார். அவனுக்கு உற்ற துணையாக இருப்பவள் மோகி ; இருவரும் கலந்தே சூழ்ச்சி செய்கின்றனர். இச் சூழ்ச்சிகள் பலிக்கு முன்பு சுத்தன் தருமத்தைக் காக்கப் புறப்படுகிறான்.

சுத்தன், தான் கற்ற கல்வி நலம் பெற அறிவு சிறந்த சித்திமான் என்ற அமைச்சனோடு நாடு சூழ வருகின்றான். அப்பொழுது அவன் மன நிலை எப்படி இருந்தது என்பதை உரைக்கின்றார்.

"கொற்ற வாழ்வி னுச்சியிற் குலாவுமின்பம் வேண்டிலான்,
நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட நீடுழைக்கும் ஏழைகள்
வற்றிக் கஞ்சி யின்றி வாடும் வன்கொடிய காட்சியைச்
சுற்றி யெங்குங் கண்டவர் துயர் கெட வுதவினன்"

என்று அழகாக அமைக்கிருர். மகாராட்டிர நாட்டின் பக்கம் வரும்போது சிவாஜி சரிதம் கேட்கிருன். சிவாஜி யின் இயல்பை விளக்கும் விருத்தங்கள் வீரத் துடிப்போடு வருகின்றன.

"மாரன்போல் அழகி னனை, மடங்கல்போல் நெஞ்சினனை,
கார்வரைப் புயத்தி னனைக் காலனும் வெருவுகின்ற
வீரவாட் கரத்தி னனை, வெற்றிக்கு வெற்றிசெல்லுந்
தீரனைக் கண்ட பேர்கள் சிவக்கன ருருவே கண்டார்."

இக் கவி சிவாஜியின் தன்மையை விளக்குகின்றது.

சிவாஜியின் வீரம் ஷாஜி என்ற தந்தையுடன் பேசும் போது நன்கு விளங்குகின்றது.

தந்தை: "வரம்பை மீறினை வாலிபத் தெம்பினல்,
நிரம்ப வுஞ்செருக் குற்று நிமிர்ந்தனை ;
பரம்ப ரையர சைப்பதம் பார்த்தனை !
வரம்பெற் ருேர்க்கும் வணக்கம் அழகன்ருே ?"

சிவாஜி:

"மாதரைக் கெடுத்திட் டேனே? மன்னறம் பிழைத்திட்
டேனே ?
பாதகக் கள்ளுண் டேனே? பசுக்களைக் கொலைசெய் தேனே?
கோதறு முனிவர் வாழுங் கோயிலைக் கொளுத்தி னேனே?
யாதிடர் செய்தேன் ஐயயா"னென மைந்தன் சொல்வான்"

" இந்தநம் புனித நாட்டின் இரத்தத்தை வடித்த வர்க்கும்
விந்தையாய்ப் பரிந்து பேசி, விடுதலை செத்து, நீ செய்
மந்திரி வேலை யன்றே மானத்தைக் குலைப்ப தையா?
தந்திர வேசைக் காளாய்த் தாயினை மறப்ப துண்டோ ?

வருந்திய தனது தாயை வருத்திடும் இரத்தக் கையால்
விருந்தினை யுண்டு, நாளை விற்பதும் ஆண்மை யாமோ?
திருந்திட வேண்டும் நீயே, தீரர்முன் தலைநி மிர்ந்தே
இருந்திட வேண்டின் என்போல் இருந்திட வேண்டும்
[என்றான்."

வீரக் கொதிப்பு உள்ளே எழுந்தும், தந்தை என்று மரி யாதை கருதி, வீர சிவாஜி பேசும் பேச்சு இங்கு நாடக நலம் பெற அமைந்துள்ளது அறியத்தகும். தந்தை அதிகார பதவி வகிக்கும் அரசையே எதிர்க்கத் துணிந்த மகன் எப்படிப் பேசவேண்டும் என்பதை இங்கு அறிந்து கொள்ளலாம். கலியின் படை போர்க்கு எழுந்தது; பஞ்சவடி போர்க்களம் ஆயிற்று. வேகன் அங்கு மடிகின் றான். சுத்தன் முனிவர்க்கு அபயம் அளிக்கிறான். இங்ஙனம் இப் பெருங் காப்பியம் இடையிடையே பல சரிதங்களைக் கலந்து சுத்தன் என்ற ஆத்ம வீரன் வாழ்வை நன்கு விளக்குவது பார்க்கத் தகும். இக் காவியத்தில் உள்ள கவிகள் எல்லாம் எளிய நடையில் அமைந்திருப்பதும் கரு தும் கருத்துக் கேற்ற சந்தம் பொருந்தி யிருப்பதும் படித்து இன்புறத் தகும்.

இப் புலவர் வசனத்திலே செய்த தமிழ்ப்பணி அனந் தம். நாடகங்கள் பல; நாவல்கள் பல; கட்டுரைகள் பல; ஞானமார்க்கம் உரைப்பவை பல. இவற்றில் திருக்குறள் நடையில் இவர் இயற்றிய நீதி நூலும் அதன் உரையும் யோக சாதனமும், உடலுறுதியும், மகான்கள் சரிதமும் அடங்கும். இக்காலப் புதுயுகத் தமிழர் இவர் எழுதிய

நூல்களுள் எதனை மறந்தாலும் 'ஏழை படும் பாடு' 'இளிச்சவாயன்' என்ற இரண்டையும் மறக்க இயலாது. பிரெஞ்சு மொழிகளில் உத்தம நாவலாசிரியரால் இயற்றப்பெற்ற இக்கதைகள், முதல் நூலின் நயம் குறையாமல் தமிழ் மொழியில் வழங்குவது இவர் திருப்பணியேயாம்.

இன்னும் உடலுள் உயிருள்ள வளவும் உயிரில் உள்ளுயிர் கலந்திருக்கும் அளவும் தமிழ்ப்பணி பூண்பதே விரதமாக உடைய இப் பெரியார் இயல் இசை நாடகம் என்ற மூன்று துறைகளிலும் இயற்றும் தமிழ்ப் பணிகளைத் தமிழ் மக்கள் அறிந்து பயன் பெற்று நலம் பெறுவார்களாக.

"இனிய தமிழ் இலக்கணம்"

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

*"தமிழின் பெருமைகளைப் பேசுவோம்—பழந்
தமிழில் புதிய ஒளி வீசுவோம்."*

*　　*　　*

"காலத்திற் கேற்ற கனிதமிழ் காண்போம்"—**சுத்தானந்தர்**

தமிழிலே தான் எத்தனை இலக்கண நூல்கள்! அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் — என வரிசை வரிசையாக, அடுக்கடுக்காக இலக்கண நூல்கள் உள்ளன! இன்று, இப்போது "இனிய தமிழ் இலக்கணம்" தோன்றியுள்ளது! "தமிழிலே இத்தனை நூல்கள் எதற்கு?" இது ஒரு கேள்வி! "இருப்பன போதா என்று புதிய இலக்கண மொன்று கிளம்ப வேண்டுமா?" இது மற்றுமொரு கேள்வி! ஆனால், அன்று "அகத்தியம்" தொடங்கி இன்று "இனிய தமிழ் இலக்கணம்" வரை இலக்கண நூல்கள் தோன்ற வேண்டியதன் காரணம் என்ன? இந்த வினாவிற்கு விடை தெரிந்தால் விவரம் புரியும். தவிர,

"இலக்கியத் தினினின் றெடுபடும் இலக்கணம்" —அகத்தியம்
"இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" —நன்னூல்
"இலக்கணம் என்பது இலக்கியம் முறையுற
வைத்த தென்று வழங்கப் படுமே"

என்ற உண்மைகளை நன்கு தேர வேண்டும். இலக்கணம் என்பது, ஒரு மொழியைப் பாதுகாக்குமாறு ஏற்படுத்தப்

பட்ட தற்காலிக வேலி போல அவ்வப்போது மாற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும்; கற்சுவரைப் போல நிற்றல் கூடாது. காலப் போக்கிற்குத் தக்கவாறு இலக்கியம் மாறுபடுகிறது. புதுப்புதுச் சொற்கள் வந்து புகுந்துகொள்கின்றன. வளர்ச்சியும் முன்னேற்றமும் காண்கின்றன. பழைய விதிகள் இன்று செல்லாதன ஆகிவிடுகின்றன என்ற பல பண்புகளைத் தெரிய வேண்டும். ஆதலாலே தான், நன்னூலாரும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னாலே"

என்ற சூத்திரத்தை இறுதியில் வைத்துப் போந்தார்!

அவ்வக் காலத்தில் மாறுபாடோடு முன்னேற்ற இலக்கண நூல்கள் தோன்றுதல் இயல்பே; நியாயமும் கூட!

யோகியார் மொழிவதையும் காணுங்கள்:

"தமிழ் ஐயாயிரம் ஆண்டிற்கு முன்பே இலக்கண இலக்கியங்களுடன் வளர்ந்தது. இன்றும் அஃது இளமையோடிருக்கிறது. இக் காலத்திற் கேற்றபடி வளர்ச்சி பெறுகிறது. எந்த மொழியும் காலத்தால் மாறுதல் அடையும். தமிழ் அன்று போல் இன்றும் உருவாயிருக்கிறது; என்றாலும் நடையில் மாறுதல் அதிகம். தொல்காப்பியர் நடைவேறு; தற்காலத் தமிழ் நடை வேறு. இன்றையத் தமிழ், ஜில்லாவிற் கொருவிதமாகச் சிதைந்து கிடக்கிறது. இப்போதுதான் உரைநடை உருவாகி வருகிறது. இக்காலம் மனித அறிவு எல்லையற்ற விரிவடைந் துள்ளது. பழைய வில், இன்றைய ஆகாச குண்டிற்குப் பதில் சொல்ல முடியாது. எண்சுவடியைக்

கொண்டு இக்காலக் கணித சாஸ்திரத்தை நீந்த முடியாது. "அக் காலம் அப்படி யிருந்தோம்; இக் காலத்திற்குத் தக்கபடி இன்னும் மேலாக முன்னேறி உலகை வெல் வோம் என்ற வீறுடன் நாம் அயராமல் உழைக்க வேண்டும். உலக மொழிகளில் தமிழுக்குரிய இடம் இன்னும் கிடைக்கவில்லை. காலத்திற் கேற்றபடி தமிழும் விரிவடைய வேண்டும்; புதுமையைப் புதிய உணர்ச்சி யுடன் கையாள வேண்டும்" என "இன்றைய தமிழ்" எனுந் தலைப்பில் வரைகிறார்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழிகளின் தாய் தமிழ்! ஆரியம், துலுக்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளின் தீவிரத் தாக்குதலுக்கு உள்ளானது தமிழ். அப்படியிருந்தும் இளங் கன்னி எனத் திகழ்வதன் காரணம் அவ்வப்போது கால கதி, சூழ்நிலை முதலியவற்றி னுக்குத் தக்கவாறு புதுப்புது இலக்கண நூல்களைப் பெற்றதனாலேயே! ஆதலால், இன்றைய நிலை, கால மாறு பாடு, சுற்றுப்புறம் ஆகியவற்றினுக் கியைந்தவாறு ஒரு "இனிய தமிழ் இலக்கணம்" தோன்றியது சாலவும் நன்று; சரி; நியாயமானது!

ஆகையால் இப் புது இலக்கண நூலை 'சமய சஞ்சீவி' எனச் சொன்னால் அது உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை! இது தமிழுக்குப் புத்துயிர் தர வல்லது; உரம் கொடுக்க வல்லது; வளம் கொடுக்க வல்லது.

மெய்யாகத் தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுகிற இந்த நூல், நெடிய ஆராய்ச்சியின் பலனாக வெளிவந்திருக்கிறது. தமிழிலுள்ள பல இலக்கண நூல்களை யெல்லாம் ஆய்ந்து, ஆரியம், வங்கம், இந்தி, இலத்தீன், கிரேக்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளில் இலங்கும்

இலக்கண நூல்களை யெல்லாம் அறிந்து, எல்லாவற்றை யும் தம்முள் அடக்கிக் கொண்ட தமிழ்த் தவயோகி சுத்தானந்தர் " இக் காலத்திற்கும், பிற்கால வளர்ச்சிக்கும் ஏற்ற " இந்த இலக்கண நூலைச் செய்தருளியுள்ளார்.

" இனிய தமிழை எளிதாய் விளக்கும்
இலக்கணம் தருவாய், இறைவா போற்றி "

என்ற 'காப்பு' டன் துவங்குகிறது நூல்.

ஐந்தெழுத்தனார்

புலவர் ஐந்தெழுத்தனார் (பஞ்சாட்சரர்), தொல்காப்பிய ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தார். அப்போது உள்ளே மனைவி 'குஃ பஃ' என்று அரிசி தீட்டும் சத்தம் கேட்டது. ஓடினார் புலவர்: "அடி அஃறிணை! ஒன்பஃது தடவை சொன்னேனே, ஆய்தம் குறிலுக்குப் பின், வல்லின உயிர் மெய்க்கு முன் வரும் என்று. மீண்டும் 'குஃ பஃ' என்று அஃக உரைத்ததேன்? குஃகு, பஃகு, இஃது, பஃது என்று சொல்!" என்றார்.

" அஃது அமைவே; உலக்கைக்கு இலக்கணம் தெரியுமா ? " என்றாள் மனைவி.

புறங்காட்டாதே !

'நாடு, போர்' என்றால் தமிழ் வீரர் 'நான் முன் நீ முன்' என்று வாளும் தோளும் உயர்த்தி வருவர். போர்ப் பறை கேட்டதும், அவர் மார்பு வீரத்தால் விம்மும். போர்த்திறல் இல்லாதவனை அலி, அஃறிணை, கடையன் என அவர் மதிப்பர். ஒரு காலம் மதுரையில் போர்முரசு கேட்டது. வீரரெல்லாரும் கூரிய எஃகு சுழற்றி இளங் கன்று போலத் துள்ளிப் பந்துபோலத் தாவிப் பகைவரை

வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தனர். அப் போரில் பத்தினி யொருத்தியின் கணவன், மார்பில் அம்பு பட்டு வீரவிண் ணடைந்தான். அவன் மனைவி என்ன செய்தாள்? "நாட்டிற்காக என் கணவன் இறந்தான்" என்று பெருமை கொண்டாள். அம்மட்டோ? தனது அரும் வயதுள்ள ஒரே மகனை அழைத்துத் தலைவாரி முடித்து, சோறூட்டி, தந்தையின் வாளைக் கொடுத்து, "செல்வா, செல்; போர் புரி; புறங்காட்டாதே! வெற்றியுடன் திரும்பி வா" என்று இரணகளத்திற் கனுப்பினாள். இத் தாயை நினைத்தாலே அச்சம் மருண்ம் (மருளும்). பத்துப் பேருக்கு ஒருவன் பதிற் சொல்லுவான்—தமிழன் வீரன்.

விவேகானந்தர்

விவேகானந்தர் சிகாகோ சர்வமத சங்கத்தில் வேதாந்த முழக்கம் செய்தார்; அவர் தமது வாக்கினால் சபையின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். அவரை அமெரிக்கர் புகழ்ந்து போற்றினர். அவரால் பாரத மாதா பெருமை பெற்றாள்; அவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு நடந்தது; வேதாந்த விளக்கத்தில் அவரின் மிக்கார் இல்லை; அவர் வாக்கினின்று வந்ததை யெல்லாம் குட்வின் என்பவர் சுருக்கெழுத்தில் குறித்தார். அக் குறிப்புகளே விவேகானந்தரது நூல்களாக விளங்குகின்றன. அவருடைய சொற்பொழிவுகளில் இலண்டனில் செய்த ஞான யோகப் பொழிவு மிகச் சிறந்தது. அதைக் கேட்ட ஐரோப்பியர் பலர் அவரிடத்தில் உள்ளன்பு கொண்டனர். சகோதரி நிவேதிதை அவருடனே இந்தியாவிற்கு வந்து, பொதுஜன சேவை செய்தாள். "எழுந்திரு பாரத நாடே, சிம்ஹம்போல் எழுந்து, செய் வீரகர்ஜனை! இந்தியர்காள், விழித்தெழுங்கள்! எல்லாரும் எம் சகோதரர்

என்று கூறுங்கள்! தலை நிமிருங்கள்'' என்று விவே கானந்தர் இடிமுழக்கம் செய்தார்.

*   *   *

''இனிய தமிழ் இலக்கணம்'' என்ற தலைப்பைப் போட்டுக் கொண்டு என்ன இந்தக் கதைகளெல்லாம்! என வாசகர்கள் நினைக்கலாம்! இவை யோகியார் எழுதிய—இலக்கண நூலில் உள்ள—கதைகள் தாம்! முதலாவதாகக் குறிப்பிட்ட 'ஐந்தெழுத்தனூர்' எனும் நகைச் சுவைக் கதை 'ஆய்தம்' எனும் பொருள் கீழ் ''இக் கதையில் வரும் ஆய்த எழுத்தைக் கவனிக்கவும்'' என உதாரணமாக வரையப்பட்டது. 'புறங்காட்டாதே' என்ற தமிழர் வீர வரலாறு ''குறுகி ஒலிக்கும் இ, உ, ஐ, ஔ, ம, ஃ குறுக்கங்களைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்தி எழுதுக'' எனப் பயிற்சிப் பாடமாக வருவது. 'விவேகானந்தர்' வரலாறு வேற்றுமை உருபுகளைத் தெளிவாக்க நல்லதொரு உதாரணமாகக் காட்டப் பட்டதே!

வெறும் சூத்திரங்களாகவே இருந்து விடாமல் எளியதான இனிமையான நடையிலே கதைகள், பெரியவர் வரலாறு முதலியவற்றை அமைத்துக் காட்டி அவற்றை அனுசரித்தே இலக்கணப் பயிற்சி தருவது சாலச் சிறந்தது என்பது துணிபு. மாணவர், தங்களின் சுயமுயற்சியால் இலக்கணச் சட்ட திட்டங்களைச் சுளுவாகப் புரிந்து கொள்தல் பொருட்டு இம்மாதிரி எளிய உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன. அறிவைப் புகட்டுகின்ற வகையில் உதாரணங்கள் தாமே நேரடியான உபகரணம்! இப்படிப் பட்ட நல்ல கருத்துக்களும், பெரியோர் சரிதையும், சரித்திர சம்பவங்களும் படிக்கின்ற மாணவர்களிடையே நல்ல இலக்கியத் தேர்ச்சி யளிப்பதோடு, தமிழர் பெருமை, நாட்டுப் பற்று, பெரியார் மனப் பண்பு முதலியவற்றைத் தெளிவாகப் போதிக்கின்றன. பயில்கின்ற மாணக்கர்

வேடிக்கை விளையாட்டாக, கதை கேட்பது போலவே, இலக்கணத்தையும் கற்றுக்கொண்டு விடலாம். இம் மாதிரியான புதுமையும் பெருமையும் அமைப்பும் வாய்க் கப் பெற்ற இலக்கண நூல் இந்த "இனிய தமிழ் இலக் கணம்" ஒன்றேதான்!

இன்னும் சற்று உட்சென்று சில அரிய "புதுமை" களைக் கண்டு தேர்வோம்:

"இனிய தமிழ் இலக்கணம்" — எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரிலக்கணம் ஆகிய மூன்றினையும் நிறைவாகக் கொண்டது.

எழுத்திலக்கணம்:

பழந்தமிழ் இலக்கணப்படி சிற்சில எழுத்துக்களே மொழிக்கு முதலாக வரும். ஆனால், தற்காலம் 'டப்பா, டங்கா, டமாரம்' என்ற சொற்களைத் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் காண்கிறோம். ராமசாமி என்று சொல் கிறோம். லோகநாதன் என மொழிகிறோம். முற்காலப்படி 'ட' முதலில் வராது! இராமசாமி, உலகநாதன் என்றே பகர்தல் வேண்டும்! ஆகையால்தான் நமது யோகியார்,

"திசைமொழிக் கேற்பப் பிறவும் வருமே......"

என்ற ஒரு புது சூத்திரத்தையும் அருளியுள்ளார்:

"ஆரிய, ஆங்கில எழுத்துக்கள் தமிழ் மொழி ஓங்கி, வளர்ந்து, முன்னேறிப் பல பாஷைகளுடன் சரிசமானமாக நிற்பதற்கு வழி வகுக்கின்றது. தமிழின் மூலம் உலக மொழிகளை யெல்லாம் கற்கவேண்டும்; இது முடியும். ஐரோப்பிய மொழிக்கு அடுத்தபடியாக எழுத்துச் செட் டுள்ளது தமிழே" என்று கூறி ஊக்கங் காட்டி ஆர்வ மூட்டுகிறார் யோகியார். வடமொழியில் உள்ள உரத்த

மெலிந்த சப்த வர்க்க எழுத்துகட்கு இணையாக — க, ச, ட, த, ப— இவற்றின் கீழே இரு புள்ளிகள், ஒரு புள்ளி, சிறு கோடு முதலியன இட்டு ஒலிக்குறையை நிவர்த்திசெய்து கொள்ளலாமே என்கிறார். தவிர F, Z என்ற ஆங்கிலச் சொற்களுக்கு இணையான ஒலிகளை "ஃப்" "ஃஜ்" எனப் போட்டு ஈடு செய்து கொள்ளலாம் எனப் புதுவழி காட்டு கிறார். சூத்திரத்தையுங் கவனியுங்கள் :

"புள்ளியும் கோடும் பொருத்திக் கீழே
உரத்த கசடதப ஒலிகளை நிரப்புக!
ப, ஜ முன் ஆய்தம் FZ ஆகும்"

எப்படி? முற்றிலும் புதுமை யல்லவா?

"றர, லள, ழ, னநண
தெளிவாய்ச் சொல்லிச் செயலுடன் கூடி,
பாவனைக் கேற்ற பண்பைக் காட்டி,
உணர்ச்சிக் கேற்ற உருக்கங் காட்டி
தெய்வத் தமிழைத் திருத்தமாய் மொழிக"

என்று உச்சரிப்பின் கீழ் சூத்திரம் வகுத்து ஒரு வேண்டு கோள் விடுகிறார் என்றே சொல்ல வேண்டும்!

முற்றுப் புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக் குறி என்ற நிறுத்தக் குறிகளை வெகு தெளிவாக விளக்கி,

"புள்ளியில் உள்ளம் புகுத்திப் படிக்கவும்"

என விதிக்கிறார் நம் தமிழ் யோகி!

சொல் இலக்கணம்:

"மூச்சுச் செட்டுடன் பேச்சுக் கினிய
பொருட்செறி வுடையன பூந்தமிழ்ச் சொற்கள்"

எனத் தமிழ்ச் சொற்களின் புகழ் பாடுகின்றது ஒரு சூத்திரம்!

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று கவிக்குயில் சுப்பிரமண்ய பாரதியார் பணிக்கிறார். அதன்படி சென்று கலை கொணர்வோருக்குக் கலைச் சொற்கள் வேண்டு மல்லவா ? "மேனாட்டில் ஆராய்ச்சிக் குரிய இயற்கலைகள் எல்லையற்று விரிந்து பரந்துள்ளன ; ஒவ்வொன்றிற்கும் புதிய, பெரிய சாத்திரங்கள் உள்ளன. அததற்குரிய சிறப்புச் சொற்கள் அளவற்றன. பொருள் பொதிந்த சிறப்பான கலைச் சொற்களை (Technical terms) அந்தந்த மொழிகளிலிருந்து அப்படியே எடுத்தாளலாம். அதனால் தமிழும் விரிவடையும்" எனும் பரந்த நோக்குக் கொண்ட யோகியார்,

"உள்ளியற் கலையும், உலகியற் கலையும்
வளர்க்குஞ் சொற்கள் கலைச்சொல் லாமே"

என்று சூத்திரம் காண்கின்றார்.

"வினைப் பகுப்பு" தனில் 'செயப்படு பொருள் உள்ள வினை', 'செயப்படு பொருள் இல்லா வினை,' 'செய் வினை', 'செயப்பாட்டு வினை' என்பனவற்றோடு 'தன்வினை' (Direct action) 'பிற வினை' (causative Verb)என்ற இருவினைகளைப் புகுத்தியுள்ளார் யோகியார்!

"சரித்திரக்காரர், நிகழ் காலத்தைக் கொண்டு இறந்த கால நிகழ்ச்சியை வர்ணிப்பர் ; அதற்குக் 'கதை நிகழ்வு' (Historic present) என்க" என விதி செய்கிறார் !

"விதமும், காலவிரிவும்" என்ற அதிகாரம் தனிச் சிறப்புப் பெற்றது. ஆங்கில 'கிராமர்' கற்றவர் இதையும் அவசியம் படித்துச் சிந்திக்க வேண்டும்.

'பெயர் உரிச்சொல்' (Adjective) சம்பந்தமாக ஆங்கில வழக்கப்படி இலக்கணத்திலே Degrees of Comparison உண்டு; அவை Positive, Comparative, Superlative என்பதை, அந்த ஆங்கில அமைதியை ஒட்டித் தமிழிலும், 'இயல் உரி', 'உறழுரி', 'மேன்மையுரி' என உணர்த்துகிறது "இனிய தமிழ் இலக்கணம்". தவிர ஆங்கிலத்திலும் இல்லாத 'நிகர் உரி' (Equality, Likeness—மான, போல, இயைய, ஒப்ப) என்ற நயஉரி தனையும் தருகிறது!

"உயர்வுதாழ் வுரைக்கும் ஒப்பனை யுரியே;
இயல், நிகர், உறழ்,மேன்மையென நான்கே
உள்ள பெயர்உரி இயலுரி யாமே,
நிகர்வுரி அதைப்போல் இதுவெனக் காட்டும்
உறழுரி ஒன்றினொன் றுயர்வுதாழ் வுணர்த்தும்
மேன்மை அனைத்தினும் மேலெனக் குறிக்கும்"

என்ற புத்தம்புது சூத்திரமும் நமக்குக் கிடைத்துள்ளது! 'எண் உரிச்சொற்கள்' (Numeral adjectives) எனும் அதிகாரமும் புதியது, பயனுள்ளது. 'இவ்விரண்டு, மும்மூன்று' எனும் 'பகுப் பெண்க'ளும் (Distributives) நமக்குப் புதியனவே!

சொற்றொடர் இலக்கணம்:

தமிழ் இலக்கண மரபுப்படி 'எழுத்து, சொல், பொருள்' எனவே செல்லும். ஆனால் "இனிய தமிழ் இலக்கணம்" 'எழுத்து, சொல், தொடர், பொருள்' என முன்னேறுகிறது! ஆங்கில syntax தான் 'சொற்றொடர் இலக்கணம்'!

"தொடர்; தொகை, மரபுடன் புணர்ச்சி, கட்டுரை
தொட ரிலக்கணம் துலக்குவ தாமே"

ஆங்கில முறைப்படி வாக்கியங்களைப் பிரித்துப் பார்ப்பது உண்டு! அந்த Analysis முறை இங்கு "தொடர்ப் பகுப்பு " என்ற முறையில் காணப்படுகிறது. தவிர Simple Sentence, Compound Sentence, Complex Sentence மூன்றும் இத் தமிழிலக்கணத்திலே 'தனித் தொடர்', 'தொடர் தொடர்', 'கலப்புத் தொடர்' என்ற பெயர் பூண்டு இலங்குகின்றன!

" தானே சொல்வது தற்சொல் ஆகும்
பிறர்சொல் வதுவே பிறசொல் ஆகும் "

என்ற சூத்திரம் ஆங்கில அமைதிப்படி உள்ள (Direct Speech, Indirect Speech) இரண்டையுமே தமிழில் தருகின்றன.

" வழுவமைதி " யிலே ஒரு புதுமை காண்கிறோம்!

" அவனுக்குப் பணம் கிணம் உண்டா? ஏதாவது பாத்திரம் கீத்திரம் கொண்டு வா! கிணம், கீத்திரம் — இவற்றிற்குப் பொருளில்லை. இவை அகராதியில் இல்லை. என்றாலும் இவை, முதலியவை, வகையறு, ஏதாவது என்பன, அதற்கு இனமானது என்பவற்றைக் குறிக் கின்றன. சம்பளம் கிம்பளம், நகை கிகை, ஆள் கீள், வேட்டி கிட்டி என்பன வெல்லாம் முதன்மையான பொருள் அல்லது அதன் இனமானது என்பதைக் குறிக் கும். இவற்றை இனம்—கினச் சொற்கள் என்போம். " எப்படி?

* * *

" கட்டுரை "க்கு இலக்கண விளக்கம் வேண்டுமா? " இனிய தமிழ் இலக்கண " த்தின் 153வது சூத்திரத்தைக் காணுங்கள். தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

"எடுத்த பொருளை எண்ணிக் குறித்துத்
தன்மையும் பயனும் புலவர் கருத்தும்
தேர்ந்து தெளிவாய்ச் செப்பிப் பார்த்துப்
பத்தி வகுத்துப் பழுதறக் கட்டுரை
எழுதுவர் எழுதும் இயல்பறிந் தோரே"

போதுமா?

* * *

இப்படிப் பலவழியிலே சிறந்து விளங்கும் இப் புதுநூல் "கற்பவருக்குக் களிப்பை உண்டு பண்ணி, அவர்கள் கவனத்தை ஒருமைப் படுத்தி, இலக்கண உண்மைகளைத் தித்திக்கத் திரட்டிக் கொடுப்பதாகும்"! உண்மையாகவே கவிமணி கவிப்பது போன்று "இனிய தமிழ் இலக்கணம்"

"வேம்பு வேம்பென வெறுக்கும் இலக்கணப்
பாடம் அதனைப் பள்ளிச் சிறுவர்
கரும்பு கரும்பென விரும்பிடு மாறு"

மாண்புற அமைந்துள்ளது!

பள்ளிச் சிறுரோ, தமிழ் ஆராய்ச்சியில் சிறந்த பெரியாரோ, இலக்கணம் படித்தவரோ, யாராயிருந்தாலும் சரி! இந்த "இனிய தமிழ் இலக்கண"த்தை அவசியம் படித்துப் பார்க்க வேண்டும். நிச்சயமாகப் பலனுண்டு! தமிழ் மொழிக்கு ஆக்கமும், முன்னேற்றமும் விரும்பும் அன்பர்கள், தங்கள் கோரிக்கைகளெல்லாம் இதிலே செவ்வனே நிறைவேறியிருப்பதைக் காண்பார்கள்!

"இனிய தமிழ் இலக்கணம் இரண்டாம் பகுதி 'கலை விருந்து' என்ற பெயர் தாங்கி வரும். வாழ்வும் கலையும், அகப்பொருள், புறப்பொருள், பேச்சுக்கலை, அணியிலக்கணம், கவிதைக் கலை, இசைக் கலை, நாட்டியக்

கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை, நாடகக் கலை, தமிழ்க் கலை விளக்கம். இத் தலைப்புக்களில் நமது தமிழ்க்கலை வளர்ச்சிக் கேற்ற கட்டுரைகள் கலை விருந்தில் வரும். பழைய இலக்கணங்களிற் காணும் பொருள், யாப்பு, அணியிலக்கணங்கள் முழுதும் இந்நூலில் திட்ப நுட்பமாக அடங்கி இக்கால மொழிகளில் உள்ள புது நயங்களுடன் விளங்கும்" என்று தமிழுலகிற்கு விடுக்கும் கடிதத்திலே விளக்கி உறுதி கூறுகிறார் நம் யோகியார்!

"கலை விருந்து" பெறும் நன்னாளை எதிர்பார்க்கிறது தமிழுலகம்!

இதையெல்லாம் நினைக்கும் போது நமது உள்ளம் மகிழ்வால் துள்ளுகிறது, உடல் சிலிர்க்கிறது, நமது யோகியார் தம் அரும் பெருந் திருப்பணியான தமிழ்த் தொண்டை நினைக்குங்கால் ஏற்படும் உள்ளப் பூரிப்பு ஆனந்தக் கண்ணீராகப் பனிக்கிறது.

'உயர்தனிச் செம்மொழியாம் எங் தமிழ் மொழி மிகவும் புண்ணியம் செய்த மொழி, பாக்யம் செய்த மொழி' என்று சொல்லத் தோன்றுகிறது!

எது எப்படியாயினும் சரி.

"பழமை எல்லாம் சிறந்ததுமல்ல!
புதுமை என்றால் பிழையுள தன்று!
அறிஞர் ஆவார் ஆராய்ந் தறிந்து
இரண்டிலும் உள்ளதை ஏற்றுக் கொள்வர்"

என்ற கவி காளிதாஸன் இயம்பியதை எப்போதும் இதயத் தமர்த்த வேண்டும்!

கலைக் கோயில் கட்டும் பாரதியார்

ராவ்பகதூர், டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி

"அருளறிவி லூறி, யழகிற் றவழ்ந்து,
பொருள் செழித்த பொற்கனியைப் போற்று!"

இந்தப் போதனையை மறவாமல் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களில் நானும் ஒருவன். இராமச் சந்திரபுரம் அன்பு நிலைய வெளியீடுகளின் பட்டியலைப் பார்த்தவர்கள், யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் முத்தமிழிலும் முதிர்ந்த நமது நாட்டின் பெரியோர்களில் உயர்ந்த ஸ்தானம் பெற்றிருக்கிறார் என்பதை அறிவார்கள்.

கவிதை, வசனம், இசை, நாடகம், சிறுகதை, நாவல், பெரியார் வரலாறு, ஆன்ம தத்துவம் இவைகளை விஷயமாகக் கொண்ட பல நூல்கள் இவரால் வெளிவந்திருக்கின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு இம்மொழிகளிலும் சில நூல்களை இவரே இயற்றியிருக்கிறார். இவரைப்போல் ஆழ்ந்து அகன்ற மேதாவிலாசம் படைத்த நூலாசிரியர்கள் தமிழ் நாட்டில் இருந்தார்கள் என்பதற்கு, சரித்திரத்தில் உதாரணம் காணப்படவில்லை. இவரைப்போலத் தவத்தில் நின்று, யோகம் புரிந்து, கலை வாழ்வும் பொதுநல வேட்கையும் காட்டிய பண்டிதர் இல்லை. இவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரைப்போல் பல மத நூல்களையும் கற்று, அதன்படி நின்று அனுபவம் பெற்றவர். அரசியல், கிராமப் புனருத்தாரணம், பொருளாதாரம், சமுதாய—ஜாதீய சீர்திருத்தம், சுதந்தரக்

கிளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பத்திரிகைப் பிரசாரம், முதலான பல உலகியல் துறைகளிலும் தொண்டாற்றி அனுபவம் அடைந்தவர். தமிழ் நாட்டில் இவருக்கு இணை யாக யாரை எடுத்துக்காட்ட முடியும்?

யோகி பாரதியாரின் மேதாவிலாசத்தைப் பற்றியும், அவர் யோகசாதன முறைகளைப் பற்றியும், அவர் இயற்றி யுள்ள நூல்களின் சிறப்பியல்களைப் பற்றியும் நான் எடுத் துரைக்க வல்லேன் அல்லேன். அவர் ஒரு அன்பு நிலயம்; அறிவுக் களஞ்சியம்; கலைச் சுரங்கம். ஆனது பற்றி அவர் அறிவாற்றலை அளவிட என்றால் கொஞ்சமேனும் முடி யாத காரியம்; ஆனால் அவர் எல்லாரும் இன்புற்று வாழத் தொண்டு செய்துவரும் காரியங்களை அறிந்தும் அவரைப் போற்றுமல் இருக்கமுடியாது; அதற்கு நன்றி செலுத்தாமல் இருப்பதும் நன்றன்று.

இவர் புதுவையில் மோனநிலையில் யோகம் புரிகிறார் என்ற சங்கதி நாம் அறிந்ததே. மௌனம் சாதித்து யோக நெறியில் நிற்பவர்களால் உலகத்திற்கு யாதொரு பிர யோசனமும் இல்லையென்பது சாதாரண மக்களின் அனு பவம். அதற்கு மாறாக, இவர் ஓய்வு ஒழிச்சலின்றித் தமிழ்த் தொண்டு எங்ஙனம் செய்துவர முடிகிறது என் பது இன்றும் எனக்குப் புதிர் தான். ஓயாது உழைக்கவும், அரசியலில் தீவிரமாக ஈடுபட்டும், அறநெறி வாழ்க்கை நடத்தவும், பல நூல்களைப் படிக்கவும், பல கிரந்தங்களை இயற்றவும், சொற்பொழிவாற்றவும், பிரசாரம் செய்ய வும் எவ்வாறு நமது காந்தி மகாத்மாவுக்கும், ராஜாஜீக் கும் சாத்தியமாகிறது? இவர்களது வாழ்க்கைச் செயல் களும் ஆச்சரியத்தையே உண்டாக்குகின்றன. ஆத்மீக சக்தியை உடையவர்கள்தான் உலகம் போற்றும் பெரி யார்களாக இருக்கமுடியும். அவர்கள் பாக்கியமே பாக்கியம்

வாய்ப்பறை சாற்ருமல் மௌனமாகவே எவ்வளவு பெரிய காரியங்களைப் பிறர் நன்மைக்காகச் சாதித்துவிடலாம் என்பதற்கும், யோக சாதனம் சுயநல ஆத்ம சாதனத்திற்கு மாத்திரம் அல்ல என்பதற்கும் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிருர். யோகிகளும் அரசியல், இலக்கியம், சுத்த சமரச சன்மார்க்க போதனை இம்மூன்று துறைகளிலும் தொண்டாற்ற வேண்டும் என்பதற்கும் இவரே சான்று. தவநிலை நின்று அவர் இயற்றியுள்ள 'யோக சித்தி'யை அவரது வாழ்வும் வரலாறும் எனக் கொள்ளத் தகும் என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிருர். தவத்தின் பயன் மனித சமுதாய முன்னேற்றத்திற்குத் தொண்டு செய்யச் சக்தி பெறுவதே; யோகத்தில் மனம் நிலைபெற்ருலும் பொதுநலப்பணியில் ஈடுபட முடியும் என்பதைத் தன் செயலால் காட்டுகிருர்.

திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள், யோகியாரை : "தமிழ் நாட்டை அறிவால்—அன்பால்—பாட்டால்—உரையால் கொள்ளை கொண்டவர். அவர் கலை ஞானம் மட்டும் பெற்றவரல்லர் ; அனுபவஞானமும் பெற்றவர். அவர் புதுவையில் அரவிந்தத் தேன் அமிர்துண்டு, சாந்தத்தில் தேங்கிக் கிடப்பவர் ; அவர் நம் சாந்த அனுபவத்தினின்றும் 'திருமந்திர'க் கட்டுரைகள் வெளிவர நேர்ந்தமை தமிழ், மக்கள் தவத்திரு என்றே கூறலாம்" என்பதாக, பாரதியார் இயற்றிய "திருமந்திர விளக்கம்" என்ற நூலின் மதிப்புரையில் கண்டிருக்கிருர். "புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்—புலம் மிக்கவர்க்கே புலனும்" என்றதன் உண்மையையும் திரு. வி. க. அவர்கள் வாக்கால் அறிகிருேம்.

"அறமும், அறவழியே பொருளும், அதனுல் இன்பமும் எல்லாரும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்குத்

தகுதி பெற்ற நூல்களைக் கொண்டே கலைக் கோயிலைக் கட்ட வேண்டும். இப் பணிதான் உலகை ஒன்றுபடுத்தும். இந்த உண்மையான உன்னதமான உறுதி பயக்கும் கலைக் கோயிலைக் கட்டக் கற்களும் மற்ற சாதனங்களும், சகல உலக நாகரிகங்களுக்கும் முற்பட்ட இந்து நாகரிகம், அதிலும் சிறந்த தமிழ் நாகரிகம் செழித்து ஓங்கிய தமிழ் நாட்டில்தான் இன்றும் ஏராளமாகக் கிடைக்கும்'' என்ற கொள்கையைப் பின்பற்றிக் கலைக் கோயில் கட்டி வருகிறார் யோகி பாரதியார். இத் திருக்கோயில் திருப்பணியில் ஒத்துழைக்கப் பாக்கியம் பெற்றவர்கள் கடவுள் திருவருளைப் பெறுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. கலைக் கோயிலை 'வசந்தம்' மாதப் பத்திரிகையில் நிர்மாணம் செய்து கொண்டு வருகிறார் என்பதைத் தமிழ் நாடு அறியும். அவர் கனவு நினைவு ஆவதற்குக் காலமும் வந்து விட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கட்டிய ஹிந்து சர்வ சமய சன்மார்க்க மதக் கோயிலுக்குப் பணியாற்ற சுவாமி விவேகானந்தர் அவதரித்தார். நம் மதத்தின் அருமை பெருமைகளை உலகனைத்தும் பரப்பினார். யோகி சுத்தானந்தர் கட்டும் கலைக் கோயிலுக்கு சுவாமி விவேகானந்தர் போன்ற மகான், கடவுள் திருவருளால் அவதரிப்பார் என்றே நம்புகிறேன். ஏராளமான சிஷ்யர்கள் இப்பொழுதே பாரதியாரை வேண்டி, அவரிடம் பயின்று, அவர் கலைக் கோயில் திருப்பணியில் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள். அவர் அறைகூவல் காதில் விழவில்லையா ?

''தமிழ் நாட்டின் வாழ்வோங்கத், தமிழ்க் கலைகள் தலைசிறக்க,
அமிழ்தாய தமிழ்வளர, அரும்பணிகள் ஆற்றுவமே !''

யோகி சுத்தானந்தரும் தமிழ்ப் பண்பாடும்

(திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்)

யோகி சுத்தானந்தருக்கு, தமிழிடத்திலும் தமிழரிடத்திலும் தமிழகத்திடத்திலும் தமிழ்ப் பண்பாட்டிடத்திலும் உள்ள அன்புக்கும் ஆர்வத்திற்கும் அளவே இல்லை. முதல் முதலாக தமிழரின் பழமையை அவர் நன்கறிந்து புகழ்ந்து கூறுகின்றார். "நமது தமிழ் நாடு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு பழம் பெரும் நாடு" அது விரிந்த நாடாக இருந்து பிறகு ஒரு பாகத்தைக் கடல் பொங்கி எழுந்து அழித்ததால் இழந்தது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கடல் கொள்ள" (சிலப்பதிகாரம்)

மிஞ்சி யிருக்கும் தமிழ்நாடு வெகு பழமையான நாடு. வெகு பெருமையான நாகரிகம் வாய்ந்த நாடு. தமிழர் தமிழ் நாட்டிலேயே பிறந்து ஆதிமுதலிருந்தவர்; அவர் தமிழ் நாட்டுக் குரியவர்; வேறு எங்கிருந்தும் வந்து குடியேறினவர் அல்ல. இது தவிர ஆதி மனிதர் உண்டானதே தமிழ் நாடு என்று பி. டி. சீனிவாசய்யங்கார் முதலிய ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். யோகி சுத்தானந்தர் :

"தமிழர் உலகின் தொல்பெரு மக்கள்: தமிழர் நாகரிகம் ஒரு காலத்தில் பரத கண்டம் முழுவதும் பரவியிருந்தது; திபேத்து, பர்மா, பெலூசிஸ்தானம், மலயா, கார்த்துகம், பூகிரா, நடுக்கடல் நாடுகள் இவற்றிலெல்லாம் தமிழர் நாகரிகம் பரவியிருந்ததற்குப் புறச் சான்றுகள் உள்ளன. தமிழர்

கப்பல் செல்லாத்துறை கிடையாது. தமிழர் வாணிகம் மேற்கிலும் கிழக்கிலும் தழைத்தோங்கியதற்கு ஏராளமான அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் உள்ளன."

புகாரின் வளத்தைப் பற்றி, சிலப்பதிகாரம் வெகு விரிவாகவும் மிகவும் புகழ்ச்சியாகவும் கூறுகின்றது.

தமிழகம் மற்ற நாடுகளுடன் கூட்டுறவாக விளங்கியது தவிர அவைகளால் வீர வாழ்க்கைக்காகவும் போற்றப்பட்டுள்ளது. வான்மீகருடைய ராமாயணத்தில் பாண்டியர்களுடைய கவாடபுரம் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. சேர சோழ பாண்டிய மன்னர்கள் அந்த ஆதி காவ்யத்தில் கூறப்பட்டிருக்கின்றார்கள். சேரன் செங்குட்டுவன் இமயமலை வரையில் தன் பிரதாபத்தை நிலை நாட்டியது யாவரும் அறிந்த விஷயம்.

"கூற்றுடன்று மேல்வரினும், கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"

என்று தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் திருவாக்கல்லவா? யோகி சுத்தானந்தர் கூறுகின்றார்:

"தமிழர் சமயம் தரும வீரம்! தமிழர் கடவுள் அரக்கரை வென்ற வேல் முருகன்! இந்த வீரக்கனல் மீது பூத்த சாம்பலை ஊதி யெறிந்து, தமிழ் மரபு மீண்டும் அஞ்சாது விழித்தெழுந்து தாயின் புகழை விளக்குக!"

வாணிகம், போரில் வீரம், அரசியல் மேன்மை முதலிய துறைகளில் மட்டும் தமிழர் முன்னேற்றம் அடங்கி நின்றுவிடவில்லை. கலைத் திறனும் தெய்வீக உணர்ச்சியும் நிரம்பிய நாடு தமிழ் நாடு. யோகி சுத்தானந்தர் கூறுவதாவது:

"சுற்றிலும் பார்மின்! எத்தனை அழகிய கோயில்கள்...! இக் கோயில்களில் கண்ணையுங் கருத்தையும் கவரும் பல சிலைகளும் சிற்பச் செல்வங்களும் காண்கின்றன. அவை நமது தமிழரின் கலைத்திறனை நன்கு விளக்குவன. இக் கோயில்களில் திருவாய்மொழி, தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருப்புகழ், தாயுமானவர் பாடல் முதலிய வற்றைக் கேட்கிறோம். அவை உள்ளஞ் சிலிர்க்க உயிரில் பாய்ந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றன. அருளும், அழகும், ஆழ்ந்த பொருளும் பொருந்திய இந்தத் தெய்வமணி வாக்கு களே தமிழரின் நாகரிகச் சுவடிகள்."

உயரிய தமிழர் பண்பாட்டை நன்கறிந்த யோகி சுத்தானந்தர், இக் காலத்திலுள்ள தமிழருடைய கடமை களையும் நன்கு விளக்கிக் காட்டி யிருக்கிறார். தேசியமும் ஜனநாயகமும் வளர்ந்துள்ள இக் காலத்தில் நாம் தமிழ் வசன நடையையும் தமிழ்ப் பத்திரிகைகளையும் பரப்ப வேண்டும்.

"...பிறகு, வலிய நடையும் புலவர் பாணியும் மறைந்து 'எளிய நடை இயக்கம்' ஒன்றெழுந்தது. அத்துடன் பொது ஜனங்களுக்குப் பளிச்சென்று புரியும்படியான பேச்சுத் தமிழிலேயே பத்திரிகைகளும் நூல்களும் ஏராளமாகத்தோன் றின; இவற்றால் ஒரு புதிய நடை தமிழுக்கு ஏற்பட்டது. அப் புதிய நடையில் இப்போது நடக்கும் இரண்டொரு பத் திரிகைகள் இந்தியாவிலேயே முதன்மை வகிக்கின்றன. சிறு கதை, தொடர் கதை, நகைச்சுவைக் கட்டுரைகள், சமுதாய நடையுடை பாவனைகளை விளக்கும் கட்டுரைகள்—இவற் றின் தமிழ் எழுத்தாளரே இப்போது முன்னணி வகிக்கின் றனர் என்னலாம்."

இது மட்டுமல்ல, பாரத நாடு கடவுள் அமைப்பால் ஒன்றுபட்ட நாடாதலால் தமிழகம் அதில் ஒரு அம்சம் என்ற உண்மையை நாம் மறக்கக் கூடாது.

"வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு"

என்று வரகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியது நம்முடைய செவிகளில் இப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. பாரதமாதாவின் மொழி 'ஹிந்தி' என்று மகாத்மா காந்தியின் உபதேசம். அதைத் தமிழர் நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். ஆனாலும் தமிழ் தான் நம்முடைய உயிர்நிலை. ஹிந்தியோ, ஏனைய மொழிகளோ அதைப் பின்பற்றியே இருக்க வேண்டும். யோகி சுத்தானந்தர் கூறுகின்றார்.

"நாட்டியக்கத்தால் தமிழ் இவ்வாறு புதுமை பெற்று வரும் போது, ஹிந்தி தமிழ் நாட்டிற் புகுந்தது. ஹிந்திக் கதைகள் தமிழரின் கற்பனைசக்தியை அதிகரிக்கச் செய்தன. இப்போது ஹிந்தி பள்ளிக்கூடங்களில் புகுந்துள்ளது. இதனால் வட நாட்டுக் கலையும் சேர்ந்து, தமிழ் விரிவடையலாம். சிலர், "ஹிந்தி புகுந்து தமிழை விழுங்கிவிடும்" என்கின்றனர். இரண்டிற்குமிடையே **"தமிழைப் பலபீமனுக்குங்கள்"** என்று நாம் சொல்லுகிறோம்......ஹிந்தி வந்ததனால் தமிழருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அது நல்லது தான். ஆங்கிலம், தமிழை விழுங்கியதுபோல ஹிந்தியும் நமது தாய்மொழியை விழுங்கிவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். ஆனால், தமிழர் விழிப்புடனிருந்தால், ஆங்கிலம், ஹிந்தி இரண்டையும் தனக்குப் பணிப்பெண்களாகக் கொண்டு, தமிழ்க் கலையுலகை ஆளலாம். நாம் பலசாலியாயிருந்தால், வீட்டில் புகுந்தவன் நமது கண்ணில் பொடி தூவாது விழித்திருந்தால், மோசம்போக மாட்டோம். தமிழை வளர்க்க ஆயிரமடங்கு வீரமுடன் தமிழர் இன்று முன்வர வேண்டும். இப்போதும் உறங்கினால் தமிழுக்கு மோசம் வரும். வெள்ளம் வந்துகொண்டுதான் இருக்கிறது. அதைத் தாண்டத் தமிழ்ப் படகை உறுதியாக்குங்கள்."

ஆகையால் சுதந்தரம், தேசியம், ஜனநாயகம் நிரம்பி யுள்ள இந்தப் புது யுகத்தில் நாம் தமிழ்ப் பண்பாட்டை அறிந்து வளர்த்துப் புதுமைப் படுத்த வேண்டும். நவயுக நன்மைகளை நாம் தமிழகத்தில் புகுத்த வேண்டும். இந்த உபதேசத்தைத்தான் யோகி சுத்தானந்தர், வசன நடை யாலும் செய்யுள் நடையாலும் மிக்க ஆர்வத்துடன் வற்புறுத்திக் கூறுகின்றார்.

"தமிழா, உலகம் முன்னேறி வருகிறது; நாடுகள் போட்டி போட்டு முன்னேறுகின்றன. தமிழா, உனக்குத் தமிழ் வெறி பிடிக்க வேண்டும். தமிழ்க் கனல் உனது உள்ளத்தில் ஏறவேண்டும். அக் கனலைக் கொண்டு தமிழுக்கு நேரும் தீமைகளை யெல்லாம் பொசுக்கி எறிய வேண்டும். அக் கன லிலே தமிழ்த் தங்கத்தைப் போட்டுருக்கி, இன்னும் மாற்றேற்றி, நமது தமிழ்ச் சமுதாய தேவிக்கு வெற்றித் திருமுடி செய்தணிவிக்க வேண்டும். தமிழா, விழித்துக் கொள்!"

"தலைநிமிர் தமிழா — பெற்ற
தாயின் மனங் குளிர
மலை குலைந்தாலும் — தமிழா
மனங் குலையாதே!"

"தமிழ்க் கனல் வளர்ப்போம் — எங்கும்
தமிழிசை யொலிப்போம்
தமிழகத்தினிலே — உலகின்
தாயகம் சமைப்போம்

ஞானச் சிங்காதனத்தில் — அன்னை
நன்று விளங்குகவே
வானச் சுடரணிகள் — மணி
மகுடஞ் சூட்டுகவே!"

பூச்செண்டு

வி. ஆர். எம். செட்டியார், B. A.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் சிந்தனைகளை யெல்லாம் நான் எப்போதும் ஒரு பூச்செண்டாகக் கட்டி அலங்கரித்து அனுபவித்து மகிழ்வதுண்டு; கதம்பத்தில் எவ்வளவு அருமையான வாசனைகள் கலந்து புரண்டு பறந்து வருகின்றனவோ, அதே போல சுவாமி களின் எழுத்திலும் நடையிலும், பன்மொழிப் புலமையால் சிருஷ்டி இன்பத்துடன் உதயமாகின்ற அற்புத இலக்கியப் பூங்காவை நம் கண்முன் கண்டு களிக்கும் பாக்கியமே கிட்டி விடுகிற தல்லவா?

அன்பு நிலய வெளியீடுகள் என்றாலே, தமிழ் நாட்டில் அவற்றிற்கு ஒரு தனி மதிப்பும், கௌரவமும் ஏற்பட்டிருக்கின்றன.

சுவாமிகள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்திருக்கும் தொண்டை எந்தத் தமிழனும் என்றும் மறக்கவே முடியாது! அவர்கள் எழுதும் நூல்களில், உலகமே முன்வந்து நிற்கிறது; உலகளாவிய விஷயங்கள் அனைத்தும் அப்படியே நம் கண்முன் வந்து நிற்கின்றன.

எழுதும் நடையிலே, ஒரு அபூர்வ எளிமையும் ஆழமும் கலந்து வருகின்றன; சொற்கள் இயற்கையாக அமைந்து விடுகின்றன; பண்டிதரின் கடு நடையை, இங்கே நாம் காணவே முடியாது. எத்தனையோ இலட்சம் பக்கங்கள், சுவாமிகளின் இதயப் போக்கில், புயல் வடிவில் அமைந்து விடுகின்றன.

சொந்த இலக்கிய சிருஷ்டிகளான நாவல்கள், நாடகங்கள், கவிதைகள், கதைகள், விமர்சனங்களிலே, சொந்த மனப்போக்கை ஒட்டியே நூல்கள் பிறக்கின்றன; சுவாமிஜியின் எழுதுகோல், இதய வெள்ளத்தையே ஓவிய மாகவும் காவிய மாகவும் சித்தரித்துக் கொண்டே போகிறது. அவர்கள் இதயத்தினின்று இலக்கியக் கடல் தங்குதடை யின்றிக் கும்மாளி போடுகிறது; சிந்தனை அலைகள் பன்மொழிச் சிறகுடன் கைகொட்டி ஆரவாரிக் கின்றன; உலக மொழிக ளெல்லாம், ஒன்றுகூடி ஒலிப்பது போன்ற பேரொலி கேட்கின்றது.

சிறந்த மொழிபெயர்ப்புகளும் செய்திருக்கிறார்கள் சுவாமிகள்: விக்டர் ஹ்யூகோ நாவல்களை 'ஏழை படும் பாடு—இளிச்சவாயன்' என்ற தலைப்பில் அருமையாகத் தமிழாக்கித் தந்திருக்கிறார்கள்; தாந்தேயின் திருக் காட்சியை, எவ்வளவு அற்புதமாகத் தமிழில் தந்திருக்கி றார்கள்!

சிதம்பர கீதம் — தேவ கானம்—சாதன கீதம்—மாணிக்கப்பாட்டு போன்ற இசை நயமுள்ள நூல்கள் எவ்வளவு அருமை யாக அமைந்திருக்கின்றன! சுவாமிகளின் சாகித்யங் களை, பல கச்சேரிகளிலும், ரேடியோவிலும், கிராம போனிலும் பல சங்கீத வித்துவான்கள் இன்ப உச்சியில் பாடிப் பாடித் தமிழுலகத்தையே இன்புறச் செய்கிறார்கள் அல்லவா?

இன்றைய தமிழ் மறுமலர்ச்சியில், ஏராளமான எழுத்தாளர்கள் இருப்பதற்குக் காரணம்—சுவாமிகளே! சுவாமிகளின் நூல்களைப் படித்த பின் தான், புதிய எழுத்தாளர்கள் தோன்றி ஆவேசத்துடன் எதையும் தமிழில் எழுதலாம் என்ற நம்பிக்கை கொண்டு எழுது கோலை உறுதியாகப் பிடிக்க முயன்றிருக்கிறார்கள்.

சுவாமிகளின் எளிய இனிய வசன நடையின் காம்பீர்யத்தை, இன்னும் ஒருவராலும் கையாள முடியவில்லையல்லவா? இதில் ஏதாவது சந்தேக முண்டா?

சுவாமிகளின் ஆங்கில நூலான 'REVELATIONS OF St. MEIKANDAR' மிக மிக அருமையாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது; இதன் கருத்தும் நடையும் ஒப்பற்ற முறையில் அமைந்திருப்பதால், உலக மொழிகள் எல்லாவற்றிலும் இந்த நூலை மொழிபெயர்க்க வேண்டியது மிக மிக அவசியம்; 'YOGA OF SRI AUROBINDO' என்ற நூல் அமெரிக்காவில், ஆனந்தமாக எங்கும் பரவி வருகிறது. என்ன கருத்து, என்ன நடை! இப்படியும் ஆங்கிலம் எழுத முடியுமா? கருத்தின் எழிலும், மொழியின் ஆற்றலும் ஒரு மேதையின் சிருஷ்டிச் செல்வத்தை எடுத்து விளக்கவில்லையா? இது தானே மேதை!

சுவாமிகளின் கவிதை மின்னலை, 'கவிக் கனவுகள்' என்ற நூலில் கண்டு களிக்கிறோம்.

"அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம்,
அழகுச் சோலையில் அன்புறக் கூடுவோம்,
அழகின் இன்பத்தை ஆருயிர்க் கூட்டுவோம்,
அழகை வாழ்வெனும் வீணையில் மீட்டுவோம்.

இய லழகை யிலக்கியம் ஆக்குவோம்
இயற்கை யுள்ளத்தில் இன்னிசை காணுவோம்;
இய லுணர்வைச் சிலையில் இலக்குவோம்,
எழுது வோம்பட மாய்இயல் வாழ்க்கையை."

ஆகா! எப்படிப்பட்ட இன்பச் சித்திரங்கள்!

சந்திப்பு

தங்கம்மாள் பாரதி

நான்கு புறமும் மரக் கூட்டம்; நடுவில் ஒரு கற்பாறை. எங்கிருந்தோ காற்று மஞ்சனாரத்தம்பூவின் மணத்தையும் இலுப்பைப் பூவின் மணத்தையுங் கலந்து கொணர்ந்து வீசியது. சுற்றிலும் உள்ள பனை மரத்தி லுள்ள ஓலைகள் சலசலத்தன. கள் இறக்கும் சாணூரும், நுங்கு வெட்டும் பெண்களும் பனைமரத்தடியில் உட்கார்ந்து ரசமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். தங்கள் செப்புக் குடத்தைத் தேய்ப்பதற்குப் புளியிலை யைப் பறிக்கும் பிராமணச் சிறுமிகளும் அங்கு நின்றனர். புளியங்காயைப் பறித்துத் தின்ற இடைப்பையன்களும் உலக நினைப்பேயின்றி உல்லாசமாகத் திரிந்தனர். மணல் மேடுகளும், சிற்ருறும், இளவெயிலும், மலைக்கூட்டமும், மரச்செறிவும் மனிதர் மனத்தைப் பரவசப்படுத்தக் கூடியனவா யிருந்தன.

அப்போது எனது தந்தையுடன், 'யோகி போன்ற' ஒரு நண்பர் பேசிக்கொண்டிருந்தார்.

அந்த நண்பர் ஏதோ பாடினூர். பிறகு இருவரும் தேசம், தமிழ், சுதந்தரம், யோகம் என்று பேசினர்.

அவரைச் சுருக்கமாக வர்ணிக்கலாம். கண்ணிலே நல்ல குணம். தமிழார்வத்தினல் பரபரக்கும் மனம். இனியும் தாமத முண்டோ! அவ்விருவரும் தழுவிக் கொண்டனர்-ஒரு தந்தையும் மகனும் போல. கற்ருேரைக் கற்ருேரே காமுறுவது இயல் பல்லவா? அவர்கள் தம்

மனம் விட்டு உணர்ச்சி ததும்பப் பேசலாயினர். தங்கள் சொந்த விஷயங்களேயா? அன்று. அகில உலகத்திற்கும் ஆக்க வேலையைப் பற்றியே பேசினர்!

இரவு; நல்ல நிலா—இன்னும் பேசினர்; எவ்வளவு நேரங் கழிந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது. தமிழ்த்தாய் அந்தர்யாமியாக நின்று அவ்விருவரையும் ஆசீர்வதித்தாள். தந்தையார் "விட்டு விடுதலை பெற்றிடுவாய், அந்தச் சிட்டுக் குருவியைப் போலே" என்று பாடினார். பாட்டு முடிந்ததும், "காற்றைப் போலக் கட்டின்றி வாழ்வோம்" என்று கூறி அந்த நண்பர் தந்தையாரிடம் விடைபெற்றுக் கொண்டு குற்றாலத்தை நோக்கி விறுவிறுப்பாக நடந்தார்.

குறிப்பு:— மேலே கூறப்பட்டவர்களே, கவி சுப்பிரமணிய பாரதியாரும், சுவாமி சுத்தானந்தரும்! கடையம் ஆற்றங்கரைக்கு அடுத்த தோப்பில்தான் அவ்விருவரும் முதன் முதலாகச் சந்தித்து, தமிழ்த் தாயின் சேவைக்கு உபாயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அவ்விரு கவிகளின் லட்சியங்களும் இந்நாளில் நிறைவேறி வருகின்றன.

தமிழின் தவப் புதல்வர்

புலவர்மணி ஜி. சுப்பிரமணிய பிள்ளை

தமிழுக்கு நல்ல காலம் வந்திருக்கிறது என்று நாம் எல்லோரும் பேசுகின்றோம். அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்ற ஒலி எழுந்த நாள் முதல், தமிழ் முழக்கம் செழித்துத்தான் வருகிறது. அவ்வாறு செழிக்கச் செய்யும் தொண்டினைப் பலர் பலவாறு கைக்கொண்டனர். சிலர் பொன்மாரி பெய்து தமிழைப் புரந்தனர். புத்தம் புதிய நூல்கள் பல எழுந்தன. சிலர் சொன்மாரி பொழிந்து பேச்சோடு நின்றனர். எனினும், தமிழை வளர்த்த பெரியார் வரிசையில் தலை சிறந்த இடம் பெற்று விளங்குகின்றவர்கள் அடிகள் சுத்தானந்த பாரதியார் ஆவார்கள்.

இன்று தமிழ் உலகில் 'சுத்தானந்த பாரதியார்' என்றால், அது ஒரு தனிப்பட்ட மனிதரைக் குறிப்பதோடு நின்று விடாது. தமிழ் நாட்டில் அவர்கள் ஒரு நிலையமாய்த் திகழ்கின்றார்கள். அவர்கள் ஒரு நூல் நிலையம், அன்பிற்கு அச்சாணி; கலைக் களஞ்சியம், கவிக்குக் காமதேனு, கல்விக் கடல், தவக் கொழுந்து, தமிழ்க் கனல், துறவுக்குத் தூண். இவ் வடிகளாரின் பெருமை தமிழ் அளந்த நாடெல்லாம் இமிழென்றிசைத்து இலங்கா நிற்கும். அன்னாரை அறியாதார் தமிழ் நாட்டில் இல்லை அவர்கள் எழுதிக் குவித்திருக்கும் நூல்கள் எண்ணற்றன. அவையே ஒரு தனி வாசகசாலையை நிரப்பிவிடும். அவர்கள் சலியாது உழைக்கும் சதுரப்பாடுடையவர்கள். அவர்கள் தாய் மொழிக்கும், நாட்டிற்கும், மக்களுக்கும்,

உலகிற்கும், ஆண்டவனுக்கும் தளராது தொண்டியற்றும் வீரம் படைத்த விழுமியோர் ஆவார்கள். அவர்கள் வைகலும் தமிழ் அன்னை வகை வகையாய் அணிவதற்குச் சொன் மாலைச் சுடர்க் கலன்கள் தந்துதவும் பணி பூண்டுள்ளார்கள். அவர்கள் எழுதிவரும் கவியும் கட்டுரையும் சுவை பெறு நல்வளநூலும் தமிழ் அன்னை விழைந் தணியும் பொற்கலனும்.

அவர்களைக் கருவிலே திருவுடைய ஒரு கவிஞர் பெருமான் எனல் மிகையாகாது. அவர்களுடைய பாமாலைகள்,

"மதி நிலவினிலே—தூய
மவுன நிசியினிலே
பதியன்பி லுதிக்கும்—அருட்
பாசுரங்கள்"

என்பது உண்மை.

அவர்கள் அருணச் சோதியிலே அழகை அள்ளி யணைந்த பெரியார். அல்லும் பகலும் அநவரதமும் அவர்கள் சொல்லும் பொருளும் ஆய்ந்தாய்ந் துணர்ந்து, "தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே, அமுதே, அழகே, அன்பே அருளே" என்று அஞ்சலிக்கும் தமிழ்த் தலைமகனர். சிலர் "தமிழ்! தமிழ்!" என்று முரசறைந்து தமிழர் வாழ்வுக்கே உலை வைத்து விடுவார்கள். அச் சிற்றினத் தோர் தன்னலப் புலிகள். ஆனால் நமது அடிகளார் வேங்கையும் துரும்பெனக் கருதும் தவச் செல்வர். அவர்கள் கொண்ட தமிழ்ப் பற்று தமிழ் மக்களிடத்தும் கவிந்து, இழைந்து கனிவுறுவ தாகும். தமிழர் பெரு வாழ்விலேதான் தமிழுக்கு ஆக்கம் என்பதை ஐயமறக் கண்டனர். அதனால் அவர்கள் உள்ளம்:

"தமிழன் பசிக்கத் தமிழர் புசியோம்
தமிழன் வருந்தத் தமிழர் சகியோம்"

என்று மின்னி இடித்து முழங்கக் காணலாம். தமிழருக் கெல்லாம் தமிழே ஆவி என்பதை ஓர்ந்துணர்ந்த இப் பெரியார்,

"தமிழ னெவனுந் தருமந் தவறினால்
தமிழ்மர பிற்கே தாழ்வு செய்தோனும்"

என்று வற்புறுத்தி நினைவூட்டும் பெற்றி கருதற்பால தொன்றும்,

அடிகளின் தமிழ்ப் பற்றுக்கு ஓர் எல்லை யில்லை. தமிழே அவர்கள் கண்கண்ட தெய்வம், அவர்கள் குல விளக்கு, ஏன்,—அவர்கள் உயிர். அவர்கள் உடலம் புதுவைக் கடிமதில் வரைப்பினுள்ளே ஒதுங்கி ஒடுங்கி னும். ஓடிவின்றி ஒளிரும் அவர்கள் உள்ளமானது பண்ணிற் பிணைத்த கவிச் சிறகால் வீறிட் டெழுந்து விண்ணையும் மண்ணையும் குலாவி மகிழ்கிறது. தமிழ் மொழி உலகை ஆளவேண்டும், தமிழகம் உலகத் தாயக மாக வேண்டும் என்பதே அவர்களின் கவிக் கனவு.

"தமிழகத்தினிலே—உலகின், தாயகம் சமைப்போம்"

அவர்கள் தமிழைப் போற்றும் திறனை, அவர்களின் தீஞ்சுவை சொட்டும் தேன் சொற்கள் கொண்டே சுவைத்துக் காண்பாம் :

"தமிழே யெனது தாரகத் தாய்மொழி
தமிழர் அனைவரும் சமரசக் குடும்பம்
தமிழுல கெனது தங்கக் கோயில்
தமிழ்ப்பணி யெனது சலியா மூச்சு
தமிழ ரனைவருந் தகைமிகு தோழர்

தமிழ்த்தாய் எனது சக்தித் தெய்வம்
தமிழுணர் வேயென் தளராப் பூசனை
'எந்தாய் வாழ்க' மந்திர மெனக்கே.

* * *

முத்தி யெமக்குநீ முடிபுனை நாளே"

முத்தமிழ் முடிதரிக்கும் நாளே அடிகள் முத்தி பெறும் நாளாம். என்ன அருமை! இதைத் தித்திக்கப் பாடிய சித்தமழகிய சுத்தானந்தரை வியப்பதை யன்றி விளம்ப வேறுளதோ? இதை நித்தலும் ஓதுவார் பெரும் பயன் எய்துவர் என்பது ஒரு தலை. இப்பாடலின் அடிகள் இளங்கோவடிகளைத் தான் நமக்கு நினைவூட்டுகின்றன.

தமிழிசையின் ஆக்கத்திற்கும் நமது அடிகளார் அரும்பாடு பட்டு வருகிறார்கள். அவர்கள் எழுதியுள்ள "தமிழிசை முழக்கம்" அவர்களது இசையுணர்வை நன்கு விளக்கும். புதிய மெட்டிலே தமிழிசைக் கீர்த்தனங்களும் பல பாடித் தந்துள்ளார்கள். அவை அத்தனையும் இசை யமுதம். சொல்லை அளந்து சுவையை யூட்டி, ஆர்வக் கனலுள் அளைந்தெடுத்து அமுதம் தோய்த்த அழகுப் பாடல்கள். வேதங்கள் 'அண்ணு'வென வோங்கி ஆழ்ந் தகன்ற நுண்ணியனை;

"இல்லை யென்பான் யாரடா?—என் அப்பனைத்
தில்லையிலே பாரடா!"

என்று கல்லும் கசிந்துருகக் கருணைச் சுடரொளியை எளிதில் எடுத்துக் காட்டுகிறார்கள். நேரே யிருந்து பேசுவது போல் இல்லையா இந்தப் பாடல்? என்ன வேகம்! ஒரு வேளை கோபமாய் இருக்குமோ? இல்லை. மடமையைப் போக்க மடிதற்று முன்வருகிறார்கள்!

அவ்வளவுதான்! அவர்கள் பாடிய "சிதம்பர கீதம்" நமக்கு இதந்தரு வேதமாய்த் திகழக் காணலாம். இப்பொழுது இக் கீர்த்தனங்களை இசையரங்குகளில் அதிகமாகப் பாடி வருகிறார்கள். சொற்சுவை, பொருட் சுவை செறிந்த அவர்கள் பாடல்கள் நம் உடலுக்கும் உயிருக்கும் உறுதி பயப்பன வாகும்.

ஆனால் இவர்கள் "தமிழ்! தமிழ்!" என்று தவிப் பதிலிருந்து, அவர்களுக்குத் தமிழ் மட்டுந்தான் தெரி யுமோ என்றால், அப்படியில்லை. அவர்களுக்குத் தெலுங்கு, சம்ஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பல மொழி களும் தெரியும். அவற்றில் சிறந்த பாண்டித்தியமும் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் எழுதியுள்ள "மகா கவி தாந்தே", "வரகவி தாகூர்", "மகா கவி ராஸின்"; "புதுக் கவி விட்மன்", "ஞானி எமர்ஸன்" போன்ற நூல்களைப் படித்தால் இவ்வுண்மை தெரிய வரும. ஆங்கிலத்திலும் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். ஆழ்வார்கள், மெய் கண்டார், தாயுமானார், இராமலிங்கர் போன்ற பெரியார் களைப் பற்றிய அவர்களது ஆங்கில நூல்கள் படிப்ப வருக்கு அருளொழுகுந் தேனாய்த் தித்திக்கும். அவர்கள் பிற மொழிகளையும் அழுந்திக் கற்றதின் பயனாகவே தமிழினிடத்தே தணியாவேட்கை கொண்டுள்ளார்கள். நிழலின் அருமை வெயிலிற் சென்று தெரிவதை யொப்ப தமிழின் உயர்வையும் பிறமொழிப் பயிற்சியாலே நன்கு அறியலாம்.

தமிழ் இலக்கியத்தையும் அவர்கள் அம்மியிட் டரைத்தே விம்மிதங் கொள்ள விழுங்கினர் கொல்லோ என்று நாம் இறும்பூது எய்தும் வண்ணம் கற்றிருக் கிறார்கள். சங்க இலக்கியம், கம்ப ராமாயணம், திரு முறைகள், பிரபந்தங்கள், திருக்குறள், திருமந்திரம்,

திருவருட்பா இவற்றில் எல்லாம் அடிகளுக்கு அளவுக் கடங்காத ஆர்வம் உண்டு. அவர்கள் எழுதியுள்ள "திருக்குறளின்பம்", "வள்ளலார் சரித்திரம்", "திருமந்திர விளக்கம்" போன்ற நூல்களே தக்க சான்று பகர்வன வாகும். கம்பன் கவிதையைக் கலக்கிக் குடித்துக் களித் தாடுங் கூத்தாக, "ஸ்ரீ ராமதூதன்" என்ற நாடகத் தாலும் எழுதியிருக்கிறார்கள். கம்பனை நினைத்து விட் டால் அவர்கள் இதயத்திலே ஓர் இன்பக் கனல் வெறி ஏறுமாம்; கலைபூத்த போகக்கனி ரச வெள்ளம் பொங்கு மாம்; வாழ்விலே மங்கலப்பண் முழங்குமாம்; நாடியில் மகர யாழொலி கேட்குமாம்; சித்தமோ செய முரசு கொட்டுமாம்; செந்தமிழும் சிங்க நாதம் புரியுமாம். என்ன சித்திரம்!

வரகவி அடிகள் சுத்தானந்த பாரதியார் தமிழன்னை யீன்ற தவப்புதல்வர். அவர்கள் நீடுழி வாழ்ந்து நமக்குத் தமிழ் உணர்ச்சி ஊட்டுவார்களாக!

மகான் தரிசனம்

எஃப். ஜி. நடேச ஐயர்

"**மா**முனிவோர் பலர் வாழ்ந்த நன்னாடு" நமது நாடு. அம் மாமுனிவோர் சந்ததியில் இன்றும் சச்சிதானந்த சொரூபியாய், பராசக்தி வடிவாய் நின்மல மூர்த்தியாய் புதுவை ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்தில் விளங்கி வருகிறார் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

நான் மகாத்மாஜியை சென்னையில் தரிசித்த உள்ளுணர்வோடு புதுவை சென்றேன். அன்று மாலை புதுவையில் அடியேனுக்கு ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் தரிசன பாக்கியம் கிடைத்தது. அது எனக்கு என்றும் மறக்க முடியாத சம்பவம். "தரிசனம் கிடைப்பது துர்லபம்; பல நாட்களுக்கு முன் எழுதி அனுமதி பெற்று, குறித்த நாளில், குறித்த நேரத்தில் சென்றால் தான் தரிசனம் கிடைக்கும்" என்று எச்சரித்தார்கள். ஆனால் அன்புக் களஞ்சியமான சுவாமிகள், வெளியூரிலிருந்து தரிசனம் கோரி வந்திருக்கும் ஒருவனுக்குத் தரிசன மளிக்காம லிருக்க முடியாது என்ற நம்பிக்கையுடன் ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்தை யடைந்து, ஒரு ஆசிரம உறுப்பினரிடம் ஒரு துண்டுக் கடிதத்தில் சுவாமிகளின் தரிசனத்தைக் கோரி, எழுதி யனுப்பினேன். ஐந்தே நிமிஷத்திற்குள் உத்தரவு கிடைத்து விட்டது! என் ஆனந்தத்திற்கு அளவே இல்லை! படங்கள் மூலம் சுவாமிகளுடைய முகம் என் மனதில் நன்கு படிந்திருந்தது! இருப்பினும் படத்திற்கும் நேர் முகமான ஸ்வரூபத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் பொதுவாக உண்டு. 'எப்படி யிருக்குமோ தோற்றம்; என்ன சொல்வாரோ, என்ன சொல்லுவது, என்ன கேட்பது'

என்ற ஐயப்பாடுகள் மனதில் ஒரு விநாடிக்குள் எவ்வளவோ உதித்தன. ஆசிரமவாசி எனக்கு வழி காட்ட, நான் பின்னே சென்றேன்.

நடுவில் அழகிய சோலை. எங்கும்சாந்தம்; நிசப்தம். மலர்களின் மணம்; மங்கலான ஒளி. தேவலோகத்தில் செல்வது போலிருந்தது. ஆஸ்ரம மாளிகையின் ஒரு பக்கத்தில் அடிவாரத்தில ஒரு அறையின் பலகணியண்டை நெருங்கினதும, என்கூட வந்தவர் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று நமஸ்கரித்ததும், 'சடார்' என்று கதவு திறந்தது. மின்சார விளக்கொன்று பிரகாசித்தது. அதன் பின், புன்னகை பூத்த — திவ்விய தேஜோன்மயமான முகம் தரிசனம் அளித்தது! பிரமித்தேன். உடனே, என்முன் தோற்ற மளிக்கும் மௌன ஸ்வரூபம், நான் தரிசனங்கோரி வந்த மகாத்மா, க்ருபாமூர்த்தி, அன்புக் களஞ்சியம் ஸ்ரீ சுத்தானந்த பாரதி ஸ்வாமிகள்தான் என்று கண்டு கொண்டேன்; புளகாங்கித மானேன். ஆம், படத்தில் நான் பார்த்து என் மனதில் படிந்திருந்த ஸ்வரூபந்தாம். படம் ஜீவனில்லாதது; இங்கே ஜீவனுள்ள உருவம். அதே சிகை, இரு தோள்களினின்றும் சிரசிலிருந்து இரு பிரிவாக மார் பகத்தில் பரமசிவன் ஜடையிலிருந்து வரும் கங்கை போல், கருணை யருவிகளாகக் காட்சி யளிக்கின்றன. இரு நயனங்களும் இரு சூரியன்கள்போல் ஒளி வீசுகின்றன. அவைகளில் ஈஸ்வராம்ஸமும், அன்பும், அபயக்குறியும் காணப் படுகின்றன. முகத்தில் சாந்தமும், ஆனந்தமும், அளவிலாப்ரேமையும் நிலவுகின்றன. செந்தாமரை நிறம் மேனி முழுதும் பரவி ஸ்வர்ண விக்ரகம் போலிருக்கிறது சுவாமிகளின் திருவுருவம்!

கைகூப்பி, நமஸ்கரித்து, தழுதழுத்த குரலில் என் வந்தனத்தையும் க்ருதக்யதையையும் கூறி, பெரியாரின்

ஆசியைக் கோரி நின்றேன். புன்னகையுடன் சிரசை யசைத்து ஆசிர்வதித்தார் ஸ்வாமிகள் தனது திருக்கரங்களால். தலைவணங்கி நின்றேன்; நிமிர்ந்தேன். அத் திவ்ய தரிசனத்தை மறுபடியும் அடைந்தேன். திடீர் என்று மின்சார வெளிச்சம் மங்கியது. 'சடார்' என்று கதவு மூடிற்று. தரிசனம் முடிந்தது. சுத்தானந்த பாரதி ஸ்வாமிகள் என் உள்ளச் சிம்மாசனத்தில் இடங்கொண்டு விட்டார்!

வற்ருத தமிழூற்று

கே. வி. வீரராகவன்

ஆமாம்! ஐயரவர்கள் அளித்த இந்தப் பொன்னுரை , சுவாமி சுத்தானந்த பாரதியார் விஷயத்தில் எவ்வளவு பொருந்தியிருக்கிறதென்பது நாம் எண்ணி யெண்ணி இறும்பூதெய்த வேண்டிய விஷயம். டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் "ஸ்ரீ பாரதியார், தவம் பெற்ற தவம் ஆவார். இந் நூலிலிருந்து அவர்கள் ஒரு வற்ருத தமிழ் ஊற்று என்பது புலப்படும்" என்று யோக சித்தியின் அணிந்துரையில் கூறுகின்ருர்கள். இந் நூலில் மட்டுமின்றிப் பலதிறப்பட்ட நூல்கள் பலப்பல தோற்றுவிக்கும் ஆற்றலிலும் பாரதியாரின் ஊற்றுத் தன்மை வெளிப்படுகிறதென்பது எனது துணிபு.

பாரதியார் பல துறைகளில் புகுந்தாலும், தொட்ட தெல்லாம் பொன்னுக்கும் ஆற்றல் பெற்றவர். இது வெறும் புகழ்ச்சியல்ல வென்பதை நிரூபிப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

குழந்தைப் பாடல்களின் இன்ப ரசத்தைப் பருக உங்களுக்கு விருப்பமா? "வாவா மயிலே வனக்குயிலே போவோம் காலை பூஞ்சோலை" என்று இப்போது எங்கு கண்டாலும் குழந்தை யுலகில் முழங்கும் இந்தக் கோரஸ் பாட்டைக் கேட்டால், நாம் குழந்தைகளா யில்லையே என்று ஏங்க வேண்டிய தில்லையா? கதை கேட்பதில் குழந்தைகளுக்கு உள்ள பிரியத்தைப் பழைய பாட்டிக் கதைகள் சொல்லியே பொழுது போக்காமல் சிவாஜியின் வீரக்கதைகள் சொல்லி எதிர்கால வீரர்களை வீறுகொண்டு

எழச் செய்ய உங்களுக்கு விருப்பமா? புலி மருதுவையும் சந்தனத் தேவனையும் வீரப்பனையுங் குறித்து, சுத்தானந்தரின் கதைகளைச் சொல்லிச் சொல்லி நீங்களும் குழந்தைகளுடன் இன்புறலாம்; குழந்தைகளும் "சவாசண்ணே" போட்டுக் கேட்பார்கள். சிறுகதை இலக்கியம் இன்று தமிழ்ச் சிகரமாய் விளங்குகிறது. ஆனால் உயரிய நோக்கங்களைக் கொண்டு, அரிய கருத்துக்களைப் புகுத்தி எழுதப்படும் சிறுகதைகள் சிற்சிலதான் இன்று இருக்கின்றன. சுவாமி சுத்தானந்தரின் 'கதைவிருந்தும்' பிற சிறு கதைகள் அனைத்தும் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. இந்த நாட்டின் வீரர்களை மட்டுமின்றி உலகத்து உத்தமர்களின் சரித்திரத்தைக் கண்டு களிக்க உங்கள் உள்ளம் விழைகிறதா? கர்ம வீரன் கரிபால்டி, சுதந்தர வீரன் மஸ்ஜினி, முதலியோரைப் பற்றிய பாரதியாரின் கட்டுரைகளைப் படியுங்கள்! தேசப் பயிற்சியில் தேட்டமுண்டா? உடலுறுதியைப் பாருங்கள்.

விஞ்ஞான விளக்கம் வேண்டுமா? கதிரியைக் கண்டு பிடித்த அற்புதப் பெண்மணியான மேரி—கூரி வரலாற்றை ஒரு முறை புரட்டுங்கள். பிறநாட்டு நல்லறிஞரின் நலமிக்க சொற்கள் வேண்டுமா? பாரதியார் எழுதிய ஏனைய எண்ணற்ற நூல்களில் "ஏழை படும் பாடு" என்னும் நாவலும், புதுக்கவி வால்ட் விட்மன், தாந்தே, ராஸீன், எமர்ஸன் முதலியோரது பொன்மொழிகளின் மணமிக்க மொழிபெயர்ப்புகளும் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்னும் பழமொழியை மெய்ப்பிக்கின்றன.

கவிதைகளில் "தமிழ்க் கனல்" நம்முள் அன்புத் தீயை மூட்டி, ஆர்வமென்னும் அமுதம் அளிக்கும் தன்மையது. இன்னும் பல பாடல்களில் அவரது பாநயத்தைப் புலவரும் போற்றி வியக்கலாம். "முருகன் காதல்" என்ற

பாட்டில் இந்த இரண்டு வரியைப் பாடிப் பாருங்கள் பாராட்டாமல் இருக்க முடியுமா என்று? "முத்துமுகம் பருகி—முருகா உன் மோகத்திளுலுருகி—மனப்—பித்துப் பிடித்ததடா — முருகா இந்தப் பேதைக்கருள்புரிவாய்"

இப்போதெல்லாம் சுய சரிதம் எழுதுவது ஒரு தனிக் கலையாகத் தமிழில் பரவி வருகிற தல்லவா? பாரதியாரும் தம் சுயசரிதத்தில் சில பகுதிகள் நமக்கு அளித்திருக் கிருர்! 'கம்பன்கூட எங்கள் ஊரில் வசித்தான்; நான்கு மைலுக்கு அப்பாலுள்ள நாட்டரசன் கோட்டையிலே தான் அந்தப் பாட்டரசன் அடங்கிளுன்' என்று தொடங்கி "எங்கள் ஊர்" வரிசையில் தனக்குக் கல்வி, கலை, கவிதை, நாட்டன்பு, வீரவுணர்ச்சி, யோக சாதனம் தெய்வத் திருவருள் எல்லாம் அளித்த வீரமறவர் நில மாகிய சிவகங்கையைப்பற்றி அவர் எழுதியிருப்பதுபாரதி யாரின் சுய சரித்திரத்தின் முதற் பக்கமாய் அமையவேண் டும் என்பது என் விருப்பம். "நான் கண்ட ராஜாஜீ" என் னும் கட்டுரை வரிசையும் சுயசரித வகுப்பில் சேர்க்க வேண்டியதே. இப்படியே எழுதிக்கொண்டு போளுல் இந்தக் கட்டுரை ஒரு புத்தகமாய் வளர்ந்துவிடும். என் னைப் போன்ற புல்லறிவாளருக்கு எட்டாத பரம்பொருள் விளக்கமான "சிவஞான தீபம்" முதல் அரசியற் சந்தை யில் நடைபெற்ற அந்த, இந்திச் சண்டைவரையில் சுத்தா னந்தர் தொடாத விஷயமே இல்லை. மேலும் நான் குறிப் பாகக் கூறவேண்டியது அவர் பிறநாட்டாருக்குத் தமிழை அறிவுறுத்தும் அற்புதத்தைத்தான். மகாத்மாராமலிங்கத் தை வடநாட்டார் அறியச் செய்த பெருமை அவரையே சாரும். ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் ஆங்கிலங் கற்ருேர் அறியும்படி செய்தது பெருந்தொண்டன்ருே? துளசிதாசையும், துகாராமையும், சைதன்யரையும் நாம றிந்த அளவு சங்கராச்சாரியார் ஒருவரைத் தவிர வேறு

ஆச்சாரியார்களைப் பற்றி வடநாட்டினர் அறியாததேன்? தமிழர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் ஆற்றலுடன் அவர்கள் போதனையைப் பரப்பாத குற்றத்தாலல்லவா? இத்துறையில் இன்னும் எத்தனையோ சுத்தானந்தர்கள் தோன்றவேண்டும் என்பது என் துணிபு.

சுத்தானந்தரின் நடையை அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் படித்தவர்கள்தான் விமரிசனம் செய்ய வேண்டும். ஆனால் அவை அனைத்தையும் படிக்க நம்மில் எத்தனை பேருக்கு அவகாசம் இருக்கும் என்பதே சந்தேகந்தான். எல்லாம் படித்தாயிற்று என்று நீங்கள் இறுமாப்புக் கொண்டால், நாளைக்கே மற்றொரு புத்தகம் தோன்றிவிடும்! இவற்றைச் சலிக்காது எழுதித் தரும் அந்த அலுக்காத தொண்டைத் தான் "வற்றாத தமிழ் ஊற்று" என்று நான் புகழ்கிறேன்.

இந்த ஊற்றுநீரின் சுவையில் நவரசங்கள் நிரம்பியிருக்கின்றன. அங்கங்கே பலவிடங்களில் ஹாஸ்யம் மிளிர்கிறது. பெண்களைப் பற்றி ஓர் இடத்தில் "கூச்சமும் நாணமும் குழந்தைப் பெறுகிறவரையில் தான். அதற்கும் முன்னால்கூடச் சிலர் தொண்டைக்குச் சாவி கொடுத்துச் சுருதியை ஏற்றத் தொடங்கிவிடுவர். மாமியாருக்கும் மாட்டுப்பெண்ணுக்கும் பூனைச் சண்டை நடக்கும்; புலிப்பாய்ச்சலும் நடக்கும்" என்ற வருணனையைப் பாருங்கள்.

இந்த மின்வெட்டிலும் ஒரு முன்னேற்றம்! இதே போல் யோக சித்தி முதலிய நூல்களில் குறுகத் தரித்த குறள்கள் காண்பது புதிதல்ல; ஆனால் சிறுகதைகளிடையே தோன்றும் இச்சிறுவாக்கியங்களின் ஆழ்ந்த கருத்தைக் கண்டு நாம் வியக்காமல் இருக்கமுடியுமோ? "நங்

கையைக் கெடுத்தது நகை, பையனைக் கெடுத்தது பள்ளிக்கூடம்; குடியைக் கெடுத்தது கோணல் எழுத்து" என்ற நகைச்சுவை கலந்த உண்மையைப் பாருங்கள். அல்லது "ஆண் அறிவு, பெண் அன்பு. ஆண் அமைதி, பெண் இன்பம் அழகு. ஆணும் பெண்ணும் புத்தியும் இதயமும் போலே. இருவர் இன்பக் கலப்புத்தான் உலகம். வாழத் தெரிந்தால் மனையே முக்தி" என்ற உயரிய வேதாந்த உண்மையைத் தான் பாருங்களேன்.

முக்கியமாக அவர் நடையில் காண்பது எளிமை, இனிமை, மிடுக்கு, மின்வெட்டு, சின்னச் சின்ன வாக்கியங்கள்; அவற்றையும் பிரித்துப் பிரித்து அனேகம் அரைப் புள்ளிகள். படித்தால் பாட்டை ரசிப்பதுபோல் மளமள வென்று முன்னேறும் நடை. மின்வெட்டுப்போல் அங்கங்கே ஆணித்தரமான அறைதல். இவைதான் இவர் நடையில் நான் தனிப்பட எடுத்துக்கூற முடியும். சிலம்புச் செல்வமும், கதை விருந்தும் நடையில் எவ்வளவு வேறுபாடுள்ளவை என்று உணர்ந்தால் அவர் நடையைப் பாகுபடுத்திக் கூறுவது கடினம் என்பது புலப்படும். நவீன அறிவியல் சாதனப் பொருள்களை எவ்வளவு எளிதில் பாரதியார் எடுத்தாள்கிறார்: "வாழ்வு என்னும் மின்மீட்டியில் (Battery) ஆண்மை என்னும் ஆகுமின்னல் பெண்மை என்னும் ஏகு மின்னலை புல்ல வேட்கிறது" என்ற திருக்குறளின்ப விளக்கம் படிப்பவர்கள், அறிவியல் முதலிய ஆங்கிலக் கூறுகளுக்குத் தமிழ்ச்சொல் கிடையாதென்று கூற முற்படுவரோ? விஞ்ஞானத்தைக் குறித்த நூல்களுள் இத்தகைய சொற்கள் இருப்பது விசேஷமன்று. இலக்கியத்திலும் இதே போன்ற சொற்களைப் பரப்பி அவற்றைப் பொதுவாக்கும் ஆற்றல்தான் மிகவும் போற்றற்பாலது.

முடிவாக என் குறையையும் தெரிவித்துக் கொண்டு இதை முடித்துவிடுகிறேன். இவ்வளவு எழுதும் பாரதியாரை நாம் பேசிக் கேட்கமுடியாதது தமிழ் நாட்டின் துரதிருஷ்டமென்றே நான் கருதுகிறேன். யோக சாதனங்களின் சக்தியையும் மோனத்தின் உயர்வையும் நான் அறிந்தவனல்லன். ஆனால் சுத்தானந்தர் போன்ற தலைவர்கள் சிந்தனைச் சுடருடன் பாமரரிடையே கலந்து பேசினால், நாட்டிற்கு நலன் ஏற்படுமென்பது என் துணிபு. இன்று நான் காணும் பல மேடைப்பிரசங்கங்களில் பேச்சு தானாக வருவது; சிந்தனைக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்ற எண்ணம் பரவிவருகிறது. சுத்தானந்தர் பேச முன்வந்தால், எழுதுவதுபோல் பல துறைகளில் பேச அவர் ஆரம்பித்தால் இந்த எண்ணம் ஒழியும். வெகுசீக்கிரத்தில் நிலைக்கப் போகும் சுதந்தர இந்தியாவிலாவது இந்தபாக்கியம் நமக்குக்கிடைக்குமா?

ஆறுதலும், கிளர்ச்சியும்

வை. மு. ஸ்ரீநிவாஸன்

சுப முகூர்த்தத்தில்தான் நான் சுவாமிஜிக்கு எனது முதல் கடிதத்தை எழுதியிருக்க வேண்டுமென்று எனக்கு இப்போது நன்கு புலப்படுகிறது. கடந்த நான்கு வருடங்களில் சுவாமிஜியிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ள அன்பு மொழிகளும், மோகினிக்குப் பலரகப்பட்ட விஷய தானங்களும்,—ஒவ்வொன்றும் மனதிற்கு ஆறுதலாயும், உள்ளத்திற்குக் கிளர்ச்சி தருவதாயும் அமைந்து பெரும் பயனளித்து வருகின்றது.

நகர வாழ்வை விட்டு, கிராம வாழ்வை மேற்கொண்டு, பயத்தினின்று விடுபடாத ஓர் நிலையில்,

> "அன்பு சொல்லி அழைத்தோம்—கண்ணு !
> அழகு சொட்டும் அமுதா !
> நம்பி வாழுகின்றோம் — இந்த
> நாட்டு மக்களெல்லாம்"

என்று அன்பு மலர் தூவி ஆண்டவனை வழிபடும் கவிமலர் நமக்கு மட்டுமல்ல, தமிழன்னைக்கே ஆறுதலளிப்பதல்லவா !

* * *

மனதிற்கு உத்ஸாகக் குறைவும், சரீர அலுப்பும் நிறைந்துள்ள மந்தமான சமயங்களில் நான் சாதாரணமாக சுவாமிஜியின் கவிமலர்களைப் படித்துத் தெம்படைவதுண்டு. சுவாமிஜியின் உள்ளத்திலிருந்தெழுந்த சொற்களின் சக்தியை அத்தகைய நிலையில்தான் நன்கு உணரலாமென்பது பிரத்யக்ஷம். சுவாமிஜியின் வசன நடையும்

பல வழிகளிலும் போற்றற்குரியது; மிக்க கவர்ச்சி யுடையது. சுத்தான்ம விளக்கம் முதல், உடல் உறுதி வரை பல பல விஷயங்களையும் எளிதில் விளக்கும் ஆற்றல் உடைய அபூர்வ சக்தி சுவாமிஜியிடமேயுள்ளது.

இந்த அபூர்வ சக்தி என்னை அவரது உள்ளத்துடன் ஐக்கியப் படுத்திவிட்டது. உண்மையில் மூன்று தமிழ் மணிகள் எனது குருநாதர்களாக அமைந்து, தமது பேனா முனை மூலமாகவே எனக்குப் பெரிதும் அறிவூட்டி வருகின்றனர்: கவியோகி சுத்தானந்தர், கலாநிதி பி. ஸ்ரீ., ஜகதாசார்ய ப்ர.ப. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி.

* * *

தனி வாழ்விலும் சமுதாய வாழ்விலும் எழும் பிரச்னை களை பல துறை யனுபவங்களால் ஆராய்ந்து, தமது அனுபவ மணிகளைத் தமிழன்பர்களுக்குச் சர்வதா அளித்து உதவும் சுவாமி சுத்தானந்தருக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம், ஆங்கிலத்திலும் அரிய நூல் களை இயற்றி கிழக்கு நாட்டின் மேன்மையை வெளிநாட் டினர் உணரும்படி செய்துள்ளார். உலகம் திருவருள் விளையாடும் தோட்டம் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வமத சமரசம், ஆன்ம நேய ஒற்றுமை, தேச சுதந்திரம், சமுதாய சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, அரசியல், அருளாட்சி, அருளுடைமை, தேசீ யக் கல்வி, வீரவளர்ச்சி, உலகியல்பு, இல்லற வாழ்க்கை, வாழும் வகை, சுத்த சன்மார்க்கம் முதலிய பல அரிய பெரிய விஷயங்களை எளிதில் விளக்குகிறார். மக்களெல் லாம் ஓர் அன்புக் கூட்டமாக வாழ வழிகாட்டி, உலகமே அன்பு நிலயமாக விளக்கும் வகையைத் துலக்கி, அன்பு— அறம் — அருள் — மூன்றும் சேர்ந்த அற்புத வாழ்வை வர்ணிக்கிறார் அடிகள்:

"உலகமெல் லாமவன் கோயிலென்போம்—வாழும்
உயிர்த் தொகையவன் மேனியென்போம் ;
இலகும் ஆருயிர் இன்புறச் செய்வதே
ஈசனுக் காகிய பூஜையென்போம்"

என்று அன்புக் கும்மி பாடும் அடிகள், மாதவ பக்தியை எப்படித்தான் ஊட்டுகிறார், நம்மை ஊக்குகிறார் காணுங்கள்:—

"மாதவன் இல்லாத மானிட வாழ்வொரு மண்புழு வாழ்க்கை யன்றோ !
மாதவன் இல்லாத கீதங் குடிவெறி மாக்களின் கூச்சலன்றோ !
மாதவ னில்லாக் கலையெல்லாம் ஊரை மயக்கிடும் மாயமன்றோ !—
காதலை யீந்தவன் காதலைப் பற்றிக் களிநட மாடிடுவோம் !"

ஸ்வாமிஜியின் திரிகரணங்களும் தெய்வத் தன்மை வாய்ந்த திருப்பணியிலே ஈடுபட்டு, காலத்துக்குரிய அரிய சேவை செய்துவருகின்றன ; நாட்டைத் தட்டி எழுப்பி வருகின்றன. அவரது நூல்களின் உள்ளுரை அறம், பொருள், இன்பம், அருள் உடையது ; அவ்வழி நின்று வாழ்வை நடத்துவோம். அன்பு, அறம், அருள், தூய்மை, வாய்மை—இவ்வைந்தே மனிதத்தன்மையின் பஞ்சப்ராணன் என்று அன்பு வழிகாட்டுகிறார் அடிகள் :

> "யாருக்கும் அஞ்சாமல் அன்பறம் புரிகுவோம்; வீர சுதந்திரபேரிகையை விண்ணதிர முழக்குவோம்; தலை நிமிர்ந்து நடப்போம்! இன்னலைப் புன்னகைப்போம் ; எல்லாம் நன்மைக்கே யென்போம்! சன்மார்க்கம் பயிலுவோம், சாதி பேதந் தவிர்ப்போம் ; பன்மார்க்கங்களிலெல்லாம் பரமன் ஒருவனன்றோ !" ...."சித்தத்தை அலைய விடாமல், உலகநாதனைச் சிந்திக்கவேண்டும். அவனே அன்பு ; அவனே நமது அன்பின் தாயகம் ; நமது அன்பை யெல்லாம் அவனிடம் வைப்போமாக !" ...."இதய வெளியில் இருக்கும் பொருளை எங்குங் கண்டு மகிழ்வீர் !"

அன்பு மலர் தூவி ஆண்டவனை வணங்கும் இம் மதுர மொழிகளால் நமக்கு ஏற்படும் ஆறுதலையும் உள்ளக் கிளர்ச்சியையும் வர்ணித்திடுதல் சாத்தியமா ?

சமபங்கு

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

"பெண்ணாய் வந்ததொரு மாயப் பிசாசு" என்றும், "இந்திரன் கெட்டதும் பெண்ணாலே" என்றும், "மண்ணையும் உயர் விண்ணையும் படைத்த கண்ணன் கொடும் பெண்ணையும் ஏன் படைத்தானோ!" என்றெல்லாம் பாடியுள்ள கவிராயர்களைப் பற்றி எங்களுள் பலமாகப் பேச்சு நடந்த சமயம், திரு வி. க. எழுதிய பெண்ணின் பெருமை என்கிற நூலும் காலஞ் சென்ற கவிச் சக்கரவர்த்தி பாரதியாரின் அமர காவியங்களும் எங்களது பேச்சுக்கு விஷயமாக அமைந்தன.

கவிகளின் உள்ளம் கரை காணாத மாபெரும் கடல் போன்றதாகும். அக் கடலில் நல் முத்துக்கள், பவளங்கள் முதலிய உயரிய பொருள்கள் கிடைப்பது போன்று கவிகளின் உணர்ச்சி ஊற்றிலிருந்து சுரந்து பொங்கும் காவியங்கள் புதையல் புதையலாக விருக்கின்றன. எந்தக் காலத்திய, எத்தகைய கவிகளின் பாடல்களைப் பார்த்தாலும் முதலில் காப்புப் பாடல் முதல், தெய்வ வணக்கம், அறம், அன்பு, பெரியார் பேணல் போன்ற எத்தனையோ விஷயங்களையே முறையாக எழுதியிருக்கின்றார்களேயன்றி பெண்ணின் பெருமையை தனித்த முறையில், உண்மையுள்ளத்துடன் வெளியிட்டுள்ள காவியங்களைக் காண்பதரிது.

அக்காலக் கவிகளின் வரம்பைப் பிளந்துகொண்டு, நூதன முறையில் பெண்கள் விடுதலையையும், அவர்களது மகத்தான பெருமையையும் தேனென இனிக்கும் பாக்கள்

மூலம் பறையடித்தவர் காலஞ்சென்ற சுப்ரமண்ய பாரதி ஒருவரே என்று நான் நினைத்ததுண்டு. பெண் தெய்வத்தின் மகிமையை இதய பூர்வமாகப் போற்ற புதுவையில் யோகி ஒருவர் முற்பட்டிருக்கிறார் என அறிந்து பூரித்தேன். கவியோகி வள்ளலின் "பெண் விடுதலைக்கும்மி"யை எங்கள் மோகினி மூலம் தமிழுலகம் முழுதும் ஒலிக்கச் செய்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். காலஞ்சென்ற பாரதியாரின் பெண் விடுதலைப்பாடல்களைவிட, யோகியாரின் விடுதலைக்கும்மி காலத்தையனுசரித்து இன்னும் ஒரு படிக்கட்டு முன்னேறி யிருப்பதைப் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

காலஞ்சென்ற பாரதியார் ஞானத்ருஷ்டியாலறிந்து பாடினரோ என்று வியக்கும்படி நம்நாட்டில் விஜயலட்சுமி பண்டிட் மந்திரியாகி ஆட்சி செய்து காட்டுகிறார். கவியோகியின் பாடல்களோ, பெண்கள் பட்டம் பெற்றுச் சட்டம் செய்வதைக் கண்ணாரக்கண்டு பூரித்தபின்பு, அவரது தூய இதயத்திலிருந்து உணர்ச்சியால் வெடித்த மலர் போன்று உதயமாகியவை! ஒரு கவியின் காவியத்தினால் உலகத்தையே திருத்திவிடலா'மென்பது பழமொழி. அந்த உண்மையைப் பலதரங்களில் நிதர்சனமாகக் கண்டிருக்கிறேன்; பெண் உரிமைக்கும்மி யில் கீழ்க்கண்ட அடிகளை ஒருமுறை படித்துப்பாருங்கள்:—

வீட்டிற்கரசியும் பெண்ணன்றோ—வீரர்
விளைந்த கற்பகம் பெண்ணன்றோ!
நாட்டிற் சமப்பங்கு பெண்ணன்றோ—பொது
நல வலக்கரம் பெண்ணன்றோ!

செல்வம் இருவர்க்கும் பங்கென்போம்—குல
க்ஷேமம் இருவர்க்கும் பங்கென்போம்.
கல்வி இருவர்க்கும் கண்ணென்போம்—தூய
கற்பும் இருவர்க்கும் காப்பென்போம்.

பேளுப் பிடிப்பதி லும்சலியோம் சட்டம்
பேசிச் செயிப்பதி லுஞ்சலி யோம்;
சேளுதி பத்யத்தி லுஞ்சலியோம் பெண்கள்
தேசத்தை யாளக்கை வீசிவந் தோம்!

இத்தகைய பாடல்கள், பெண்களை இழிவு செய்யும் எத்தகையோரையும் மாற்றிவிடு மென்பதே எனது துணிபு.

தூய உள்ளத்துடன் மகோன்னத கவிமலர்களை அள்ளி வீசக்கூடிய கவிகளையும், உத்க்ருஷ்டமான தேசப்பணியிலும் கலைத்தொண்டிலும் ஈடுபடக்கூடிய மகான்களையும் பேரறிஞர்களையும் எப்போதோ ஒருசமயம் தான் உலகம் நமக்கு அளிக்கின்றது. அத்தகைய முறையில் தற்சமயம் பல மகான்களுடன் கவிச்ரேஷ்டர் யோகியாரையும் அளித்துள்ளது நமது பாரத வர்ஷம்; இந்தத் தமிழ்த் தவமுனியை நம் தலைமுறையில் அடைந்திருப்பது நமது பாக்கியமே!

கவியோகியின் நிர்மலமான உள்ளத்தின் சமத்வநாதமாக அவரது காவியங்களும் கட்டுரைகளும் பிரகாசிக்கின்றன. ஆணும் பெண்ணும் இரு கண்களைப்போன்று சமத்வம் பெற்றவர்கள் என்ற உண்மையை உணர்ந்து உரைக்கும் நம் கவியோகி, சமத்ருஷ்டியுள்ளவர்களின் இதயங்களில் உன்னத ஸ்தானத்தைப் பெற்றுவிட்டார்.

சுவாமி அவர்களின் தமிழ்ப்பணி

ஆ. முத்துசிவன்

பாற்கடலைக் கடைந்த கதை உண்மையோ பொய்யோ; அதைப்பற்றி நமக்கு அக்கரை இல்லை. சிறந்த உபமானமாக அதை நாம் கையாளலாம். அதற்கு மிகவும் உபயோகப்படுகின்றது. அன்று கண்ணன் கடைந்தான். அமுதமும் வந்தது; விஷமும் வந்தது. அதே மாதிரி இன்று "தமிழ் எனும் அளப்பரும் சலதியை (கடலை)" எத்தனையோ பேர் கடைந்து கொண்டிருக்கின்றார்கள். அமுதமும் வருகின்றது. ஆலகால விஷமும் வருகின்றது. தமிழ் ஆர்வத்தை என்றும் நிலைபெறச் செய்யும் இன்னமுத நூல்களும் வருகின்றன; அதனைக் கொன்று தொலைக்கும் கொடிய விஷவர்க்கங்களும் வருகின்றன. சுவாமி அவர்களின் மதி வண்ணமும் கை வண்ணமும் கலந்து அமுத வடிவான நூல்களையே திரட்டித்தந்து கொண்டிருக்கின்றன.

"பாமரராய், விலங்குகளாய், மக்களெனும் பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு"
"ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய்"

வாழ்ந்த நிலை ஆகிய இவைகளை மாற்றி, நில்லாப் புகழை நிலைக்கும் புகழாகச் செய்த பெரியார்களில் சுவாமி அவர்களும் ஒருவர். 'தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டு அமரர் சிறப்புங்கண்ட' செம்மல். அவர்களுடைய இலக்கியப் பெருமையை ஓரளவு பார்ப்போம்.

ஏதோ பன்னெடுங் காலத்திற்கு முன்னதாகவே, அதாவது கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே,

தமிழர் வாழ்வு சிறந்திருந்தது, தமிழர் கலை சிறந்திருந்தது என்றெல்லாம் ஸ்தாபிக்கப் படுகின்றது. நமக்கு அதனுல் பெருமைதான். நாம் அதை மறுக்க வில்லை. கால தேச வர்த்தமானத்தின் காரணமாக;நமது தமிழ் வீழ்ச்சி அடையவும் தொடங்கிற்று. அதுவும் உண்மைதான். அதை மறுக்கவும் இல்லை. இப்பொழுது மீண்டும் பெருமை அடைய அது முன் வந்திருக்கிறது. நாளும் நாளும் பெருமை என்ற கதியை அது அணுகிக்கொண்டுதானிருக்கின்றது. அதுவும் உண்மைதான். ஆனுலுங் கூட, ஊன்றி நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றிருக்கின்றது. அதுதான் சீர்கேடான நிலையிலிருந்து சீர்திருந்தி வருகின்ற நிலை. இந்த நிலையை நாம் ஆராய்வதன் மூலமே, சுவாமி அவர்களுடைய பிரமாதமான இலக்கிய ஸ்தானத்தை நாம் மதிப்பிட முடியும்.

ஆங்கிலேயர்களோடும் அவர்களுடைய கலைகளோடும் தள்ளமுடியாத பயனுக நாம் உறவுகொள்ள ஏற்பட்டு விட்டது. நன்ருக அநேக துறைகளில் இன்று கலப்பும் ஏற்பட்டு விட்டது. எதற்கெடுத்தாலும் அவர்கள் நம்முடையதை விட அதிகப்படியாகத் தங்களுடையதை, நியாயம் இருந்தாலும் சரி வலிந்து என்ருலும் சரி, போற்றியே வந்துள்ளார்கள். அதைப் பார்க்கப் பார்க்க நமக்கும் சூடு பிறந்து விட்டது; ரோஷம் பொங்கி விட்டது. இன்னும் போதாக்குறைக்கு, காலத்தின் குரலாக அருட்கவி பாரதியாரின் கனல் மணக்கும் கர்ஜனையும் எழுந்தது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

இன்றும் அக்குரல் முழங்கிக் கொண்டுதானிருக்கின்றது.

அருட்குர லல்லவா? இக்குரலைக் கேட்டவர்களும்உண்டு. கேட்டதாக பாவனை பண்ணும் வேஷதாரிகளும் உண்டு.

உள்ளூறக் கேட்டு ஆவேசம் பொங்கி யெழுந்த அருளாபரணச் சிலர்களில் சுவாமி அவர்களும் ஒருவர். இதோ ஏடு ஏடாக எண்ணரிய ரகங்களைத் தோற்று வித்துக் கொண்டே வாழ்கின்றார். பிருந்தாவனமோ என்று துள்ளி மகிழும் சுந்தரத் தமிழ்ச் சோலையைப் படைத்து விட்டார். இலக்ஷிய வெறி மணக்கும் பூக்களைச் சொரிவதால் தமிழ் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. நூல் நிலயங்களிலும் விற்பனை ஸ்தலங்களிலும் விம்மிப் புடைத்து, எண்ணத்தொகுதியிலும் இலக்ஷிய ஏற்றத்திலும் ஈடு எடுப்பின்றி இன்று காணப்படுவன சுவாமி அவர்களின் நூல்களே. இளைஞர்களும், இளைஞர் உள்ளம் படைத்தவர்களும் விரும்பவல்ல கனவுச்சித்திரங்கள் எத்தனை! இலக்ஷிய உலகத்திற்கு ஏற்றிச் செல்லும் ஞான ரதங்கள் எத்தனை! புதிது புதிதாக உருவாகும் தத்துவ ஆலயங்கள்தான் எத்தனை! இன்னும் மொழிபெயர்ப்பு இனங்களைப்பற்றி என்ன சொல்வது! ஸர்க்கஸில் காணப்படும் கூண்டுப் புலிகளா? இல்லை. வைக்கோல் திணிக்கப் பெற்ற கன்றுக் குட்டிகளா? இல்லை; இல்லவே இல்லை. அத்தனை மொழிபெயர்ப்புகளும் ஜன்ம ஸ்தானத்தில் துள்ளி எழுந்த வீரியத்தோடு தக்ஷிணத்திலும் துள்ளி எழும் வாய்ப்புப் பெற்றவை.

சுவாமிகளின் பாடல்களோ சத்தியக் கனல் மணக்கும் தழல் பிழம்புகள். மதி பேச வில்லை; மனம் பேசுகின்றது. விதிக் கடிமை யில்லை; எனினும் வித்தகம் கூறுவது. இன்னும் சொல்லப் போனால் தீக்ஷண்யமான அந்தர்ஞானக் கோள்கலன்களே அத்தனையும்.

இன்னும் அவர்களுடைய சாஹித்யங்களைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அருமைகள் பல. எத்தனையோ இலக்ஷக் கணக்கான உள்ளத்தில் தேன் வார்க்குந் தன்மை படிந்த பாடல்களை அடிகள் எழுதி உதவியிருக்கின்றார்கள். பெரும்பாலானவை மதுக் கிண்ணங்களாகப் பரிமளிக்கின்றன. பாடுவோர் கற்பனைக்கு விருந்தளிப்பதோடு, கேட்போர் உள்ளத்திலும் ரச நீர்மை படிந்த பாவங்கள் உதயமாகவும் துணை செய்கின்றன.

சரயு நதியின் பெருமையைக் கூற வந்த கம்பர் எத்தனையோ அருமைகளை எடுத்துச் சொல்லி அதனை வர்ணிக்கின்றார். சரயு நதி சம்பிரமமாகத் தவழ்ந்து வருகிறது. எப்படியெல்லாம் வருகிறது? இதோ கம்பர் கூறுகிறார்.

“ தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புது மணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப்புக வயல் தொறும் வனங்கள் தோறும்
ஓதிய உம்பு தோறும் உயிரென உலாய தன்றே.”

ஓதிய உடம்பு தோறும் உயிர் உலவி வருவது போன்றே தமிழ் வியாபிக்கும் துறைகளிலெல்லாம் அடிகளுடைய மேதை அநாயாசமாக உலவி வருகின்றது. கலைக் கடலைக் காத்துவந்த கலைமகள் அடிகள் வரவிற்கே காத்திருந்து மடைதிறந்து உதவியிருக்கின்றாள். ஏனென்றால் எத்தனையோ ரகமான நூல்களை, இப்படியும் ஒருவரால் முடியுமோ என்று மலைக்கும்படி யல்லவா எழுதி வருகின்றார்கள். அமுத சுரபி மேதை அவர்களுடைய மேதை. வேறு என்னவாகத்தான் இருக்க முடியும்?

அடிகளுடைய நடையின் இயல்பை ஓரளவு பார்ப்போம். அதற்கு முன்னதாக நடையின் தத்துவம்

இன்னது என்பதையும் சற்று ஆலோசனை செய்வோம். நடையை எத்தனையோ விதமாக எல்லாம் பிரிக்கலாம். ஆனாலும் இறுக்கிப் பிடித்தால் அசல் நடை, நகல் நடை என்ற இரண்டு பிரிவுகளுக்குள்ளே பக்குவமாக எல்லாம் அடங்கி விடும். எழுதுகின்றவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை அவனுடைய நடையைக் கொண்டு வெகு தெளிவாகத் தெரிந்து விடலாம். என்னதான் மறைத்தாலும் எழுதுகின்றவனுடைய மன இயல்பின் சாயம் நுட்பமாக எழுத்தில் ஏறிவிடும்.

ஏதோ மனத்தில் கருத்து எழுகின்றது; அதை வெளிப்படுத்திவிட வேண்டும். அதற்குரிய கருவி பாஷை. ஆகவே வெறும் பாஷையிலே இருக்கின்றதா நடை என்றால், இல்லை. இல்லவே இல்லை. கருத்தை வெளியிடும் கருவியாகிய பாஷையைக் கையாளும் முறை தான் நடை. வாழ்க்கையையும், வாழ்க்கை பயிலுவதற்கென்று அமையப் பெற்றுள்ள இந்தப் பிரபஞ்சத்தையும், புத்தி வீரியமுள்ளவன் பார்க்கின்ற முறையானது, அவனவனுக்கென்று கருவிலேயே அமைந்த இயல்பைப் பொறுத்ததாகும். உலகம் இன்பக்கேளியாக ஒருவனுக்குத் தென்படும். அதே உலகம் சவக்குழியாகவும் ஒருவனுக்குத் தென்படும். உலகத்தின் நிலையாமை அம்சம் மட்டிலுமே ஒருவனுடைய கண்ணை உறுத்திக்கொண்டிருக்கும். உலகத்திலுள்ள உயிரினங்களின் தோற்ற விசித்திரமும் வளர்ச்சிப்பெருக்கும் பேரானந்தம் அளிக்கும் இன்ப ஊற்றாக ஒருவனுக்குத் தென்படும். அதெல்லாம் அவனுடைய மன இயல்பையும் பாவனையையும் பொறுத்தது. மேலே கூறிய பாவனை வேறுபாடு அமைவது போன்றுதான் நடை வேறுபாடும்.

நடை, அதாவது உண்மையான நடை, ஒருவனுடைய இதயசீலம், அவனுடைய பாவனை இயல்பு ஆகிய இவற்றின்

வெளியீடே. அசல் நடைக்கும் நகல் நடைக்கும் என்ன வேறுபாடு என்றால், அறிவுக்குப் புலனாகும் உண்மையை மனம் உணர்ந்தவாறு வெளியிட முயல்வது அசல் நடையாகும். எவரோ ஒருவர் நடையை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு அறிவுக்கும் தெளிவாகப் புலனாகாது, மனத்திலும் நன்றாக ஊன்றாது, திரிசங்கு நிலையில் நிற்பதனைத் திரிசங்கு நிலையில் நின்றே விளக்க முற்படும் நடை நகல் நடை. ஔவைப் பிராட்டியே சொல்லியிருக்கின்றாள், "மேடை ஏறி வார்த்தை சொல்லும் வன்மை படைத்தவன் பதினாயிர வருள் ஒருவன்" என்று. எழுத்தாளனும் அப்படித்தான்.

சிருஷ்டி வீரியமும் கற்பனை உற்சாகமும் கொண்ட நடை, கருத்துக்கள் ஏறி அமர்ந்து இனிதாகவே பவனி வரும் தாட்டியமான வாகன நடை; இம்மாதிரியான நடைகளைக் கையாளக் கூடியவன் சிறந்த கலைஞனே. அத்தகைய கலைஞன் கூட்டம் பெருக வேண்டும்.

"தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரததேசந் தன்னை"

வாழ்விக்கும் மாமருந்தாக விளங்கும் இனம் மேலே சொன்ன கலைஞன் இனமே.

நகல் நடையர் வேண்டாம். ஒருமைக் கட்டான் கற்ற, நற்றொடொழார், கற்றச்சன், முட்டகழி, கடவுட்டன்மை, முட்டாட் டாமரை என்று வரும் பல்லுடைக்கும் சந்திகளில்தான் பொதிகைமலை முத்திரையைக் காணமுடியும் என்று சாதிக்கின்ற நவீன எழுத்தாளர்கள் வேண்டாம்; வேண்டவே வேண்டாம். (மஹா உத்கிருஷ்டமான பாவனா பிரகர்ஷம் இதோ காணப்படும் வாக்கியங்களில் ஜாஜ்வல்யமான காந்தியோடும் ஸ்பஷ்டமாகவும் விகசித்து

நிற்பதை நாம் காணலாம் என்று எழுதுகின்ற மணிப் பிரவாள எழுத்தாளர்களும் சற்று பொதிகை வழிபாட்டில் ஈடுபட்டால் நல்லது. மற்றும் பொருளற்ற அடுக்கு மொழி மிடுக்கு நடை ஸ்ரீ மான் ஐயஹோ அம்மஹோவும் சற்று விலகி நிற்கட்டும். ஆடம்பரமான அடை மொழிகள் உண்மையை மறைக்கும் புதர்கள். உண்மையின் உயிர்ச் சத்தை வாங்கும் புல்லுருவிகள். இன்னும் கன்னியாகுமரியில் தொடங்கி கல்லறைக்குள் கால் வைக்கு மட்டும் முற்றுப் புள்ளி இட்டாமல் உம், உம், உம், உம், என்று உறுமிக் கொண்டிருக்கும் உறுமி எழுத்தாளர்களை நாடு கடத்தி விடுவோம்.

காலம் மாறி விட்டது. தலைமுறை தலைமுறையாக நமது தமிழைக் கற்பது கேவலம் என்று கருதியும், தெரிந்தாலும்கூட நன்றாகத்தெரியாது என்று நெஞ்சாரப் பொய் கூறும் நீர்மையில் மோகங் கொண்டு பகட்டியும் எத்தனையோ புண்ணிய சீலர்கள் கல்லறைக்குள் புகுந்துவிட்டார்கள். அவர்களுடைய அடிச்சுவட்டில் கால்வைத்து வரும் அநேகருக்கு இன்னும் தாய்பாஷையில்பற்றுக்கொள்ளாமலே வாழ்க்கையை நடத்திவிடலாம் என்ற நம்பிக்கையும் இருந்துவருகிறது. சிலரை எவ்வளவோ மல்லுக்கட்டித் தான் தமிழின் மீது பற்றுக் கொள்ளும்படி தூண்ட வேண்டியதிருக்கின்றது. தமிழ் நூல்களைக் கையில் எடுத்துக் கொடுத்தால் 'என்ன சார், இங்கிலீஷ் புஸ்தகம் மாதிரி பார்வை அழகில்லையே' என்பார்கள். வால்டர் பேற்றர், கார்டினல் நீயுமன் போன்றவர்களுடைய வசன நூல்களை மண்டையை உடைத்துக் கொண்டாவது படிப்பார்கள். விளங்காவிட்டாலும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு விளங்கவில்லை என்று சொன்னால் கேவலமே என்று எண்ணி, சௌடால்தனமாக 'பிரமாதம் சார், பிரமாதம்; எந்தப் பயலால் இப்படி எழுதமுடியும்?'

என்பார்கள். அதெல்லாம் நவீன இலக்கிய டம்பாச்சாரியம். தமிழில் இன்றைக்கு என்று சொல்லும் இடத்தில் இற்றைக்கு என்று வந்து விட்டால் அவர்களுக்குப் பொறுக்காது. ஆகாத பெண்சாதி கால்பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றந்தானே.

இப்பேர்ப்பட்டவர்களுடைய மனதை எப்படியாவது தமிழின் பக்கம் திருப்ப வேண்டிய திருக்கிறது. ஏனென்றால் இவர்களால் வரும் ஆபத்து மிகவும் பெரிது. தாங்கள் கெட்டதும் அல்லாமல் தங்களுடைய இச்சை வெறுப்புக்களை, ஒரு பாவமும் அறியாத, தமது இளஞ் சந்ததியார் தலையிலும் புகுத்தி விடுகின்றனர். இவர்கள் இல்லாத இடமே கிடையாது. தமிழ் என்றால் எண்ணெயில் கிடந்த முடிதான்; குடியிருந்து அதனைக் கேலி செய்வார்கள். இவர்களைத் திருத்திவிட்டால் எல்லோரையும் திருத்திவிடலாம். இன்னும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் பாவனு சக்திப் புலிகள். தமிழ்க் குமரியின் கை வேலை தங்களிடம் இருப்பதாகத்தான் நினைப்பு. பாவம், வெறும் மனப்பால்தான். வேறு என்ன? நவீன சிருஷ்டிகள் அனைத்தும் அவர்களுக்கு ஜன்மப் பகை; படிக்காமலே பகை. அதுதான் ரொம்ப விசேஷம் இங்கே. இன்னும் பஃறுளியாற்றுக்குத் தெற்கே தான் அவர்களுடைய திருஷ்டி. அகஸ்திய முனிவர்கூட அவர்களுடைய அனுமதி யில்லாமல் தமிழில் தலையிடக்கூடாது. அவர்களுடைய மனம் திகிலடையும் படியான நடைவேண்டும். அதாவது கண்ணாடிப் பெட்டி போன்ற நடை வேண்டும். உள்ளே இருக்கிறது தெரிந்துவிட வேண்டும்.

சுவாமி அவர்கள் கையாளுகின்ற நடை வரவேற்கக் கூடிய பாணி அமைந்த நடை; வண்ணக் கலாப நடை; வன்னெஞ்சை மாற்றும் வண்ண நடை. புதுமெருகு

பூண்ட புனித நடை. கல்லையும் பிசைந்து கனியாக்கும் நடை. பாவ நீர்மைக் கேற்ற கதி யுடைய நடை. நிற்கும், நீளும்; நிமிரும், ஆழும்; அகலும், குறுகும்; குழையும். இலக்கிய மறுமலர்ச்சியின் இலாஞ்சனை தாங்கிய நடை. இன்னும் சொல்லப் போனால் ஆத்மஞான வாடை பரிமளிக்கும் அழகு நடை.

நவீன இலக்கிய உற்பத்தித் துறையில் சுவாமி அவர்களின் தவத்தாலும் ஆத்மஞான பலத்தாலும் ஒரு இலக்கியத் தத்துவமே உருவாகின்றது. பாரதீயம் என்ற தத்துவந் தான் அது.

"சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்"

என்று வேஷதாரிகளை எச்சரிக்கை செய்கின்றது. மறுமலர்ச்சிப் போரின் ஜயக்கொடி அது. அறம் உரைக்கின்றது. ஆண்மை புகலுகின்றது. கர்மவீரம் கற்பிக்கின்றது. 'தேமதுரத் தமிழோசை' ஜகமெங்கும் பரவும் திறனை உணர்த்துகின்றது. கலை அமுதைத் திருத்துகிறது. கலைப் பார்வையை உருவாக்குகின்றது. அருளடிகளின் அருட் பணி சிறக்க!

சின்மயானந்த !

இராகம்: கானடா ஆதி தாளம்

பல்லவி

சீரடி பணிந்தோம் சின்மயா னந்த ரூபா
ஸ்ரீ சுத்தா னந்த யோகியே ! (சீரடி)

அநுபல்லவி

ஆருயிர் சிவ சக்தி அன்னை மகவாகி
அருட்பணிக் கேதன்னை அளித்த தியாகியே ! (சீரடி)

சரணம்

அல்லல் பெருகிய தொல்புவி வாழ்விலும்
நல்ல சுகமுண் டென்று நடந்துநீ காட்டினாய்
எல்லையில்லா உயிர் இதயத்தில் நடமாடும்
தில்லைப் பொருளைக் கண்ட நல்ல விவே கியே ! (சீரடி)

—விஜயம்

குறிப்பு:—"சீர் அடி பணிதல்" என்பது சும்மா காலில் விழுவதன்று; இந்த மாதிரி மனித வணக்கத்தை யோகியார் விரும்புவதில்லை. அவருக்கு, எல்லாம் கடவுள் மயம். நாம் வணங்கினால் அவரும் நம்மை வணங்குவார். அடி பணிதல் ஆவது அவர் அடிச்சுவடு பற்றி "யோக சித்தி" காட்டும் வழியே பணிவுடன், கருத்துடன், நடந்து வாழ்வைப் பரிசுத்த மாக்குவ தாகும்.

சின்மயானந்த ரூபன் என்பது சித்தாகிய மகாகுண்டலியைப் பெற்ற ஒளியுடல் கொண்டவன் என்பதாம்.

சரணத்தில், யோகியார் வாழ்வின் லட்சியம் அடங்கியுள்ளது. அதாவது, இந்த உலகை 'மாயை, மலடி மகன், பொய்' என்று வாய் வேதாந்தம் பேசக்கூடாது. இந்த உலகம் நாம் பூரணம் பெறவே கடவுள் தந்த அருட்பணிச் சோலை. இதில் நம்மை யோகத்தால் பூரணப் படுத்திக்கொண்டு, பிறரும் நல்வழி சேரத் தொண்டு செய்ய வேண்டும். அன்பு, அருட்பணி, வாய்மை, தூய்மை, உள்ளமைதி, சுதந்தரம், எல்லாம் ஒன்றெனும் சமத்துவம்—இந்தக் கொள்கைகளை நிலைறவாகப் பெறுதலே பூரணம். இப்பூரணத்தால் உலகில் தொல்லை யில்லாமல் இன்பமாக வாழலாம் என்பது கருத்து.

"யோக சித்தி"

திருமலை இராமாநுஜன்

தமிழ் நாடு வள்ளுவரைத் தந்தது; அவர் குறள் நூலைத் தந்தார். இது பழம் நிகழ்ச்சி. இன்று தமிழகம் யோகி ஸ்ரீ சுத்தானந்தரைத் தந்திருக்கிறது. அவர், யோக சித்தி என்ற ஒரு கலைப் பொக்கிஷத்தைத் தந்திருக்கின்றார். நம் இந்திய நாட்டிலே தெய்விகப் புலவர்களும் அடிக்கடி தோன்றுவர்; அவர் தம் சீரிய நூல்களும் அடிக்கடி தோன்றப்பெறும் என்ற துணிபு பலருக்கு இருக்குமானால் அத்துணிபு, நம் சுத்தானந்தரை வள்ளுவரது மறு பிறவியாகவும், அவர் தம் யோக சித்தி நூலை ஒரு புதுமைக் குறளாகவும் கருதிப் பாராட்டு மளவிற்கு இட்டுச் செல்லும் என்பது ஒருதலை.

யோகி சுத்தானந்தரது கவிதை, கட்டுரை, காவியம் முதலிய பலவற்றையும் தவறாது படித்து மகிழும் பாக்கியம் பெற்றோருள் யான் ஒருவன். அவரது நூல்கள் யாவற்றிலுமே, எல்லாப் படியாலும் சிறந்த-நின்ற ஒன்று வேண்டுமானால் இந்த "யோக சித்தி" நூலே என்பது எனது திடமான எண்ணம். அதற்குக் காரணங்கள் பலவுண்டு.

யோகம் என்றவுடனேயே, அது நமக்குரிய தன்று; மனைவி மக்களை வெறுத்து, கானிலுறைந்து, காயிலை தின்று திரியும் துறவிகட்கு உரிய வொரு வித்தை என்று கருதுவோர் பலருளர். ஆனால், அது ஒவ்வொரு தனி மனிதர் வாழ்க்கைக்கும் எந்நிலையி லிருந்தாலும் வேண்டத் தகுவது என்பதை இந்நூல் ஆதி முதல் அந்தம் வரை பல வகையாலும் எடுத்து இனிது விளக்கிச் சொல்லுகிறது.

வாழ்க்கையில் தூய இன்பம் நிறைந்து விளங்கும் வண்ணம் வாழ்தலையே இந்நூல் யோகம் என்று பேசுகிறது. அவ் வின்ப வாழ்வு வாழ்தற்கு அடிப்படையான நல்லியல்பு, நல்லொழுக்கம், நல்லெண்ணம் இவைகளையே மேற்கொள்ள வேண்டும் என்று மக்கட்கு இதோபதேசம் செய்கிறது. இந்நூலில் எவ்விடத்தும் மற்ற நீதி நூல்களில் காண்பதுபோல, பிறப்புப் பற்றிச் சாதி வகுக்கும் முறையையோ; அன்றி ஆண் பெண் உயர்வு தாழ்வையோ; மனைவி மக்கள், வீடுவாசல் முதலியவற்றை வெறுக்கும் வெறுப்புத்துறவோ நாம் காணமுடிகிறதில்லை. சுத்தானந்த பாரதியார் அவர்கள் தூய வாழ்க்கையும், யோக சித்தியும், மதிநுட்பமும்-பரந்த நூலறிவும் வாய்க்கப் பெற்று, அத் தகுதி யுரிமையால் கனிந்த மனக்கனிவினிலே நின்று இந்நூலைத் தந்துள்ளார்கள். பல சமயத்தினருடைய சிறந்த கொள்கைகளைச் சம நோக்குடன் போற்றி எடுத்தாண்டு சிறப்பித் திருப்பது மிகமிகப் பாராட்டுதற் குரியது.

நம் வாழ்க்கையை இருவிதக் கண்ணாலேயே சிலர் பார்க்கிறார்கள். சிலர் உலகிலுள்ள துன்பங்களையே பெரிது படுத்திக்கொண்டு, துறவே மேல், என்ற எண்ணத்தை மக்கட்கு வேரூன்றச் செய்து, வெறுப்புத் துறவை நாட்டிலே நிலைநிற்கச் செய்துவிட்டனர். வேறு சிலரோ, மேலொட்டா யிருக்கும் இன்பங்களையே பெரிதும் மகிழ்ந்து, பின்னீடுள்ள துன்பத்தைச் சிந்தியாதவர்களாகி, வாழ்க்கை மண், பெண், பொன் மோகத்திற்கே என்ற கொள்கை யுடையவ ராவார். இவர்கள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்றலையும் இயல்பினராகின்றனர். இவ்விருவகை நிலையையும் மறுத்து, இவ்வுலகமும் முக்கியம்; மறுமையையும் மறுத்தல் கூடாது என்பதைத் தான் வள்ளுவர் "பொருள் இல்லார்க்கு இவ்வுலக

மில்லை; அருளில்லார்க்கு அவ்வுலகமில்லாகி யாங்கு" என்று உபதேசித்தார். அவ்வுபதேசத்தை அப்படியே அடியொற்றி நம் பாரதியார் அவர்களும் பொருள் வாழ்க்கை-அருள் வாழ்க்கை ஆகிய இரண்டின் திறங்களையும் வலியுறுத்திப் பேசி, முடிவில் அருள் நிலைக்கு ஏற்றும்படியான சன்மார்க்க உபதேசங்களையும் அழகுற இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளது பெரிதும் பாராட்டத் தக்கது.

உலகத்தில் ஆசை, துன்பத்திற்குக் காரணம் என்பதை யாரும் மறக்கவோ - மறுக்கவோ முடியாது. ஆனால் அதற்காக - உலக ஆசை ஒழிவதற்காக அது பொய்; அதிலுள்ள இன்பம் நிலையற்றது என்று கொள்ளும் ஒரு விதமான நிலை நம் நாட்டில் பழங்காலத்தில் ஏற்பட்டுவிட்டது. அது வலியுற வலியுற வெறுப்புத் துறவு ஏற்பட்டுவிட்டது. இதை ஆழ்வார்கள் அடியோடு மாற்றி, உலகத்திலே ஆசை கொள்ளா திருத்தற்கு மற்றொரு உபாயம் கற்பித்துக் காட்டினர். "அடங்கெழில் சம்பத்து அடங்கக் கண்டும்; ஆஃது ஈசன் அடங்கெழில் என்று அடங்குக உள்ளே" என்பது நம்மாழ்வார் வாக்கு. "உலகம் யாவும் மெய்; இன்பமும் மெய் – ஆனால் அது கடவுளுடையது; அதில் ஆசை செலுத்துவது தவறு. எனவே, நம்முடையது என்ற அபிமானமின்றி, அவனுடைமையை அவன் பிள்ளைகள் என்ற முறையிலே நாம் அனுபவிக்க வேண்டும்" என்பதே, அவ் வுபதேசத்தின் சாரம். இதனை அப்படியே தம் மனத்துள் வாங்கி, அதன் உண்மை தேர்ந்த நம் சுத்தானந்தர் " கனத்த நிதிகண்டும் கட்டின்றி வாழு ; மனத்துறவே வாய்மைத் துறவு" என்னும் அருமைக் குறளிலே பெருமைபெறப் பேசியுள்ளார்கள்.

இனி நூலின் கண் உள்ள சுவை நயங்களுள் சில சொல்லி நிறுத்துகிறேன். இரண்டு குறள் கருத்துக்களை அப்படியே வாங்கி, மேலும் எளிய நடையில் யாவர்க்கும் விளங்குமாறு, தம் நூலில் மாற்றி யமைத்துள்ளமை நாம் பெரிதும் பேணிப் பாராட்டுதற்குரியன. அந்த இரண்டு குறள்கள் இவையே :

" பயிர் செய்வான் வாழ்க்கையே பாங்கு; மற் றெல்லாம்
அயல்சார்ந்த சேவகமே யாம் "

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற வள்ளுவர் வாக்கை எளிமையாக எடுத்துக்காட்டுகிற தில்லையா? அதேபோல், "புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையான் காணப்படும்" என்ற குறள் கருத்தை, நம் பாரதியார்,

புறத்தூய்மை செய்யும் புனலைப் போலுண்மை
மனத்தூய்மை செய்யும் மருந்து

என்று பாடியுள்ளமை காணத்தகும். (மருந்து என்பது சிறந்த பொருள்)

மேலும் பகீரதன், சகுனி, வள்ளுவர் வாசுகி முதலிய பலரது சரிதங்களை எடுத்தாண்டு நல்ல பல நீதிகளை எடுத்துக் காட்டியுள்ளார். "தலையரிக்கும் பேன்; மின்னைக் கரியெழுதுமே; கரடி ஈ ஓட்டும் கதை; மடைவாய் நீர்; கவியும் வாழ்வும்; கவிதையும் சுவையும்" என்று பல எளிய உவமைகள் காட்டிப் பொருத்தமான பல விஷயங்களை இணைத்து விளக்கியுள்ள அழகு மிகவும் பாராட்டத் தக்கது.

"மதுவுண்பார்க்கு ஏதுமதி; ஈட்டும் முயற்சி இனிது; பலரை வருத்தும் பணம்; குடியைக் கெடுக்கும் குடி; செய்வதெல்லாம் தெய்வச் செயல்" என்பன போன்ற

செஞ்சொற் சிறுதொடர்கள், அவரது அனுபவ வாக்காத லின் அவையாவும் மந்திரம் ஒத்து, சத்தி தந்துதவு கின்றன.

இப்படியே ஆராய்ந்து சென்றால் பல நயங்களையும் நாம் காணமுடியும். ஆனால், பிறர் ஆராய்ச்சி யுதவி கோராது, அவரவர்களே படித் துணர்ந்தால் தானே நூல் நயம் தேர முடியும்.

உண்மையில் " யோக சித்தி " யோகியாரின் உள்ளமும் வாழ்வின் விளக்கமும் ஆகும். இந் நவயுகக் குறள், மாந்தர்களைத் தர்ம மார்க்கத்தில் செலுத்தும் பரிபூரண வாழ்வின் பொது மறை. " கவி மணி " புகல்வது போன்று இந்நூல்

> " பயன்தரு பனுவல் பற்பல கற்று
> நயம்தர உரைக்கும் நண்பனை ஒத்தது "

இந்த சஞ்சீவி ஒவ்வோர் தமிழன் கையிலு மிருக்க வேண்டும். இம் மெய்நூலை ஆழப் படித்துச் சிந்தித்து அதன்படி ஒழுகினால் இம் மண்ணுலகு பொன்னுலகாகி விளங்கும்!

மகான் என்று அறிந்தேன்

"வேலு"

சென்னை காங்கிரஸ் நகரில் நடந்த இயற்கை மகா நாட்டில் நான் சுவாமிகளின் ஆங்கிலப் பிரசங் கத்தைக் கேட்டுப் பரவச மானேன். மறுநாள் அவர் காங்கிரஸ் பந்தலில் ஒரு உருக்கமான பாட்டை கர்ஜித்தார். அவரை சத்தியமூர்த்தி தமது பக்கத்தில் அமர்த்தினர். நான் பாரதியார் வெளியே வந்ததும் நேரே பேசிவிட வேண்டும் என்று குறி வைத்திருந்தேன். மௌலான முகம்மதலி பூரண சுதந்தரத்தைப் பற்றிப் பேசி முடித்தார். அப்போது சுத்தானந்தரை அவரது சிப்பாய் ஒருவர் சாடை காட்டி அழைத்தார். சுத்தானந்தர் மின்னலைப் போல ஓடி மறைந்தார். நான் விரைவாக விசாரித்துச் சென்றபோது அவர் இயற்கை வைத்தியக் கொட்டகையில் ஒரு நோயாளிக்குச் சிகிச்சை செய்வதில் ஈடுபட்டிருந்தார். நான் பேசாமல் அவர் செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்து மற்றோர் சமயம் பார்ப்போம் என்று சென்றேன்.

பாரதியார் தமிழ் "ஸ்வராஜ்யா" பத்திரிகை ஆசிரிய ரான பிறகு அவரைப் பார்க்க ஏராளமான நண்பர் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். நான் அவரது தலையங்கத்தை ஆவலாகப் படித்து வந்தேன். அந்தக் காலம் சைமன் கமிஷன் வந்தகாலம். சென்னையில் சர்க்கார் தாஸர்கள் ரகளை அதிகம். கூட்டம் நடக்க முடியாமல் தடியடி கல்லெறி எல்லாம் நடக்கும். பாரதி யாரை சிநேகம் செய்துகொள்ள நான் ஒரு நாள் ஸ்வராஜ்யா ஆபீசுக்குப் போனேன். அப்போது தான்

அவர் ஒரு நண்பரின் மோட்டாரில் தியாகராய நகரில் நடந்த ஒரு அரசியல் கூட்டத்தில் பேசச் சென்றார். நானும் கூட்டத்திற்குப் போனேன். கூட்டத்தைக் கலைக்கக் குடிகாரரும் தடிகாரரும் கூச்சலிட்டனர். குழந்தை, சத்தியமூர்த்தி இருவர் பேச்சையும் அவர்கள் இடைமறித்து அசம்பாவிதமான கேள்விகளைக் கேட்டனர். பாரதியார் எழுந்து ஒரு பாட்டைப் பாடினார். பிறகு ஏழைகளின் நிலைமையைப் பற்றிக் கண்ணீர் ததும்பப் பேசினார். அவர் பேசிய மட்டும் குண்டர்கள் 'கப் சுப்' என்றிருந்தனர். பிறகு கலாட்டா நடந்து கூட்டம் கலைந்தது. பாரதியார் ஒரு நண்பருடன் சுற்றிலுமுள்ள ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று குடி மறுத்தலைப் பற்றி உபதேசம் செய்தார். பிறகு அவர் எங்கோ சென்றுவிட்டார். மறுநாள் பத்திரிகையில் சிந்தாதிரிப் பேட்டையில் அவர் இரவு தமது 'ஏசுநாதர்' சரித்திரத்தை உபந்யாஸம் செய்ததாக வந்திருந்தது.

நான் ஒரு வாரம் ஸ்வராஜ்யா ஆபீசுக்கு அலைந்தேன். பாரதியார் எங்கெங்கோ என் கண்ணில் படாமல் சென்றார். தொழிலாளர் கூட்டத்தில், சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கும் கூட்டத்தில், ஜீவகாருண்யப் பிரசாரத்தில், மாதர் மறுமண இயக்கத்தில், ஹரிஜனப் பள்ளிக்கூடத்தில், சர்ச்சுகளில், கோயில்களில், மைலாப்பூர், ராமகிருஷ்ண மடத்தில், பஜனைக்கூடத்தில் எங்கெங்கோ சதா அவர் பேச்சும் பணியுமாயிருந்தார். நான் ஏமாந்தேன்.

ஒருநாள் நான் ராயப்பேட்டையிலிருந்து திருவல்லிக் கேணிக்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது நிலக் கடலையைக் கொறித்துக்கொண்டு, பாரதியார் மின்னலைப் போல நடந்து சென்றார். (அவர் உணவுக்கென்று நேரம் குறிப்பதில்லை. வேலை நடுவே கடலை கொறித்து ஏப்பம்

விட்டாலே போதும்.) நான் ஓடிச் சென்று அவரை வணங்கினேன். அவர் மட மட வென்று சிரித்து "வேலுவா; ஒரு வாரமாக வேட்டையாடுகிறீர்களே; என் ஒற்றருக்குக்கூட இவ்வளவு அக்கரை யில்லை. இந்தா ருங்கள்" என்று நிலக்கடலை தந்தார். நான் கொறித்துக் கொண்டு வெகு முயற்சியுடன் அவர் வேகத்தைப் பின் பற்றி நடந்தேன். அவர் நடையே ஓட்டம் போலிருந்தது. இருவரும் ஸ்வராஜ்யா ஆபீசுக்கு வந்தோம்.

ஸ்வராஜ்யா ஆபீஸ் மாடியிலே தான் பாரதியார் ஜாகை வைத்திருந்தார். வந்ததும் குழாயில் குளித்தார். தியானம் செய்தார். அவருடன் இராமச்சந்திரன் என்ற அன்பர் எப்போதும் இருந்து தொண்டு செய்தார். அவரே பாரதியாரின் உணவைக் கவனிப்பவர். அன்று சந்துரு என்ற அன்பர் ஆபீஸ் மாடியிலேயே ஒரு இயற்கை யுணவு தயாரித்திருந்தார். கனிகளும் கடலை யும் அவர் உணவு. தெருவில் நடந்தபோதே கடலை உண்டாயிற்று. இனி மூன்று கனிகளுடன் தண்ணீர் போதும் என்றார். அவருககாக இருந்த உணவை எனக் குத் தந்து உபசரித்தார். அப்போது இன்னும் இரண்டு நண்பர் வந்தனர். இருந்த உணவை அவர்களுக்கும் பங்கு வைத்தார். எல்லாரும் சந்தோஷமாகச் சாப்பிட்டுக் கொண்டே பேசினோம். சாப்பாடானதும் பாரதியார் பத்திரிகைகளைப் பார்த்து நீலப் பென்சிலால் ஏதோ குறித்துக் கொண்டார். கட்டுரைகளைப் பார்வை யிட்டு அடுக்கினார். தினசரித் தந்திகளைப் படித்துக் குறிப் பெழுதினார். சில கடிதங்களுக்கு மள மளவென்று பதில் எழுதினார். இடையே பாரத சக்திக்குப் பாட்டும் எழுதினார். எங்கள் கேள்விகளுக்கும் தெளிவாகவும் நகைச்சுவையுடனும் பதிலளித்தார். ஒரே சமயத்தில் ஐந்தாறு வேலைகளை அவர் கவனித்தது ஆச்சரியமா

யிருந்தது. நாளை ஸ்வராஜ்யாவுக்கு வேண்டியதை எங்களுடன் பேசிக்கொண்டே தயாரித்து விட்டார்.

அன்று பர்டோலி சத்தியாக்கிரகத்தைப் பற்றித் தலையங்கம் எழுதி யிருந்தார். அதைப் படித்த பிறகு நாங்கள் சில கேள்விகள் கேட்டோம்.

— இந்தச் சத்தியாக்கிரகம் வெல்லுமா ?

— சத்தியத்திற்கு வெற்றி யுண்டு ; ஆக்கிரகத்திற்குத் தோல்வி தான்.

— வரி கொடாதவரைச் சுட்டால் என்ன செய்வது? வெள்ளையரிடம் குண்டும் விமானமும் உண்டே !

— ஜாலியன்வாலா பாகில் 'டயர்' போட்ட குண்டு தானே இந்தியாவை அடித்தெழுப்பியது. ஒரு இந்தியனைச் சுட்டால் இலட்சம் இந்தியர் எழுந்திருப்பர். ஒவ்வொரு துளி தியாக ரத்தமும் ஒரு இந்திய வீரனைப் புறப்படும். பலாத்காரத்தின் கொடுமை நமது சுதந்தர உணர்ச்சியை அடித்தெழுப்பும். பர்டோலி நமது நிலையைக் காட்டுகிறது. இந்தியர் விழித்துக் கொண்டனர்; சுதந்தரம் பெற்றே தீருவர். இது காறும் நம்மை மிரட்டிய குண்டு பீரங்கிக்கும் இனிப் பயமில்லை. நம்மை இனிப் பலாத்காரம் பூச்சாண்டி காட்ட முடியாது. முப்பத்தைந்து கோடியில் ஒரு கோடி இறந்தாலும் சரி ; சுதந்தரக் கனல் அடிமைக் கோட்டையை அழித்தே தீரும். பர்டோலி நமது சுதந்தரக் கனலின் சூட்டை அளந்து காட்டுகிறது. அதிகாரிகள் படுத்தும் பாடெல்லாம் மலையை மோதிய அலை போல் ஆயின.

—இருந்தாலும் இந்தக் காலம் காந்திக்கு அவ்வளவு செல்வாக் கில்லை. காந்தி ஆட்கள் சர்க்கா சுற்றிக்கொண் டிருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சிதான் தைரியமாகப் பேசுகிறது.

—உண்மை, சுயராஜ்யக் கட்சி பேசுகிறது; மகான் காந்தி செய்கிறார். மகாத்மா உங்கள் மதிப்பை உத்தேசித்து சேவை செய்யவில்லை. சேவை அவருக்கு மூச்சு. 1921 முதல் தேசம் அடைந்த விழிப்பும் முன்னேற்றமும் அந்த மகானாலே தாம். இன்று இந்தியர் ஆகாச குண்டு விழுந் தாலும் அஞ்சாமல் தேசக் கொடி பிடித்து நிற்கத் தயார். அந்தத் தைரியத்தைத் தந்தது சத்தியாக்கிரகம் மகாத்மா போல் உலகில் எந்த நாட்டிலும் சுதந்தர வீரர் வந்த தில்லை.

— அது சரி. ஆனால் சர்க்கா சுற்றி, கதர் கட்டினால் சுதந்தரம் வந்து விடுமா?

— மில் துணி கட்டினால் சுதந்தரம் வந்து விடுமோ? சர்க்கா ஏழை யெளியவருக்கு ஏதோ உப்பு மிளகாய்க் காவது உதவுகிறதே. நான் கிராம சேவை செய்தபோது நிராதரவான ஏழைகள் நூல் நூற்றுத் தந்து நாலணா ஐந்தணா உதவியை எவ்வளவோ மகிழ்ச்சியுடன் ஏற்றார் கள். ஏழை இந்தியாவுக்குச் சர்க்கா காமதேனு போன்றது. மகாத்மாவின் யோசனைகளெல்லாம் கிராம இந்தியாவை முன்னேற்றும். கதர், மதுவிலக்கு, தீண் டாமை விலக்கு, இந்து முஸ்லிம் ஒற்றுமை, தேசியக்கல்வி, இந்தி கற்றல், சத்திய வாழ்வு, உழைத்துப் பிழைத்தல் எல்லாம் சரியான திட்டங்கள். இவை நமது நாட்டிற்குச் சமய சஞ்சீவி போன்றவை.

— இப்போதைக்கு காந்தியை நாடு பின்பற்ற வில்லை. ஒத்துழையாமை மலையேறி விட்டது.

— பாபநாசம் மகாநாட்டில் நான் கொடியேற்றிப் பேசுவேன். பந்துலு அய்யர் இதே கேள்வியை என்னிடம் கேட்டிருக்கிறார். "காந்தி காலம் மீளுமா?" என்ற கேள்வி. அதற்கு மகாநாட்டில் பதில் சொல்லுவேன்.

இதன் பிறகு பாரதியார் பாரத சக்தியைப் பிரித்தார். அதில் மகாத்மா படலத்தைப் படித்தார். மகாத்மாவின் வரலாற்றை அவர் விருத்தங்களாக எழுதியிருந்தார். கிணீரென்று பல ராகங்களில் படித்து ஆவேசமாகப் பொருள் விளக்கினார்.

ஒரு மணி நேரம் காந்தி காலட்சேபம் நடந்தது. எனது அவநம்பிக்கை பறந்தது. "மஹாத்மா காந்திக்கு ஜே" என்று நான் எழுந்தேன். அன்று முதல் நான் பாரதியாரைத் தேடிப் பிடித்து உரையாடி வந்தேன். பாபநாசம் மகாநாட்டில் அவர் ஒத்துழையாமையைப்பற்றியும், மகாத்மாவைப் பற்றியும், சத்தியாக்கிரகமே விடுதலை தரும் என்பதைப் பற்றியும் வெகு உருக்கமாகப் பேசித் தீர்த்தார். அவர் பேச்சு நிரம்ப விஷயங்கள் நிறைந்து, சரித்திர ஞானமும் தர்க்க ஞானமும் கூடி ஹாஸ்ய ரசத்துடன் பல சிறுகதைகளும் அடங்கி சுவாரஸ்யமாயிருந்தது. பாரதியார் பல கூட்டங்களில் பேசக் கேட்டேன்.

ஒரு நாள் இரவு அவரைத் தேடி ஸ்வராஜ்யா ஆபீசுக்குச் சென்றேன். சுவாமிகள் சுற்றுப் பிரயாணத்தில் இருக்கிறார் என்று அறிந்தேன். மறு நாள் முதல் பத்திரிகைகளில் பாரதியார் பல ஊர்களில் காங்கிரஸ் பிரசாரம் செய்து சுற்றுவதாகச் செய்தி வந்தது. சில காலம்

அந்தச் செய்தியும் காணோம். சுவாமிகள் இருக்குமிடமும் தெரியவில்லை. இரண்டாண்டுகளுக்குப் பிறகு தான் "ரமண விஜய" த்திலிருந்து சுவாமிகள் யோகத்திலேயே ஆழ்ந்து விட்டதை அறிந்தேன்.

நான் கண்ட பாரதியார் புன்னகை தவழும் தங்க முகமும், மின்னலைப் போன்ற வேகமும், இளகிய இனிய சொல்லும், மகா தைரியமும், ஒரே காஷாய உடையும், காற்றைப் போல் சுதந்தரமும், ஏழைகளிடம் இரக்கமும், சுறுசுறுப்பும் கொண்டு எப்போதும் கீதையை மனனம் செய்யும் மகானா யிருந்தார்.

குறிப்பு: இக் கட்டுரை தமிழ் "ஸ்வராஜ்யா"வில் வெளியிட அன்பர் அனுப்பினர்; வெளியிடு முன், சுத்தானந்த பாரதியார் அவர்கள் காங்கிரஸ் பணியேற்றுச் சென்றார். அதை இப்போது வெளியிடுகிறோம்.

எனது முதல் சந்திப்பு

ஆர். நாராயணசாமி

வெப்பம் தணிந்த ஓர் கோடை மாலை. தஞ்சை மாநகரின் தெற்கு ராஜ வீதியில் வடக்குச் சரகி லுள்ள ஒரு கட்டிடத்தை நோக்கி எனது நண்பர் ரா—வும் நானும் நடந்து சென்றுகொண் டிருந்தோம்.

—"அவர் இப்போது நிலையத்தில் இருப்பாரோ?"

—"இருப்பா ரென்றே நினைக்கிறேன். இல்லாமல், வெளியே போயிருந்தாலும் விரைவில் வந்துவிடுவார்; அவசியம் பார்க்கலாம்" என்றார் எனது நண்பர்.

காண அவா ஒரு பக்கம். முன் பின் அறியாத பெரியா ரொருவரை—புலமைப் புகழ் பூண்ட பத்திரிகாசிரியர் ஒருவரைக் காணுவதில் சிறியேனுக் கிருக்கும் அச்சம் ஒரு புறம்; நேரில் கண்டறியாத என்னை, பார்க்க வேண்டு மென்று அப் பெரியார் தெரிவித்த விருப்பத்தை நினைத்துப் பெருமித மகிழ்ச்சி இன்னொரு புறம். இப்படி யெல்லாம் என் மனம் துடித்தது.

—"ஆம் எப்படி அவர்? தாராளமாகப் பேசுவாரோ?"

—"ரொம்ப நல்ல மனிதர்; அன்பொழுக வார்த்தை யாடும் சுபாவ முடையவர். ஏன் இப்படி யோசனை யெல்லாம் செய்கிறீர்கள்? இதோ காணப் போகிறோம்; நேரில் வார்த்தையாடப் போகிறோம்; நீங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்!" சற்று மௌனத்தோடு

நடை. "பூர்ணனந்தா" அச்சகக் கட்டிடத்தின் வாயி லுக்கு வந்து விட்டோம். மெல்ல உட் சென்று விசாரித் தார் எனது நண்பர். சுவாமிகள் வெளியில் சென்றிருப்ப தாகவும், வரும் நேர மாயிற் றென்றும் தெரிய வந்தது. சற்று வாயிலிலேயே நின்றோம். அவாவுடனும் துடி துடிப் புடனும் நின்று கொண்டிருந்த எனக்கு, சுவாமிகளை அன்று காணமுடியாமல் திரும்ப நேருமோ வென்ற எண் ணமும் எழுந்து கவலையை உண்டாக்கியது. —"ஏன், ரா —, தினந்தோறும் மாலையில் அவர் வெளியில் போய் வருவது வழக்கமோ?" என்றேன் என் நண்பரைப் பார்த்து.

—"ஆம் அநேகமாக காலை மாலை வெளியில் சென்று யோக சாதனங்களை முடித்து வருவது வழக்கந் தான். பல தினங்களில் வடவாறு அல்லது வெண்ணாறுக்குச் சென்று குளித்துத் தியானஞ் செய்து காலையில் சூரியோதயத்தைக் கண்டு வருவார்; மாலையில் சூரியாஸ்தமானத்தைக் கண்டு வருவார்; சூரியனே அவர் நண்பன்."

இப்படி வார்த்தையாடிக் கொண்டே சற்று நின் றோம். எனது நண்பர், "அதோ வந்துவிட்டார் சுவாமி கள். வந்த காரியம் ஜயந்தான்! வாருங்கள்" என்றார். நண்பரின் மகிழ்ச்சியைக் கண்ட எனக்கும் உற்சாகம் பெரு கிற்று. பேராசிரிய ரொருவரை யல்லவோ பரிச்சயம் செய்து கொள்ளப் போகிறோம் என்று பெருமையும் உவகையுங் கொண்டது மனம்!

மின்னலைப் போன்ற மெல்லிய உருவம் — காஷாய ஜடாதரி — ஏகாங்கி — ஒரே ஆடையால் உடலை மூடிக் கொண்டிருந்தார். கையில் ஒற்றை மூழிப் பிரம்பு;

அதிவேகமான நடை — புன்னகையும் தேஜசும் திகழும் முகத்தோடு காட்சி யளித்த ஒரு யதியைச் சுட்டிக் காட்டினார் எனது நண்பர்!

"இவரா சுவாமி சுத்தானந்த பாரதியார்! என்ன எளிய தோற்றம்! உலகத்தைத் துறந்தவர் மாதிரி யன்றோ இருக்கிறார்! சமூக — அரசியல் கூச்சல்களிடையே தத்தளிக்கும் "சமரச போதினி"யை நடத்தும் ஆசிரியரா இவர்! சாந்த மூர்த்தியாக வன்றோ இருக்கிறார்!" என்றிவ்வாறு மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

கிட்ட நெருங்கியதும், கை கூப்பி வணங்கினேம். "இவர்தான் தாங்கள்......" என்று எனது நண்பர் வாயைத் திறந்தார். உடனே "வாருங்கள், வாருங்கள்! ரொம்ப சந்தோஷம். உங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தேன்; இன்றைக்குத்தான் இச் சந்திப்பு நேர இறைவனிச்சை போலும்" என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார் சுவாமிகள். என்ன கணீரென்ற குரல்!

என் மனம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது. முன் பின் அறியாதவனும் சிறியேனு மாகிய என்னிடம் என்ன அன்பு! என்ன சக்ஜமான சாந்தப் பேச்சு!

மிடுக்கும், கல்விச் செருக்கும், பிறரிடம் அசூயையும், சினமுங் குடி கொண்ட ஆசிரியர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தேன். 'பால பாரதி'யின் மாஜி ஆசிரியரைக் கண்டதும் அவ் வெண்ணங்க ளெல்லாம் பறந்தன!

"அவசர மில்லையே? சற்று நேரம் இருக்கலாமல்லவா? வாருங்கள்" என்று அழைத்துச் சென்று என்னை, தன் முன் நாற்காலியில் அமர்த்திப் புன்னகைத்தார். பிறகு, அன்று அச்சிட்ட 'சமரச போதினி'யைப்

பார்த்தார். பிறகு, கால நிகழ்ச்சிகளைப் பற்றி வெட்டு நடையில் பேசினார். ரசமும் நகைச்சுவையும் ததும்பிய சுவாமிகளின் கவிவாக்கை அனுபவித்தோம். —"வெண்ணாற்றுக்குச் சென்று காலை மாலை ஸ்நானம் செய்து வருகிறீர்களே ; ஆறு வெகு தூர மிருக்கிறதே! மூன்று மைல் நடந்தா ?"

—"ஆம் மூன்று மைல் ஒரு தூரமா? ஆரோக்கியத்தின் பொருட்டு இதைவிட இன்னும் அதிகமாகவே ஒவ்வொருவரும் தினம் நடக்க வேண்டும். நட இளஞ் சிங்கம் தலைநிமிர்ந்து நட" என்றார் சுவாமிகள் புன்னகையுடன் கடைக்கண்ணால் என்னை நோக்கியவாறு.

பின்பு,—"இவ்வருங் கோடையில் ஓடும் ஜலத்தில் ஸ்நானம் செய்வது எவ்வளவு ஆனந்தமா யிருக்கிறது! அவ்விடம் விட்டு வர மனமே யில்லை. அங்கே தியானம் நிம்மதியாக நடக்கிறது. இயற்கை யின்பமே இன்பம்!" என்றார். சற்று சம்பாஷணைக்குப் பின் மௌனம்.

—"தங்களைக் கண்டது விவேகானந்தரை ஸ்ரீ ராம கிருஷ்ணர் கண்டது மாதிரி! அப்படித்தானே?" என்று மகிழ்ச்சிப் புன்முறுவலுடன் பகர்ந்தார் சுவாமிகள். கிருஷ்ணனால் உபசரிக்கப் பெற்ற குசேலர் மாதிரி யானேன்! ஒன்றும் பேசத் தோன்றவில்லை. "எளியோனாகிய எனக்கேன் இவ்வளவு உபசாரம்?" என்றவாறு மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

பின்பு சுவாமிகள் வேறு ஆடை யணிந்துவந்து, காற்றாட உட்காருவோம் என்றார். கட்டிடத்தின் உட்புறத்தி லுள்ள முற்றத்தில் மூவரும் பாயில் அமர்ந்தோம். ஆசிரிய வேலையில் சுவாமிகளுக்கு நான் உதவி செய்வதைப் பற்றிச் சம்பாஷணை:

—"இதை நீங்கள் ஒரு தேச சேவையென்று கொள்ள வேண்டும். ஊதியம் பெறும் தொழிலென்றே நினைக்கக் கூடாது. தேசப்பணி—தெய்வப்பணி" என்று கருதுங்கள் என்றார் சுவாமிகள் கனிவு ததும்ப. "தங்கள் ஆசீர்வாதம்" என்று கை கூப்பினேன்.

சுவாமிகளுக்கு அன்று என்னைக் கண்டு தமக்கு உதவிக்காக ஏற்படுத்திக் கொண்டதைக் குறித்து உண்டான உவகைக்கு அளவில்லை. ஆசிரியர் வேலையில் உள்ள பலவித நுட்பங்களை எடுத்துச் சொன்னார். பத்திரிகையின் கொள்கையைப் பற்றி விவரித்தார். அரசியலிலும் உண்மை பிறழாத தன்மையைப் பற்றிச் சொன்னார். சமூக முன்னேற்றத்தைப் பற்றி விஸ்தரித்து, கிராமப் புனருத்தாரணத்தின் மூலந்தான் நமக்கு விமோசனம் என்ற தமது திடமான தீர்மானத்தையும் வெளிப்படுத்தினார். அதையே இன்றும் மகாத்மா சொல்லுகிறார்.

எனது செவிக்கும் மனத்திற்கும் விருந்தளித்ததோடு மட்டும் நிற்கவில்லை சுவாமிகள். "வந்த விருந்தினர்களுக்குக் கொடுக்க ஒன்றையுங் காணோம்—வாருங்கள், கொஞ்சம் சமையல் கச்சேரி செய்யலாம்!" என்றார் அடுத்தபடியாக.

சுவாமிகள் அச் சமயம் தனிமையாகவே அச்சகத்தின் பின்பக்கத்தில் வசித்துக்கொண்டுவந்தார். வேண்டிய போது, தமது உணவு முதலியவைகளைத் தாமே ஆக்கிக் கொண்டு "ஸ்வயம்பாகி"யா யிருந்து வந்தார். இரண்டு சிறிய மண் சட்டிகளே அவரிட மிருந்தன. அவற்றில் இயற்கை யுணவைத் தயாரித் துண்டார். அன்று எனக்காக அடுப்பை மூட்டினார். ரவா உப்புமா செய்ய ஏற்பாடாயிற்று. வேடிக்கையாகப் பேசிக் கொண்டே சுவாமிகள் அதி சீக்கிரம் சகல வேலைகளையும்

தாமே செய்து முடித்ததைக் கண்டு வியந்தேன். ஒரு தேர்ந்த பெண்மணிபோல் அவர் அடுப்புக் காரியம் பார்த்தார்.

மூவரும் உப்புமா உண்டோம். அது சாதரண உப்புமா இல்லை. அதில் சத்துள்ள கடலை, பசுங் காய் கறிகள் எல்லாம் சேர்ந்திருந்தன. அதை 'வைடமின் உப்புமா' என்றார் சுவாமிகள்.

பிறகு, உணவைப் பற்றி ஆராய்ச்சி நடந்தது. இயற்கை யுணவுகளைப் பற்றியும் சாத்வீக உணவின் தன்மையைப் பற்றியும் சுவாமிகள் விவரித்துப் பேசினார். அக்காலம் தினம் அரையணா நிலக்கடலை, ஓரணா வாழைப் பழம்; இவையே அவர் உணவு.

"ரொம்ப நாழிகையாய்விட்டது" என்றேன். "இருந்தாலும், பரவாயில்லை. இம் முக்கிய சந்திப்பு ஏற்பட்ட தல்லவோ பெரிது!" என்றார் சுவாமிகள் புன்னகையுடன். "சுவாமிகள் இப்படிப் பேசுவதற்கு, கொஞ்சங்கூட அருகதை இல்லையே என்னிடம்! என் அதிர்ஷ்டந் தான் இவரின் உயர்ந்த தலைமையின் கீழ் நான் பத்திரிகையில் ஈடுபடுவது!" என்று எண்ணிக் கொண்டேன். வெளியிற் சொல்ல வில்லை; சங்கோசம்! "வருகிறேன் நமஸ்காரம்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டேன். மறுநாள் முதல் சுவாமிகளுடனிருந்து தொண்டு செய்யும் பாக்கியம் பெற்றேன்.

* * *

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்து இருபது வருஷங்களுக்குப் பிறகும் அதே அன்பை இன்றும் கண்டேன்.

சுத்தானந்தக் கவி யமுதம்

தே. ப. பெருமாள்

பிரமனை விடக் கவிஞன் மேம்பட்டவன் என்று ஒரு தமிழ்ப் புலவர் மிகவும் அழகாகச் சொல்லிவைத்தார். அதற்கு அவர் காரணமும் சொல்லுகின்றார். என்ன வென்றால், பிரமன் படைக்கும் வெற்றுடலங்கள் எல்லாம் மண்ணகத்தில் மாய்ந்து போகின்றன. ஆனால் கவிஞன் செய்யும் கவிதை யுடலங்களோ அதைப்போல் அழிவதில்லை. அவை சாகாமல் நின்று நிலைக்கின்றன. கவிஞர் சொல்லும் காரணம் இது தான். இந்தத் தன்மையை வைத்தே பிரமனைவிடக் கவிஞன் சிறப்புடையவன் என்று நிலைநாட்டுகின்றார் அவர்.

கவிஞன் தனது நாட்டிற்காக வாழ்பவன். மக்கள் இன்பமே இவன் இன்பம். மக்கள் அமைதியுடன் ஆனந்த வாழ்வு வாழ்வதால் அதில் சாந்தி யடைவான். இவன் மக்களை நேர்மைப் படுத்தவும், அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தவும் இவனே தகுதியுடையவன். தனது அற்புதமான அழகு வாசகங்களில் உணர்ச்சிப் பொறி யேற்றி மின்னல் தாக்குதலால் மனித சமூகத்தை இவன் நல்வழிப் படுத்துகின்றான். இவன் காணும் எதிர்காலத்தின் சிந்தனைக் கனவுகள் இவனது மதுர-வேக செளந்தரியக் கவிதைகளில் உருவாகி உருவாகி வளர்ச்சி யடைந்து கைமேல் பலனைக் கொண்டு வருகின்றன. மக்களது அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதும் இவனது அறிவுப் புனலே. சமூகத்தின் குணவறட்சியை ஒழிப்பதும் இவனது குறையாத சிந்தனை மாரியே.

இதில் இவனுக்கு இடர்கள் ஏற்படலாம். ஒரு கூட்டத்தாரின் எதிர்ப்பை இவன் சம்பாதிக்கலாம். இவன் புகழ் நாச மாகலாம். இவன் வாழ்வுச் சிறப்பம் சிதைந்து அழகு குன்றிப் போகலாம். உயிருக்குக்கூடப் பேராபத்து உண்டாகலாம். ஆனாலும் இவைகளை யெல்லாம் இவன் வகை செய்யமாட்டான். இவன் தனது கடமையை விட்டு என்றும் பிறழ்வதில்லை. தனது லட்சியத்தினின்று என்றும் அசைவ தில்லை. அதிலேயே தனது வாழ்வின்பத்தைக் கண்டு அனுபவிப்பவன்; மலர்ச்சி பெற்று மகிழ்ச்சி கொள்பவன். இத்தகைய கவிஞர் கூட்டத்துள் ஒருவரே இன்று புதுவை ஸ்ரீ அரவிந்தாஸ்மத்தில் அமர்ந்து அற்புதமான உணர்ச்சிக் கவிதைகளைப் பாடித் தமிழர் குலத்தைத் தட்டி எழுப்பிவரும் ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார்.

சுத்தானந்த பாரதியார் அவேசக் கவிஞர். மக்கள் வாழ்வுத் துன்பங்களை நன்றாக அறிந்து அந்தத் துன்ப ஈடுபாட்டிலேயே இவர் கவிதைகள் பாடியிருக்கிறார். இவரது கவிதைகள் வானத்தில் மின்னும் தாரகைகள் அல்ல; அவை பகற்பொழுதில் வையகத்தில் பரவும் கதிர் மணிகள். தமிழர் சமுதாயத்திற்கு உணர்ச்சி யேற்றி நரம்புத் தளர்ச்சியைப் போக்கும் அதிசய மருந்துகள், மின்சாரம் போன்று பட்ட இடம் தொட்ட இடம் அனைத்தும் தன்மயமாக்கும் அற்புதசக்தியின் ஆக்கங்கள். சாசுவதமான மனிதப் பண்புகள் இவரது கவிதைகளின் உயிராக அமைந்திருக்கின்றன. "மனிதன் வாழப் பிறந்தவன்" என்ற உயரிய மூல தத்துவம் இவரது கவிதைகளில் பலவிடங்களில் விகசிதமா யிருக்கின்றது.

இன்றயத் தமிழர் சமுதாயத்தைக் கவிஞர் பார்க்கின்றார்: வீரத்திலே பிறந்து, வீரத்திலே வளர்ந்து வீர வாழ்வு கண்ட தமிழர்கள் இன்று கோழையராகிக்

குன்றி வாழ்வதைக் கண்டு நெஞ்சம் குமுறுகின்றார். ஊக்கமும் உணர்ச்சியும் பெற்று உலகமெல்லாம் புகழ் பரவ வாழ்ந்த தமிழர் சமுதாயம் ஊனமுற்று வாழ்வதைக் கண்டு மனம் புண்ணுகின்றார். கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் வாய்ந்த ஒழுக்க வாழ்வு பெற்றிருந்த தமிழர் குலம் இன்று உருமாறித் திறல் கெட்டு, கலை வறட்சி கொண்டு கலங்குவது கண்டு கண்ணீர் சொரிகின்றார். வளமை வாய்ந்து வையகத்திற்கு உணவு நல்கிய தமிழ் மக்கள் இன்று உணவிற்காகப் பிற நாடு நோக்குவது கண்டு இதயம் நலிகின்றார். கவிஞர் தமிழர் சமுதாயத்தைத் தட்டி யெழுப்புகின்றார். உணர்ச்சி மொழிகளினால் ஊக்கம் ஊட்டுகின்றார்.

"தலைநிமிர் தமிழா—பெற்ற
தாயின் மனங்குளிர
மலை குலைந்தாலும்—தமிழா
மனங் குலையாதே"

* * *

"குன்றினையும் தகர்ப்போம்—எதிர்
கூற்றினையும் குமைப்போம்
வென்றிப் புவிபுரப்போம்—கால
வேகத்தினைச் செயிப்போம்"

* * *

"வலிவு பெருக வேண்டும்—தமிழா
வாழ்வி லின்பம் வேண்டும்
மெலிவு பாவ மன்றோ?—தமிழா
வீறு கொண்டு பாய்வோம்."

என்று பாடும் கவிதைகளில் தமிழர்களை அவர் தட்டி யெழுப்பும் முறையை உணரலாம். நமது நெஞ்சத்திலும் மூச்சிலும் சொல்ல முடியாத ஒரு சக்தி குடிகொண்டு விடுகிறது. இக் கவிதைகளைப் பாடின அளவிலேயே

தமிழர் சமுதாயத்தை எதிர்க்கும் சக்தி எவ்வளவு பெரிதா யிருப்பினும் அஞ்சாத நிலையில் அதைத் தகர்ப் போம் என்று கூறும் மொழிகளில் ஆண்மையின் வீறு சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. "தமிழருக்கும் ஆட்சி புரியத் தெரியும்; தமிழர்கள் கண்டிருந்த தனியரசு எதிர்காலத்தில் இலங்கியே தீரும். அந்த ஆட்சியிலே தமிழரசு வல்லமை யுடையதால் இவ்வுலகு கண்டு புகழும்படி இருக்கும். கால வேகத்தில் வரும் அறி வின் ஆக்கமெல்லாம் அதில் நிரம்பி யிருக்கும்" என்னும் பொருள்படக் கவிஞர் கூறும் மொழிகளில் அவரது தீர்க்க தரிசனத்தால் அவர் வகுத்துக் காட்டும் லட்சியப் பாதை யின் தெளிவையும், கவிஞருக்கு அதில் ஏற்பட்டிருக்கும் இடத்தையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

சுத்தானந்தர் தமிழ் மொழிப் பற்று மிகவும் உடைய வர். அவர் நினைவனைத்தும் தமிழாக யிருப்பதை அவரது உணர்ச்சிச் சொற்கள் பலவற்றி னின்றும் அறியலாம். "ஏசுவதும் தமிழிலேயே ஏசுங்கள்; அதில் இன்பமே பெருகும்" என்று கவிஞர் கூறும் வாசகங்களி லிருந்து நினைப்பிற்கும் எட்டாத கவிஞரின் தமிழ்க் காதல் துள்ளிக் குதிக்கின்றது. ஏனைய மொழியைப் பிராண வாயுவாகக் கொள்ளக் கூறும் மேதாவி யல்ல நம் கவிஞர். ஆனால், அம் மொழிகளிலும் பாண்டித்தியம் பெறும் கலைச்சுவை மாந்த அழைக்கும் கற்பனைச் சிற்பி இவர். உலகில் உள்ள அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழில் கொண்டு வந்து தமிழை வளப்படுத்த அழைக்கும் வழிகாட்டி இவர். தாய்மொழியை உயிராகக் கொள்ள உபதேசிக்கும் உபதேசகர். அந்த இன்ப மொழி வாழப் பிரார்த்திக்கும் பக்தர்:

'தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே,
அமுதே, அழகே அன்பே, அருளே

"பிற மொழியினரும்—தமிழைப்
பேசிடச் செய்வோம்
அறிவு நூல்களெல்லாம்—தமிழில்
ஆக்கிப் பரப்பிடுவோம்"

* *

"எந்தாய் வாழியவே—எங்கள்
இன்னுயிர் வாழியவே"

தமிழாக்கத்திற்குப் பல வழிகள் கோலித்தருகின்றார் சுவாமி சுத்தானந்தர். அவ் வழியைப் பின்பற்றினால் தமிழகம் விரைவாக முன்னேற்றம் எய்தும். அந்தத் தமிழகத்தில் கல்வி சிறந்திருக்கும். ஒற்றுமை விளக்க முற்றிருக்கும். எல்லோரும் ஒரு நிலையில் வாழ்க்கை யின்பம் அனுபவிப்பார்கள். சோம்பலின்றி மக்கள் உழைப்பின் பெருக்கால் செழிப்பும் திடமும் பெற்றிருப் பார்கள். பெண்மக்கள் வீட்டரசிகளாய் விளக்கம் எய்தி நாட்டின் கருவூலங்களாகக் காட்சி தருவார்கள்.

"ஈட்டியதைப் பங்கு வைத்துண்போம்—இனி
ஏழையில்லை செல்வரில்லை தோழர்களெல்லாம்
வீட்டரசி மகிழ்ந்திடவே—புது
விருந்துடன் மணவினை சிறந்திடவே."

இந்த வழிகளைப் பின்பற்றி முன்னேற்ற மடையத் தாவி வரும் தமிழகத்திற்கும் தமிழ் மொழிக்கும் சுத்தானந்தர் வாழ்த்துக் கூறுகின்றார்.

"வாழிய வாழியவே—செல்வ
வளம்பெறத் தமிழ்ப்பயிர் வாழியவே!
வீழுக தீவினைகள்—நலம்
விளங்குக விடுதலை துலங்குகவே!
தாழுக மதவெறிகள்—சுத்த
சமரஸ மோங்குக விமரிசையாய்!
சூழுக பேரின்பம்—வெற்றிச்
சுடர்விரிந் தோங்குக கடமைகளே!"

சுவாமி சுத்தானந்தர் கலையன்னையின் சாயலை இயற்கையின் ஒவ்வொரு பொருட்களிலும் கண்டு ஆராதிக்கின்றார். இயற்கை யன்னையின் பேரொலி அவரைத் தன்வயப்படுத்தி ஆட்கொண்டிருக்கிறது. கரை புரண்டு வரும் பெருநதி பலவிடங்களுக்கும் வளம் பாய்ச்சுவது போல இவரது கவிதைகளும் தமிழர் சமுதாயத்தின் பல துறைகளுக்கும் சத்துணவாக அமைந்துவிட்டன. இவரைப்போல் இன்று யாருமே தமிழுக்குப் பணி புரியவில்லை. தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, தூர யிடங்களிலுமிருந்து வரும் தமிழ்ப் பத்திரிகை, பிரசுரங்களிலெல்லாம் இவரது துடிப்புக் கவிதைகளைக் காணலாம். இவர் இயற்றிய புத்தகங்களின் எண்ணிக்கையோ பலவாம். நாடகம், நாவல், சிறுகதைகள், காவியம், மொழிபெயர்ப்புகள், கீர்த்தனைகள் இன்னும் என்னவெல்லாமோ !

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது "சுவாமிகளைப் போல் தமிழுக்குத் தொண்டு செய்பவர் யாருமில்லை. என்ன அற்புதமான சிருஷ்டிகள். பல துறைகளிலும் அவர்கள் பாடிய பாடல்கள் தமிழகத்தைத் தட்டி யெழுப்பும் ஆற்றல் வாய்ந்தவை" என்று பாராட்டினார்கள். ஒரு கவிஞரே இன்னொரு கவிஞரைப் பற்றி இவ்வாறு சொல்லியிருக்கும்போது நாம் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது.

சுவாமி சுத்தானந்த பாரதியார் நீடூழி காலம் வாழ்ந்து தமிழன்னைக்குப் புதிய பல காவியங்கள் செய்து கொடுப்பாராக. இதுவே நமது ஆசை.

தமிழரின் கலைக் கோயில்

சே. ராஜம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தமிழரின் ஜீவ நாடி. தற்காலத் தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரண கர்த்தா. அவர் இதயத்திலே தமிழ்க் குருதி துள்ளிக் குதித்து ஓடுகின்றது. ஆண்டிலும், அறிவிலும், அமைதியிலும் முதிர்ந்த பெரியார். அவர் தொட்டதனைத்தும் பொன். தமிழன்னையின் ஒப்புயர்வற்ற சேய். ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்தாள் தாய். உவப்பதில் என்ன ஆச்சரியம். இத்தகைய கிடைத்தற்கரிய கவிமணியை அடைந்திருக்கும்போது!

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர்தான் அவர் நூல்களில் என் மனதைப் பறிகொடுத்தேன் அவ்வமயம் நான் ஆங்கில மொழியிலேயே லயித்திருந்தேன். ஆங்கிலத்தை விட அழகுடைய மொழி வேறில்லை என்பது அன்றைய என் கருத்து. இன்று "தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று உள்ளம் உரைக்கின்றது. அதன் சீரிளமைத் திறனை வியந்து, செயல் மறந்து வாழ்த்துகின்றேன். அவர்தம் நூல்களிலிருந்து, என்னால் மீள முடியவில்லை; மீளவும் விருப்பமில்லை. "எத்தனையோ செல்வம் எய்தி யெய்தி யிழந்தேன்" ஆனால்—என் அண்ணலினாலே அடைந்த இந்தக் கலைச் செல்வத்தை இழக்க முடியுமா? "நல்ல நீரின்றி மீனுக்கு வாழ்வுண்டா?" வீழ்ந்திடும் தமிழருக்கு அபயமளித்து தமிழனுக்கு ஆர்வமூட்டி, தமிழகத்தின் பெருமை பேசி, தமிழ் நாட்டின் தெருவுகளிலெல்லாம் தமிழ் முழக்கம்

செய்த கலைவள்ளல் தமிழரின் உயிர்நாடிதான். ஐயமேன்? ஜீவநாடி யில்லையேல் வாழ்வேது?

மேலைநாட்டில் கவிஞர்களுக்குச் செய்யும் மரியாதையைக் கவனிக்குங்கால் நாம் நம் கவிகளை எவ்வளவு புறக்கணித்து விட்டோம் என்பது எளிதில் புலனாகும். நாம் கடமையினின்றும் வழுவினோம்; செய்நன்றி மறந்தோம். கலைகளை இழந்தோம்; கவிகளையும் இகழ்ந்தோம். தமிழ் நாட்டின் நல்ல காலம், தமிழகத்தின் வானத்திலே இளஞ் சூரியன் நன்றி, அன்பு, அறிவு என்ற பல திறப்பட்ட கதிர்களுடன் உதயமாய்விட்டான். பயம் இனி நமக்கில்லை. காலத்தால் இறந்துவிட வில்லை தமிழ்; கவலையால் அழிந்துவிட வில்லை தமிழகம். தமிழும் தமிழகமும் நிலை பெற்றுவிட்டன. கன்னித் தமிழன்றோ! "உயர்வான தமிழ் பாடி, உலகெலாம் புகழவே, ஓத நான் காதல் கொண்டேன்" என்பது அடிகளின் திருவாக்கு. என்ன உன்னத லட்சியம்! அவர் நூல்கள் தமிழனைத் தமிழனாக்கியது. கோயில் சமைத்துவிட்டார்-ஆம், அன்னைக்குக் கோயில்; கலைக் கோயில் சமைத்து விட்டார் சுத்தானந்தர்.

பாரதியார் சிறந்த யோகியார். "ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்." ஆனால் தமிழைப் பொறுத்த மட்டில் அவருள்ளம் ஒடுங்க வில்லை. அவர் உள்ளம் பெரிய ஊற்று. தொட்டனைத்தும் ஊறும் மணற் கேணியைப் போல் தெளிவான நீர் கசியும் ஊற்று, ஆழமாகத் தான் இருக்க வேண்டுமல்லவா? தனக்கென வாழாது தமிழ், தமிழர், தமிழகத்திற் காகவே வாழும் பெற்றியார். ஓய்வற்ற சிந்தனையாளர், சலியாத எழுத்தாளர். அவருக்கு யாவும் தமிழ் மயம். இலக்கிய மணி; அறநெறிச் சுரங்கம். அவர் உள்ளமே ஒரு கலைக் குவியல் தான். கலைக்கு ஓர் கோயில் சமைக்கப் பெறுமானால், அதில் முதன்மை ஸ்தானம் அடிகளுக்கே உரியது.

அடிகள், "தன்கடன் அடியேனையுந் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றபடி அமைதியாக ஆடம்பரமின்றித் தமிழ்ப் பணியில் ஈடுபட்டவர். இவரைப் பற்றி வெளியுலகினர் அதிகமாகத் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அண்ணல், தனக்கே உரிய விறு விறுப்புக் கொண்ட நடையிலே ஏராளமான நூல்கள் இயற்றியுள்ளார். இவரது நூல்கள் எதுவா யினும் சரி. கட்டுரையோ, கவிதையோ, நாடகமோ-மூன்று குணங்களை அடிப்படையாகக் கொண்டது. அவை இனிமை, எளிமை, உண்மை என்பன. ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய மொழிகளை அறிந்தவர்; அழகான மொழிபெயர்ப்பு நூல்களும் வழிநூல்களும் மலர்ந் தருளி யுள்ளார்.

"கற்றதனாலாய பயன் என்னை; வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்?" பாரதியார் கடவுளிடம் தீராத நம்பிக்கை கொண்டவர். கீழ்வரும் வரிகளைக் கவனிப் போம்:—

"இல்லை யென்பான் யாரடா?—என் அப்பனைத்
தில்லையிலே பாரடா!"

என்று அறைகூவி யழைத்து, நாத்திகனைத் திணறடித்து, என் அப்பன் எத்தகையோன் தெரியுமா?

"கோடி அரக்கர் படை-கூடி யெதிர்த்தபோதும்,
கோதண்டத்தாலவர் குலத்தை வேர் அறுத்தவன்,
வாடிய தருமத்தை வானென வளர்ப்பவன்,
வாழையடி வாழையாய் வந்து நம்மைக்
காப்பவன்."

என்ன உண்மை; என்ன நம்பிக்கை. ஐயமேன்? "நம்பின வர் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு" கடவு ளிடம் பாரத்தை ஒப்புவித்துவிடு. இவ்வுலகத்தில்

நடப்பது யாதாயினும் அது கடவுள் மயமானது. "ஈஸாவாஸ்யம், இதம் சர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" இதை அடிகள் சித்தரிப்பதைப் பார்ப்போம்:

" பாரமெல்லாம் வைத்தேன்—உன்பாதத்தில்
பாரமெல்லாம் வைத்தேன் "
" சந்தையும் கலைந்தது; சரக்கெல்லாம் விற்றது;
வந்த வரவையும் தந்துவிட்டேன்-ஐயா
கூப்பிடுந்துணைக் கிங்கே கூடவருவா ரில்லை
சாப்பிட்ட சத்திரம், காப்பாற்றும் வீடாமோ? "
" போக்கு வரவு செய்யும் பொய்மனச் சுமையினைத்
தூக்க வலியில்லை தோன்றாத் துணை நீயே "

என்ன அற்புதமான சொல்லோவியம்! அடிகளின் உரை நடையிலே அறிவும் ஆற்றலும் செறிந்து விளங்குகின்றது அவர் உள்ளத்தைக் கலைக் கோயில் எனில் அவர் நூல் களைத் தமிழ்க்கோயில் என்னலாம். சிறப்பாகத் "திருநூ" லைக் குறிக்கின்றேன். அதில் பேசப்படாத பொருள்களே. இல்லை. நமக்கு இன்றியமையாத பொருள்கள் அனைத் தையும் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. " வாழ்வுத் தோட் டம் திருவருள் விளையாடும் தோட்டமாக மாறி, ஆன்ம ஞானத்தை உணர்த்துகின்றது. வேதம் உள்ளறிவு. கடவுள் அறிவு. உள்ளமே வேத நூல். புற வேறுபாடுக ளால் மனம் மாறுமல் எல்லாரும் உள்ளொன்றி வாழலாம்". இது வேதம் என்றதின் கீழ்ப் பேசப் படுகின்றது. ஒவ் வொரு பொருளிலும் அருள் விளங்குவதைப் 'படைப்பு' எடுத்துக் காட்டுகிறது. தவமாவது யாது? தன்னகந் தையை விடுவதே துறவு.

" மனத்தி லருண்மல்கி மானுலக முய்யுந்
தனைத்துறக்குந் தொண்டே தவம் "

என்று " துறவு " பறை யறைகின்றது. காமக் குரோ தாதி அழுக்குகள், 'உலகின் பாம்புகள்' என்றதின் கீழ்

விரிவாக விவரிக்கப்படுகின்றன. "எலி நிறைந்த கூரையில் பாம்பு வரும்; ஆசை நிறைந்த உள்ளத்தில் அஞ்ஞானப் பாம்பு வந்து புகும். மன விருளை ஞான முழுக்கினால் நீக்க வேண்டும். மனிதன் உடலை மட்டும் கழுவிப் பயனில்லை. அகத்தின் தூய்மையை வாய்மையினாலே தான் காணலாம்." நம் நாடு அடைந்த சீர்கேட்டை 'வெளி நாட்டுச் சாமான்கள்' படம் பிடித்துக் காட்டுகின்றது. 'குடி மறுத்தல்' மனிதன் மிருகத்தையும் தோற்கடிக்கக் கூடும் என்பதை வெளிப்படுத்துகின்றது. 'கொலை மறுத்தல்' மாந்தரின் அசுர குணத்தைச் சித்தரிக்கிறது. 'பொன் மாயம்' நவ நாகரிகத்திற்கோர் நல்ல சாட்டை. "மனத்திற்கணி அன்பு; வாய்க்கணி வாய்மை: உடலுக்கணி அருட்பணி—பின் மற்றுக்கணிகள்?" "சிக்கன மில்லாதவன் கடனாளியாவான்; கடன்பட்டவன் கவலை சுமப்பான்; கவலை, வாழ்வைச் சிதைக்கும்."

பள்ளிக் கல்வி கல்வியல்ல; அறிவும் உழைப்பும் பயனும் சேர்ந்த கல்வியே கல்வியாகும். ஏட்டுச் சுரைக்காய் எதற்குப் பிரயோசனம்? என்கிறார் சுத்தானந்தர்.

இன்னும் பல உரைக்கலாம். சுத்தானந்த நூல்கள் எடுக்க எடுக்கக் குறையாத அக்ஷய பாத்திரம். தமிழ் நாட்டிற்கு நன்மை புரிவதையே தன வாழ்வின் தனிப்பெரு நோக்காகக் கொண்டவர் அடிகள். "தமிழர் பெருமை தமிழ்ப் பெருமை, அன்பார் தமிழ்ப் பணியே இன்பத் தவம்." வள்ளுவன் குறளிலே முழுகி, கம்பன் இன்சுவையிலே திளைத்து, பாரதியின் பாட்டிலே ஈடுபட்டுப் பண்பட்ட உள்ளம். தமிழ் மக்கள் அடிகளுக்குச் செய்யும் கைமாறு தமிழை ஓதி, தமிழகத்தின் பெருமையை நிலைபெறச் செய்வதுதான். நாஞ்சில் நாட்டுக் கவிமணி திரு. தேசிகவிநாயகம் பிள்ளை யவர்கள் கூறிய வண்ணம்:

"தவத்திற் பெரியோன்; தமிழ்ப்பயிர் வளர்ப்போன்.
களங்கமி லுளத்தாற் கைமக வனையோன்;
அன்பா லெவரையுந் தன்பாற் கொள்வோன்;
பொதுநெறி கண்ட புண்ணியன்; எங்கும்
துதிபெறு சுவாமி சுத்தானந்த
பாரதி யெனப்பெயர் பகரும்
சீரிய ஞானச் செல்வ மிக்கோனே"

வாழி! நீடூழி வாழி!

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழகம் வாழ்க!!!

வழிகாட்டிய ஆனந்தம்

வி. எஸ். பார்த்தசாரதி

1914-ம் ஆண்டில், என் தந்தை சங்கீத வித்வான் ஸ்ரீநிவாச ஐயங்கார் திருநெல்வேலி ஜில்லாவில் பெருங்குளம் என்ற கிராமத்தில் "கான வித்யா ப்ரகாசினி" என்ற ஓர் சங்கீதப் பத்திரிகையைத் தொடங்கி, இரண்டாண்டுகள் நடத்தினர்; பின் நின்றுவிட்டது. நானும் எனது தந்தையின் மூலம் சங்கீதக் கலையில் தேர்ச்சி பெற்றேன். பின் 1931-ல் மேற்படி பத்திரிகையை எப்படியும் நடத்த வேண்டும் என்று எண்ணி அதை மீண்டுந் தொடங்கினேன். முதன் முதலில் சுவாமிகளுக்கே என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன். அன்று முதல் அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களில் உள்ள சில முக்கிய அம்சங்கள் இவை:

"பாட்டு, ராகம், தாளம்; பக்தி, ஞானம் இவைகள் சேர்ந்ததே யோகம். இக்காலப் பாடகருக்கு பக்தியும், பாட்டில் ஒரு சிறந்த ஆதர்சனமுந் தேவை. நவரச பாவனைகளுடன் பாடவேண்டும். ரச பாவனைக் கேற்றபடி குரலை உணர்த்த வேண்டும். தமிழருக்குப் புதிய வழி காட்ட வேண்டும். இங்கே கவிச்சோலை உள்ளது; குயில்கள் வருக! பத்து நல்ல இளஞ் சிங்கங்கள், குயில் குரலுடன் சேர்ந்தால், தமிழுலகை வியக்கச் செய்யும்படியான ஒரு மகத்தான கலை இயக்கம் நடத்தலாம்........."

"ஓங்காரத்தி னின்றே பாட்டு பிறந்தது. இதன் விரிவே அனைத்தும். இந்த ஓமொலி கல்லிலும், மண்ணிலும், புல்லிலும், புழுவிலுங் கூடக் கேட்கும். யோகியர் உள்ளத்தில் எப்போதும் இது தெளிவாக இசைக்கும். இவ்வொலியை எதிலும் அவர்கள் கண்டு எல்லாப் பொருள்களுடனும் நாத

வுறவு பேணுவார்கள். இன்னிசை கேட்கையில் இன்பம் உண்டாவதேன்? இன்னிசை வடிவாக நம்முள் ளிருக்கும் ஓங்காரம் அதனுடன் உறவு கலப்பதனுலே தான். அதனுலே தான் "ஓம் இதிப்ரஹ்ம" "ஓமிதி இதம் ஸர்வம்" "ஓம் இதி ஸாமாநி காயந்தி" ஓமே பிரமம்! ஓமே சாமகீதம் என்று உப நிடதம் முறையிடுகிறது"

என்று கூறும் யோகியார் இன்பமயப் பாடல்களைப் பரப்புவதில் தடை என்ன? இன்னும் கேளுங்கள் அவர் கூறுவதை

"சங்கீதம் பயில்வாருக்கு இந்த ஓங்கார சாதனம் மிக எளிதாகும். எனது தியான சமாதியில் சிதாகாச ஓங்காரம் பல அரிய இனிய இசை யருவிகளாக ஒலிக்கும்; உச்சியில் அதற்கேற்றபடி தாளம் போடுவது போல் உணர்ச்சி யுண் டாகும். உள்ளத்தில், சொல்லும் பொருளும் உதிக்கும்; உடனே பாட்டு உருவாகும். அதை நகாசு செய்தே தரு கிறேன்; என் பாட்டு, உன் பாட்டு. பாட்டைக் கேட்பது யார்; காதா? இல்லை; உள்ளே நாத வடிவா யிலங்கும் ஆன்மாவே, செவியைக் கருவியாகக் கொண்டு பாட்டை நுகர்கிறது. **"இதயத்திலிருந்து புலன்களின் இன்பங்களை அவனே அனுபவிக்கிருன்"** என்று கீதை கூறுகிறது. சங்கீதப் பயிற்சி நாத யோகப் பயிற்சி; அது புனிதமான கலை."

இக் கலையின்பத்தைப் பூர்ணமாக என் குருநாதர் அனுபவித்து வருகிருர் என்ருல், அது மிகை யாகாது. பாட்டின் கருத்திற்கு ஏற்ற ராகங்களை அவர்களைப்போல் ஒருவராலும் தேர்ந்தெடுக்க முடியாது. ஆனுல் அவர் களின் பாட்டிற் குரிய பாவத்தை எந்த ராகத்தில் எப்படி உருவகப் படுத்துவது என்பதில் என் போன்றவர்களுக்குத் தான் சந்தேகம்; அவர்கட்குச் சந்தேக மில்லை. ஆனுல் சுவாமிகள் பாட்டுக்கு ஸ்வரம் அமைக்கும்போது அவரே என் உள்ளத்தில் வேலை செய்து சரியானபடி அது அமை

யச் செய்வதுபோல் நான் உணர்கிறேன். சுவாமிகளின் கீர்த்தனங்கள் என்னைப் பரவசப் படுத்துகின்றன. நான் அவற்றைப் பாடாத நாளில்லை.

1932-ல் "புதுயுகப் பாட்டு" என்ற நூலை, "பாரத சக்தி நிலைய"த்தார் வெளியிட்டார்கள். அந்தப் பாடல்களுக்கு வர்ணமெட்டுகளும், ஸ்வரமும் அமைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்களின் ஊக்கமே இன்றும் என் வாழ்வு நிலை. இப்போதும் சுவாமிகளின் பாடல்களைக் காலத்திற்கேற்றவாறு ஸ்வரம் அமைத்து, யானும் என் சகோதரனும் பாடி வருகிறோம்.

* * *

"கானம் காதலுக்குத் தேனூட்டுகிறது. பாட்டு முழங்கும் வீடு குடிசையாயினும் இன்பக் கோபுர மாளிகை! பாட்டுடன் உண்ட உணவு கூழாயினும் அரசர்க்கரிய அமுத மாகும். பாட்டும் வாழ்வும் இணைபிரியாதன. பாட்டு, வாழ்வின் அமுதம். ஆழ்வார்கள், நாயன்மார்களின் வரலாறுகளில் பாட்டிற்குள்ள அற்புத சக்திகளைக் காண்கிறோம்."

* * *

"...இத்தகைய அழகுக் கலையின் பொன்முடியைக் கண்டது நமது பாரத தேசமே. அதிலும் நம் தமிழ்நாடே கலையின் சிகரத்தையும் கண்டது என்று சொல்லலாம்."

* * *

"ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜர்மனி, இத்தாலி, சீனம், ஜப்பான், வங்காளம், ஹிந்தி முதலிய மொழியினர் பாட்டுக்களைக் கேட்டுள்ளேன். ஆயினும் தமிழில் ஒளிரும் கலையின்பத்தில் பத்திலொரு பங்கேனும் அவற்றில் கண்டிலேன்.

> தாகூரின் பாட்டுகளைத் தாராளமாகப் பருகியுள்ளேன். எனினும், தமிழ்ப் பாட்டிற்கு மாற்று அதிகமாகவே காண்கிறேன்.''

என்ற சீரிய சிந்தனைகள் "கானவித்தியா ப்ரகாசினி" யில் வெளிவந்தவை!

சுவாமிகளுக்கு நாடகக் கலையில் தகுந்த பயிற்சியும் திறமையும் உண்டு. அவர்கள் நாடகங்களை நடிக்க "ஆனந்த நடன சபை" ஒன்று நாட்ட முயன்றோம்; அப்போது முயற்சி பலிக்கவில்லை; வருங்காலத்தில் பலிக்கும்.

> "இன்று வங்க நாடகம் அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் நடிக்கப் பெற்று இசை பெறுகிறது; வங்கக் கவி, உலகைத் திக்விஜயம் புரிகிறது. தமிழ்க் கலையில் வங்கம் அடைந்துள்ள சீர்திருத்தம் தக்கவாறு பொருந்த வேண்டும். அத்தகைய ஆற்றல் நமது தமிழுக்கு இல்லையா? உள்ளது. பதினாயிரம் ஆண்டுகளாக நாகரிகச் சிறப்பில் ஓங்கிய தமிழ்மொழி பூரண வளர்ச்சி பெற்ற இன்ப மொழி. ஆனால் இதைத் தமிழர் உணர வேண்டும். 'தமிழ், தமிழ்' என்று உயிர்க்க வேண்டும் வங்க வாலிபருக்குள்ள மொழியன்புக் கனல் தமிழர் உள்ளத்தில் பற்றவேண்டும்.''

> "தமிழ் வாணிக்கு நல்லணி சூட்டி வர்ணப்படுத்தி, கையில் மகரயாழும், காலிற் பொற்சலங்கையும் பூட்டி, தமிழ் நாட்டின் கலையுறக்கம் நீங்க, அழகு துலங்க, இன்பம் விளங்க, வீடு தோறும் 'கலீர் கலீ'ரென்று ஆனந்த நடனம் புரியச் செய்வோமாக.''

பதினாறுண்டுகளுக்கு முன் எழுதிய இவ்வாக்கு இன்று நிறைவேறி வருகிறது என்பதில் ஐயமில்லை!

தவ யோகிப் புலவர் பெருமான்

ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

பாரதத்தாயின் தவப் புதல்வரும், கர்மயோகியும், செந்தமிழ் நாட்டுத் தலைசிறந்த புலவரும், சுத்தாத்மாவுமான ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் கவிதை, வசனம், சிறுகதைகள் அனைத்தும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. எந்தப் பத்திரிகையை எடுக்கட்டும்; எந்த விசேஷ மலர்களையும், வெளியீடுகளையும் காணட்டும்; முதன்முதல், அதில் ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் அமுதக் கவிதை ஏதேனும் உள்ளதோ என்று தேடிப் பார்த்துப் படித்து மகிழ்ந்த பிறகே மற்றவைகளைப் பார்வையிடுவது என் வழக்கம். அவருடைய இலக்கியங்களில் உள்ள சொற்கோவையின் மேதையும், தூய உபதேச மொழிகளும், சின்னஞ்சிறு குழந்தையும் புரிந்து கொள்ளும்படியான இனிய எளிய சரள மதுர நடையும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததில் அதிசயமொன்றுமில்லை. தமிழ் எழுத்துலகின் வானத்தில் பவனி வரும் பகலவனுக்கு ஸ்ரீ சுத்தானந்தரை ஒப்பிட்டால், கேவலம் மின்மினிப் பூச்சிக்கு என்னை ஒப்பிடுவதும் அதிகமே. இந்தச் சிறு மின்மினிக்கு அந்த சூரிய தேவனை ஏறெடுத்துப் பார்க்கவும் கண் கூசும் பொழுது, அந்த மகா தவயோகியைப் பற்றி அழகாகப் புகழுரை கூறி, அருளும் ஆசீர்வாதமும் பெறச் சக்தியில்லைத்தான். ஆனால், ஸ்ரீ ராமபிரான் சமுத்திரத்திற்குப் பாலம் கட்டுகையில் சின்னஞ்சிறு அணில் ஒன்று தன் குஞ்சுக் கைகளால் மண் சுமந்து குவித்ததுபோல் இந்தப் புனித மலருக்கு நானும் என் அறிவுக்கு எட்டிய அளவு ஒரு சிறு கட்டுரை எழுதி நிவேதனம் செய்ய முற்பட்டிருக்கிறேன்.

ஸ்ரீ சுத்தானந்தர், யோகிகளிலும் சிறந்த மகாயோகி. சாதாரணமாக யோகிகள், உலகப்பற்றற்று, தவம்புரிந்து, தங்கள் மோக்ஷ மார்க்கத்தைத் தேடிச் சென்ருல், ஸ்ரீ சுத்தானந்தர் கடுமையான தவம் புரிந்து சக்தியின் அருள் பெற்று, தன் தாய்நாட்டிற்கும்,...ஏன்? தான் ஜன்மம் எடுத்த உலகின் சகல மாந்தர்களுக்கும் உதவி புரிந்து உய்விக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிருர். இவர் தமிழ் நாட்டு ஜனசமூகத்திற்கு இலக்கிய மூலமும், தனுமன தனம் மூலமும் செய்திருக்கும் பேருதவி எண்ணிறந்தவை. இன்னும் செய்து வருகிருர்; செய்வார்.

இவருடைய வேதாந்த கிரந்தங்களேயும், கடவுள் வழிபாடுகளேயும், கதை, கட்டுரைகளேயும் படிக்கப் படிக்கத் தெவிட்டாது. அவைகளின் மூலம் நம் உள்ளம் விரிகிறது (விசாலமடைகிறது). புனித பாவமும் தெய்வ பக்தியும், சதாசாரமும், சகோதர மனப்பான்மையும், சமரசத் தன்மையும் நம்மையும் அறியாமலே நம் இதயத்திற்குள் புகுந்து வேலேசெய்யத் துவங்குகின்றன. மனதுள் விவரிக்க இயலாத இனிமையும், அமைதியும், பெருகிப் பேரானந்தம் உண்டாகிறது. உலகுக்கு நம் கையாலான தொண்டாற்றி நம் ஜன்மத்தை சார்த்தம் செய்து கொள்வதற்கு சுத்தானந்தரின் அருமை யருமையான இலக்கியச் செல்வங்களேப் படித்தானந்தித்து உபதேசம் பெறுவது ஒரு நல்ல மார்க்கம் என்பது என் அபிப்பிராயம்; அனுபவமுந்தான். நம் அறிவு விசாலத்திற்கும், பொதுஜன ஊழியத்திற்கும் தர்ம போதனேக்கும், தேச சேவைக்கும் உபதேசம் பெற, பெரியோர்களே நாடிச் செல்வதும், பிரசங்கங்களேக் கேட்கப் போவதுமாகக் காலத்தைப் போக்குவதற்குப் பதிலாக, ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் ஒரே ஒரு கவிதையைப் படித்த மாத்திரத்தில் பயனடைந்து விடலாம் என்பது என் துணிபு.

இதற்கு உதாரணமாக இங்கே ஒரு செய்யுளைத் தருகிறேன் பாருங்கள். இந்தச் சின்னஞ் சிறு செய்யுளில் எவ்வளவு மகத்துவமான—புனிதமான உண்மை பொதிந்து கிடக்கிறது :

"நீண்ட திரி குறைந்தும்—தனது
நெய்வளங் குறைந்தும்
தூண்டு சுடரினைப் போல்—அருள்
தொண்டினில் இன்புறுவோம்"

இன்னொரு செய்யுள் :

"ஊருக்குபகாரமாக உதவிடும்
உத்தமனே மனிதன்"

எப்பேர்ப் பட்ட தர்மோபதேசம் !

தாய்நாட்டின் பக்தி பெருகும்படியான கவிதைகள் பற்பல பாடியிருக்கிறார் இவர் :

"பாரத தேச மென்றால் — ஒரு
பரவசம் பெருகுதென் அறிவினிலே"

* * *

"தலைநிமிர் தமிழா — பெற்ற
தாயின் மனங் குளிர,
மலை குலைந்நாலும் — தமிழா,
மனங் குலையாதே !"

என்பன போன்ற வீரக்கனலும், தாய்நாட்டுப் பற்றுதலும், தெய்வீகச் சிந்தனையும், பரோபகாரத் தன்மையும் பொலியும் இவருடைய அற்புதக் கவிதைகளைப் படிக்கப் படிக்க எத்தகைய பேடியின் உள்ளமும் மடமைப் புத்தியும் குரூரத் தன்மையும் கரைந்துருகிப் பண்பாட்டையும் என்பதில் ஐயமே யில்லை. "பெண்ணின் பெருமை" என்ற இவருடைய செய்யுள் என் மனதைப் பெரிதும் கவர்ந்து

மகிழ்விக்கின்றது. ஏன்...இவருடைய கவிதைகள் ஒவ்வொன்றுந் தான் ஒவ்வொரு மாணிக்கமாகத் திகழ்கின்றது. எல்லாம் சிறந்தவைகளே.

சுத்தானந்த பாரதியாரின் கவிதைகளைப் போலவே வசன இலக்கியமும், கதை, கட்டுரைகளும் மனிதனின் உள்ளத்தைச் செப்பனிட்டுச் சுத்த முக்த சமத்துவ சமரச சன்மார்க்கத்தில் அழைத்துச் செல்வதற்கான போதனைக் களஞ்சியமாகவும், அதேசமயம், மனதிற்கு இனிமையும் ஆனந்தமுந் தரும் உல்லாச இலக்கியமாகவும் திகழ்கின்றன.

இவரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கப் படிக்க, இவர் தன் தாய்நாட்டிற்கும், ஜன சமுதாயத்திற்கும் செய்துள்ள எண்ணிறந்த அரிய உபகாரங்களைக் கண்டு வியக்கிறோம். கிராமசேவை, ஹரிஜனசேவை, கல்வியறிவு புகட்டுதல், யோகப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி, தேசியப் பிரசாரம், சாரணப் பயிற்சி, பத்திரிகைத் தொழில், கதர்த் தொண்டு, இயற்கைத் தொண்டு போன்ற இன்னும் எவ்வளவோ துறைகளில் ஜன சமூகத்திற்கு அபாரமான உதவி புரிந்துள்ளார். இவ்வளவு அரிய பெரிய காரியங்களின் நடுவிலும் தூய பிரம்மசரியம் பூண்டு தவ யோகத்தையும், சக்தி உபாசனையையும் இடைவிடாது செய்து கடுந் தவம் புரிந்து, பழுத்த ஞானியாக விளங்குகிறார். வாழ்க சுத்தானந்தர்!

யோக சித்தியின் இரு உபதேசங்கள்

"சோமு"

இன்று யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் ஜனன தினம். இந்த முக்கியமான தினத்தில் நாம் யோகியாருடைய இரண்டொரு கொள்கைகளை நினைவு கூர்தல் பொருந்தும்.

கீதையின் பொன் போன்ற மொழிகளில் ஒன்று; 'ஸம்சயாத்மா விநச்யதி" என்பது. சந்தேகப் படுகிறவன் நாசத்தை அடைகிறான் என்று பகவான் உபதேசித்தார். ஆனால், உலகில் அறிவு வளர வளர, சந்தேகமும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இது முரண்பாடு போலத் தோன்றக் கூடிய ஓர் உண்மை. மனிதனுடைய புத்தி வியாபாகம் அடையும் பொழுது, அவனுடைய சந்தேகத்தின் எல்லையும் விரிகிறது. எனவே, தீக்ஷண்யமான அறிவாளி தான் விநோதமான சந்தேகங்களுக் கெல்லாம் உள்ளாகிறான். உலகின் சாதாரண காரியங்களிலுங் கூட இந்த சந்தேக—உணர்ச்சி புகுந்து, அவனைச் சஞ்சலப் படுத்துகிறது. தன்னைச் சுற்றி யுள்ள பொருள் களிடத்தில், தனது நண்பர்களிடத்தில், -ஏன்- தன்னிடத்திலுங்கூட அவன் சந்தேகம் அடைகிறான். அவனுடைய யோசனை ஒரு கணத்திற்குள் பளிச்சுப் பளிச்சென்று ஒரு கோடிக் கேள்விகளை மின்னல் போல வீசுகிறது அறிவு என்ற வானத்திலே. பிறகு; — பிறகு என்ன? ஒரே இடியும் மழையுந் தான்.

அறிவாளியின் பாடு இப்படி; யோகியின் நிலை? அறிவினுடைய எல்லை எங்கு முடிகிறதோ அங்குதான்

யோகியின் காரியம் தொடங்குகிறது. 'சந்தேகத்தைக் கொன்று விடு' என்பதுதான் யோகியின் முதலாவது பாடம். விஷயங்களைப் பகுத்துக்கொண்டே செல்கிற மனப் பண்பு மாறி, விஷயங்களை ஒருமைப் படுத்துகிற மனப் பக்குவம் சித்திக்க வேண்டும். அப்பொழுது, அறிவாளி யோகி யாகிறன். இது அகவுலகின் பரிணும தத்துவம். இந்தத் தத்துவத்தைத் தான் சுப்பிரமணிய பாரதியார்,

"காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்று கை கொட்டி முழக்குகிறர்.

இந்த மன நிலை சாதாரண மனிதர்களுக்குச் சித்திப்ப தில்லை. ஒளவையாரின் பாடல் உங்களுக்கு நினைவிருக்க லாமே. 'ஒன்ருகக் காண்பதே காட்சி' என்று, இந்தக் காட்சியை (சங்கேதத்தில் சொல்லுகிறர்களே 'திருஷ்டி' அல்லது 'நோக்கு', என்று இதை) அடையவேண்டும் என்பதாக யோகி சுத்தானந்த பாரதியார் மொழிகிறர்.

"அன்னிய மில்லா நதறிந்தடங்கி, எக்காலுந்
தன்னிலையிற் ருஞ யிரு."

நல்ல உபதேசந்தான். பேத உணர்ச்சிகளை அகற்றி விட்டு, ஏகம் என்ற உணர்வு கொண்டு, வெளியுலகோடு ஒன்றி விட்டோமாஞல் நமது உள்ளமானது இந்த உலகத் தின் அளவுக்குப் பரந்து விடும்; பூரித்து விடும். மனத்தில் "பொறை" உண்டாகும். அப்பொழுது தன்பிழை நீங்கிப் பிறர் பிழை தாங்கக் கூடிய அந்தப் பொறை யுணர்ச்சி மனிதனைத் தெய்வமாக்கி விடுகிறதாம். யோகியார் கூறு கிறர்:

"தன்பிழையைப் போக்கிப் பிறர்செய் பிழைதாங்கி
யன்புசெய்வா னன்பர்க் கிறை."

இந்த அன்பனை என்னென்று அழைப்பது! "இறைவன்" என்றே நாமகரணம் செய்கிறார் சுத்தானந்தர்.

இன்று யோகியாரின் இந்த இரண்டு உபதேசங்களை இதயத்தில் உட்கொள்வோம். உட்கொண்டால், நமக்கு 'யோக சித்தி' என்னவென்று புலனாகும். யோகியாருடைய அந்த எக்களிப்பு நமக்கும் உண்டாகும். எப்படி?

"வையமெலாம் சிற்சபை; நல் வாழ்வெல்லாம் வேள்வியே;
செய்வதெலாந் தெய்வச் செயல்"

"**யோக சித்தி**" என்பது சுத்தானந்த பாரதியார் இயற்றிய 405 குறள் கொண்ட ஒரு யோக நூல்.

நான் அறிந்த சுவாமிகள்

டி. எஸ். ராஜகோபாலன்

[என் வாழ்க்கையின் சிறந்த பகுதி சுவாமிகளால் உறுதி செய்யப்பட்டது என்பது என் நினைவு. ஆகவே, தெரிந்த சில குறிப்புகளைத் தருகிறேன்.]

நகரத்தார் பள்ளிக்கூடம்

வி. ஏ. ஸ்மித் என்ற ஆங்கிலத் துரையினால் கடைசியாக வெளியிடப் பெற்ற இந்திய சரித்திரப் புத்தகத்தை 'பி. ஏ.,' வகுப்புகளில் படித்த காலத்திலேயே, சரித்திர போதனை மூலம் ஒரு சிறு பகுதி நாட்டுத் தொண்டு செய்யலாம் என்று கருதினேன். ஆகையினால் இதர சில உத்தியோகங்களைக் கைவிட்டு, ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டேன். அதிலும் 1923—24ம் ஆண்டுகளில் போதனா முறைப் பயிற்சியின் பெரும் பகுதியை, பேராசிரியர் பி. டி. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களிடம் பெற்றபோது அந்த நினைவு உறுதியாயிற்று. பயிற்சி முடிந்து. முதன் முதலாக தேவகோட்டை நகரத்தார் ஹைஸ்கூலில் வேலை கிடைத்தது. அதன் சூழ்நிலை என் மனப்போக்கிற்கு ஏற்றதாக அமைந்தது. பள்ளிக்கூடம் ஊருக்கு வெளியில் புதூரில் எட்வர்ட் ஹால் புத்தகசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது. ஆரம்பத்தில் குடும்பத்துடனிருக்க வசதியின்றி, ஓட்டலில் சாப்பாடும் பள்ளிக்கூட அறைகளில் ஒன்றில் வாசமுமாகப் பொழுது கழிந்தது. (அந்த இடம் இப்பொழுது முனிசிபல் முசாபுரி பங்களாவாக மாறியிருக்கிறது.)

சுவாமிகள் எழுதிய படங்கள்

பள்ளிக்கூடச் சுவர்களில் அசல் அச்சுப்போன்ற—ஆனால் கையெழுத்து—தேசப்படங்கள் விளங்கின. அச்சுப் போன்ற எழுத்தில் சில நீதி வாக்கியங்கள் பொறிக்கப் பெற்றிருந்ததையுங் கண்டேன். நான் இருந்த அறையின் சுவர்களில் கூர்ந்து கவனித்தபோது, பென்சில் குறிப்பு களாக, குறளையொத்த பல பாக்களைப் படித்தேன். பழைய காகிதங்கள் அடங்கிய கள்ளிப் பெட்டியைப் பரி சோதிக்க நேர்ந்தபோது புத்தக உருவத்தில் வெளிவரக் கூடியனவான சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், இயற் கைப் பொருட்பாடம், சுகாதாரம், தேகப் பயிற்சி இவற் றைப் பற்றிய குறிப்புகள் உள்ள பல காகிதங்களைக் கண்டேன். எழுத்து, கருத்து—உட்பொருள்கள் மிகத் திறமை யுள்ளனவாகக் காணப்பட்டன.

ஆசிரியரா யிருந்தார்

இவற்றைப் பற்றி விசாரித்தேன். “இந்தப் பள்ளிக் கூடம், ஆரம்பத்தில் தேசியப் பள்ளிக்கூடமாக நிறு வப் பெற்றது; தமிழ்ப் படிப்பு, நூற்றல், நெய்தல், தோட்ட வேலை இவையே முதல் நோக்கம். ஆங்கிலம், சரித்திரம், கணிதம், பூகோளம், விஞ்ஞானம் முதலியன அடுத்தபடியான நோக்கம். இதற்கான வேலைகள் அதோ பெரிய மைனருடைய இரண்டு தோட்டங்களில் நடை பெற்றன. மேற்கண்ட சின்னங்களை அங்கும் இங்கும் காணலாம். நடுவே யுள்ள சௌகண்டியில் நூற்றல் நடை பெறும். (இப்போது இது ஹரிஜன் ரங்கண்ணு அவர் களின் வீடாக இருக்கிறது.) கைத்தறி தான் நமது பள்ளி யிலேயே இருக்கிறது. சர்க்காக்களையும் நீங்கள் பார்க் கிறீர்கள். அப்போது இங்கே சுத்தானந்த பாரதியார் என்

ெருரு ஆசிரியர் வேலே பார்த்தார்கள். அவர்கள் செய்தது தான் இதெல்லாம்" என்று நண்பர் வர்ணித்தனர்.

அவர்கள் இப்போது எங்கே? ஏன் இதை விட்டுச் சென்ருர்கள்? என்று கேட்டேன். "காலப் போக்கையும் ஊரின் புதிய தேவைகளேயும் ஒட்டி அரசாங்க அங்கீகாரம் பெருது பள்ளிக்கூடம் நடத்த முடியவில்லே. அப்படி அங்கீகாரம் பெற்று, பள்ளிக்கூடம் நடத்தத் துவங்கிய தினம் முதல், பாரதியார் விலகிக்கொண்டு விட்டார். தற்சமயம் சேரமாதேவி வ. வெ. சு. ஐயர் அவர்களுடைய குரு குலத்தில் இருக்கிருர்கள். போதளுசிரியர் மட்டுமின்றி, "பால பாரதி" ஆசிரியராகவு மிருக்கிருர்கள்" என்று விடை கிடைத்தது.

வைத்திநாதன்

சுவாமிகள் பள்ளிக்கூடத்திலிருந்து விலகிய காலத்தில் அவர்களேத் தெய்வமாகக் கொண்டொழுகிய சில மாணுக்கர்கள் பள்ளிப் படிப்பைக் கைவிட்டதாகவும் கேள்வியுற்றேன். அவ்வித மாணுக்கர்களில் ஒருவர், பாக்கெட் சைசில் உள்ள 'அறநூல்' என்ற புத்தகங்களில் சுமார் இருபத்தைந்து பிரதிகளேயும், சுவாமிகள் கைப்பட எழுதிய ஒரு கடிதத்தையும் கொண்டுவந்து என்னிடம் தந்தார். அவர் தான் தேவகோட்டை வைத்திநாதன் என்ற இளேஞர். இவர் சுவாமிகளின் குழந்தை போல் வளர்ந்தவர் அவர் முகத்தில் சாந்தம், அமைதி, அருள் பொலிந்திருக்கக் கண்டேன். கடிதத்தில் என் விலாசம் சுத்தமாக எழுதப்பெற்றிருந்தது. கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்: "இது கொண்டுவரும் வைத்திநாதன் ஆங்கிலம் படிக்க விரும்புகிருன்; உங்களால் முடிந்த உதவியைச் செய்தால் எனக்குச் சந்தோஷமாகும்!" மாணுக்கரைப் பார்த்தேன்.

தூய கதராடை யணிந்த கட்டுள்ள, பணிவு தோன்றும் உருவம். அப்போது சுவாமிகள் தஞ்சையிலிருந்து வெளி வந்த "சமரச போதினி" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தார்கள். வைத்திநாதன் சுமார் 10, 12—மாதங்கள் வரையில் என்னிடம் படித்தான். அந்தச் சொற்ப காலத் தில் சீக்கிரமே பாடங்களைப் புரிந்துகொண்டு படித்தான். ஆனால், நான் போதித்ததை விட அவன் மூலம் நானே பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். இப்போது "யோக சித்தி" என்ற நூல் பிரபலமாய் விளங்குகிறது. அக் காலம் 'அற நூல்' அப்படி விளங்கியது. அதில் இக் கருத்துகள் என் உள்ளத்தை அள்ளின.

என்னைக் கவர்ந்த மொழிகள்

"எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவன்
எல்லா வுடலும் இறைவனு லயமே.

பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர்;
உளன் ஒருவன் என்றே யுணர்.

அன்புண்மை யாக அமர்ந்த கடவுட்குன்
அன்புண்மை யால்வழிபா டாற்று.

போக்கும், வரவும் பொழுதும் அறியோமால்
யாக்கையோ டேசெய் அறம்.

இறந்தபின் மக்கள் இயற்றுமற மெல்லாம்
கறந்தபின் கன்றூட்டல் காண்.

பணத்தால் உலகு படுதுயரைப் பார்மின்
குணத்தோரும் வீழுங் குழி.

சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்
வீரனாய் வாழ விரும்பு."

சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வரலாற்றையும் உபதேசங்களையும் ஒரு காவிய நூலாகச் செய்திருந்தார். அதில்:

"கோயிலுல கந்தனிலே
கோதற்ற தொண்டுடனே
வாய்மனமெய்த் தூய்மையுற
வாழ்வோம் ஒருகுலமாய்"

"உள்ளே தேடி உள்ளதைக் கண்டால்
உள்ளமும் அதுவே உலகமும் அதுவே."

முதலிய உபதேசங்கள் என் மனதைக் கவர்ந்தன

சுவாமிகள் உபதேசம்

நான் கோடை விடுமுறைக்கு என் சொந்த ஊருக்குச் சென்றேன்; வழியில் 'சமரச போதினி' ஆசிரியரா யிருந்த சுவாமிகளைத் தரிசித்தேன்; அந்த நாளை நான் என்றும் மறக்க முடியாது. அது எனக்குக் கிடைத்த பெரும் பேறு. சுவாமிகள் ஒளி பொருந்திய யோகியாகத் தோன்றினார். உடலமைப்பு: ஒரே காவி யுடை, அருள் ஒழுகும் முகம்; ஆட்களை ஊடுருவிப் பார்க்கும் பிரகாச மான விழிகள். ஆணித்தரமான சொற்களுடன் விளங்கிய சுவாமிகள் என்னை வசீகரித்து விட்டார். என் விஷயங் களை யெல்லாம் அவரிடம் சொன்னேன்; அவர்கள் கனி வுள்ள புன்னகையுடன் இனிய மொழிகள் கூறினார்கள்:

"அவரவர் திறமையைக் கொண்டு தேச நலம் புரிய லாம்; நன்மை யெல்லாம் நாட்டு நலமே. தோட்டி ஒழுங் காகத்தெருக் கூட்டினால் அதுவும் தேச சேவையே. ஒரு பத் திராதிபர், எழுத்தால் அன்பும் ஐக்யமும், அறவுணர்வும், வீரமும், தொழிலும், தொண்டுந் தூண்டினால் அதுவும்

தேச சேவையே. திருவல்லிக்கேணிக் கடற் கரையிலே பேசுவதுதான் தேச சேவை என்பதன்று; கிராமங்களில் ஏழைகளுக்கு 'அ, ஆ' சொல்லி வைத்தாலும் தேச சேவை தான்; பத்திரிகையில் பெயர் அடிபடுவதே தேச பக்தருக்குப் புகழன்று; ஒரு குக் கிராமத்தில் சுகாதார வழிகளை நடத்திக் காட்டினால் அல்லது இரண்டு ராட்டினங்களைச் சுழல விட்டாலும் முதல் தரமான தேச சேவையாகும்."

"நமது நாட்டின் துயர்கள் மூன்று: வறுமை, மடமை, அடிமைத்தனம். தொழில், கல்வி, உரிமை—இம் மூன்றும் அவற்றிற்கு மருந்து; இந்த மூன்று வழிகளில் எவர் எப்படித் தொண்டு செய்தாலும் தேச சேவையே அந்தச் சேவை பத்திரிகையில் வராவிட்டால் என்ன? மனச்சாட்சி "சபாஷ்; நல்ல காரியம் செய்தாய்" என்றாலே போதுமே.

"நாட்டின் அடிமையும் நல்குரவும், நீக்கிடலே
வீட்டின்ப மென்ன விரும்பு."

"இந்தியா சிறையிலிருக்கிறது; அதை விடுவிக்க வேண்டும். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் கல்வியறிவும் தொழிலறிவும் முன்னேறியிருப்பதைப் பார்த்து, நமது நாட்டையும் பார்த்தால்......கண்ணீர் வருகிறது; நம் அன்னை இருளும் பேய்களும் மண்டிய சிறையிலிருக்கிறாள்; அரை வயிற்றிற்குக் கூடக் கஞ்சியில்லாது எலும்பெடுத்து முகம் வாடிப் பஞ்சையாயிருக்கிறாள்; கந்தை யணிந்திருக்கிறாள். அவள் சிறையைப் பீரங்கி ராக்ஷஸர் காத்து வருகிறார்கள். அவளைச் சுதந்தர ராணியாக்க வேண்டுமானால், அடிமைக்கோட்டையை இடித்துத் தகர்க்க வேண்டும்; மடமையிருளைக் கல்வியொளியால் மாற்ற வேண்டும்; வறுமைத் துயரைத் தொழிலறிவால் போக்க வேண்டும். பணக்காரர்

பணத்தைத் தொழிலாக்கிப் பலஏழைகள் பிழைக்கச் செய்வது புண்ணியம். அறிவாளர் கல்வி பரப்புவது புண்ணியம்; இந்தப் புண்ணியத்தைத் தாங்கள் செய்து வரலாம்."

"சரித்திரத்தில் தங்களுக்கு நல்ல புலமை யிருக்கிறது. "சமரச போதினி"யில் தாங்கள் எழுதி வந்த ஆங்கிலேயர் வரலாறு பூர்த்தி யாகட்டும். உலக வரலாறு தமிழில் வரவேண்டும். தாங்கள் வகுப்புப் பாடத்திலேயே தேச சேவை செய்யலாம். கிராம்வெல், பிம், ஹாம்டன், நெப்போலியன்,வாஷிங்டன், லெனின் முதலிய வீரர்களைப் பற்றி உருக்கமாக மாணவருக்குச் சொல்லுங்கள். மற்ற நாட்டு வீரரைப் பற்றிப் பேசும்போது பாரத வீரருடன் ஒப்பிட்டுப் போதியுங்கள். நெப்போலியனை விட சிவாஜி நூறு மடங்கு வீரன், தீரன். குரு கோவிந்தன் போன்ற வீர யோகி உலகத்திலேயே இல்லை. தெர்மா பொலி வீரன் லியோனிதாஸை விட ஹல்தி கட்டம் வீரனான பிரதாப சிங்கன் நூறு மடங்கு தியாக வீரன். லெனின் ரஷ்யாவில் இரத்தக்கொடி நாட்டினான்; மகாத்மா இந்தியாவில் சாந்தக் கொடி நாட்டினார். நமது மகான்களை மாணவர் மதிக்கும்படி பாடம் சொல்லுங்கள். இந்து தேச சரித்திரத்தை உணர்ந்து கற்பித்தால் சிறந்த தேச சேவையாகும். அசோகனின் அருளாட்சி, ஹர்ஷனின் அன்பு, இந்து சாம்ராஜ்யத்தின் தெய்வப் பொலிவு—இவற்றை விளக்குங்கள். சுதந்தர இந்தியாவின் பெருமையையும் இப்போதுள்ள அடிமை இந்தியாவின் பரிதாபத்தையும் படம் பிடித்துக் காட்டுங்கள். இப்போது இந்து சரித்திரக்காரர் வட இந்தியாவைப் பற்றியே வளைத்து வளைத்து எழுதுகிறார்கள். இந்திய சரித்திரம் தமிழ்நாட்டிலேதான் தொடங்குகிறது. வள்ளுவர், கம்பர், இளங்கோ, திருமாவளவன், இளஞ் செழியன், செங்குட்டுவன், ராஜராஜன் போன்ற

கவியரசர் வரலாறும் புவியரசர் வரலாறும் சரித்திரப் பாடத்தில் சேர்த்து மாணவருக்கு உணர்ச்சி உண்டாக்க வேண்டும். முற்காலம் தமிழரின் தேக்குக் கப்பல் உலகெல்லாம் சென்று, பொன்னும் பொருளுங் கொண்டு வந்த புகழைப் பேசுக! மாணவருக்குத் தமிழக உணர்ச்சி, இந்திய உணர்ச்சி, உரிமை யுணர்ச்சி, கடமை யுணர்ச்சிகளை ஊக்குக. சரித்திர ஆசிரியர் இதைச் செய்தால் சிறந்த தேசப்பணி செய்தவ ராவார்...... இப்போது உயர் வகுப்புக்களில் தமிழ் மாணவருக்கு ஆங்கிலத்தில் சரித்திரம் சொல்லுகிறார்கள். இது இயற்கைக்கு விரோதமானது. ஒரு தாய் தன் மொழியில் பேசினாலே குழந்தை அறிந்து கொள்ளும். ஆங்கிலந் தவிர மற்றப் பாடங்களைத் தமிழிலேயே சொல்லுவது நல்லது; விஷயம் எளிதில் விளங்கும். சரித்திரத்தில் வேண்டியது ஆங்கிலச் சொற்க ளல்ல; விஷய ஞானமும் உணர்ச்சியுமே முதன்மையான தாகும். தாங்கள் சரித்திர பாடங்களைத் தமிழிலேயே சொல்லலாம்; இடையிடையே தமிழ் மேற்கோள்களையும் உபயோகிப்பது நல்லது; உதாரணமாக சிவாஜி சரித்திரம் சொல்லும் போது :

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்க்கும்
ஆற்ற லதுவே படை"

என்னும் குறளைச்சொல்லி, மாணவருக்கு உணர்ச்சியூட்டலாம். சரித்திரத்தில் உணர்ச்சி—தேச உணர்ச்சிதான் முதன்மை......செய்யும் கடமையை...,செயம் பெருகும்"

ஒரு நொடிகூட வீணாக்காத சேவை

இதன் பிறகு நான் சுவாமிகள் விஷயமாகச் சில கேள்விகள் கேட்டேன்; அவர் தமது உணவு கொள்கை வகைகளைப் பற்றிப் பேசி விட்டு, "என்னைப்பெற்ற தாய்

ருக்கு, செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன். என் தந்தை உடலுடன் காஞ்சிரங்காட்டுக்கும் போய்வந்து விட்டேன். என் உடல் அப்படிப் போகுமுன், ஒவ்வொரு மூச்சையும் என்னை ஆவேசப் படுத்தும் தேசத்தாய்க்கே அர்ப்பணிப்பேன்; ஒரு நொடிகூட வீணுக்காமல், மனோ வாக்குக் காயங்களால் என்னுலான பணியைச் செய்து வரு வேன்; என் யோகசாதனம் பலித்து விட்டது; இறைவன் எனக்குத் தந்த சக்தியை வீணுக்காமல் அடக்கமா யிருந்து சக்தியை உலகிற்கு நன்மையான தொண்டில் செலவிடுவது தான் என் குறிப்பு. என்னை, காற்றைப்போலச் சுதந்தர மாக்கிக் கொண்டேன். இனி ஒவ்வொருவர் உள்ளும் காற் றைப்போல் உலாவி நன்மை செய்யும் பணி செய்வதே என் வாழ்க்கை. அருளுண்டு; பொருள் வரும். புண்ணியம் புரிவதே வாழ்வின் பொருள்; என் பணத்தை தர்மஸ்தா பனங்களுக்கும் ஏழைகளுக்கும் தந்து விட்டேன். என்னை இறைவன் எப்படி நடத்துகிருனே அப்படிச் செல்வேன்; மற்றவை அவன் இச்சை" என்று பாரதியார் உள்ளாழ்ந்தார்.

நான் வெளியே வந்தேன். காரியாலயத்தி லுள்ள சிப்பந்திகள் சுவாமிகளின் கருணை, தூயவாழ்வு, யோக சாதனம், உணவுமுறை, தியாகம், எழுதும் முறை, மௌன விரதம் முதலியவற்றைக் குறித்து உணர்ச்சி யுடனும் உள்ளங் குளிர்ந்த கருணையுடனும் பேசினுர்கள். அப்போது எனக்கிருந்த உணர்ச்சி எழுத்தில் அடங்காது.

சுகமா?

சுவாமிகளின் அன்பிற்குரிய வைத்திநாதன் மூலம் அடிக்கடி அவர்கள் பாடல்களைப் படிக்க நேர்ந்தது. சுதேச கீதங்கள், தொழில் சம்பந்தமான பாட்டுக்கள்,

ஜீவகாருண்யப் பாடல்கள் எல்லாம் வந்தன. என்னுடன் வேலை பார்த்த தமிழ்—சமஸ்கிருத பண்டிதர்களைக் கொண்டு அவற்றைப் பாடக்கேட்டு மகிழ்ந்தேன். வைத்தி நாதன் அடிக்கடி சுவாமிகளைப் பார்த்து வந்து அதிசய மாகச் சொல்லுவான். அந்த அன்பு மாணவன் அகால மரண மடைந்தது வருந்தத் தக்கது.

பிறகு சுவாமிகள் திருவிடைமருதூர் கௌதம நிலை யத்தி லிருந்து கொண்டு "தொழிற் கல்வி" என்ற மாத சஞ்சிகை நடத்தினார்கள். அதன் பிறகு பாமணியில் ஒரு ஆசிரமம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு "இயற்கை" பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந் திருந்தார்கள். அச் சமயந்தான் சென்னை காங்கிரஸ் நடைபெற்றது; இயற்கை வைத்திய மகாநாடும் நடந்தது. அவ்வமயம் சுவாமிகள் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்தார்கள். அந்த அவசரத்திலும் என்னைக் கண்டபோது பெயர் சொல்லி அழைத்து, புன்னகையுடன் "சுகமா?" குடும்பம் எப்படி? பிறகு பார்க்கிறேன்; நன்று யிருங்கள்" என்ற வரையில் நினைவு வைத்திருந்தார்கள். பிறகு ஆந்திர நாட்டில் ஜீவ காருண்ய சங்கம் நிறுவி, "கொலை மறுத்தல்" பிரசாரம் நடத்தி, அதற்கான பாடல்களைத் தெலுங்கிலும் இதே போன்ற எளிய நடையில் இயற்றி அவற்றிலும் சில பிரதிகள் கிடைக்கப் பெற்றேன்; ஆனால் அவ்வளவு பிரதி களும் என் வசமின்றி யார் யாரோ வாங்கிச் சென்றார்கள்.

சென்னை காங்கிரசுக்குப் பிறகு சுவாமிகள் ஸ்வ ராஜ்யா, தினசரி நடத்தியதும் பிறகு, எங்கெங்கோ சுற்றித் திருவண்ணாமலை ரமணாசிரமத்திலிருந்ததும், பிறகு அரவிந்தாசிரமம் சென்றதும் உலகறிந்தவை. சுவாமிகள் செய்துள்ள இலக்கியங்கள் கணக்கற்றவை; எல்லாத் துறைகளிலும் அவர்கள் புலமை சென்றுளது.

அருள் பெற்ற மகான்

செட்டிமார் நாட்டில் நான் வாழ்க்கை நடத்த நேர்ந்தது பெரிய மகிழ்ச்சி யளிக்கிறது. ஆசிரியர் கூட்டங்களில் சுவாமிகளின் தமையனார் ஸ்ரீ ஐ. ரங்கசாமி ஐயரைக் கண்டு பேசுவேன். மானாமதுரை உயர் பள்ளிக்கூடத் தலைவரான ஸ்ரீ. C. விஸ்வநாதையர் மூலம் அவர் சகோதரரான கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பாடல்களைக் கேட்டுருகுவேன். சுவாமிகளின் மூத்த சகோதரர் வக்கீல் ஸ்ரீ ஐ. வெங்கடராமையருடனும் அளவளாவி சுவாமிகளின் பாடல்களைக் கேட்டதுண்டு. சுவாமிகள் ஆசிரியரா யிருந்தபோது வேலூரில் மெண்டிஸ் என்பவரிடம் சாரணப் பயிற்சி பெற்றார்கள். அப்போது அங்கே யிருந்த சாரண மணியான எனது நண்பர் புதுக்கோட்டை சாரணக் காரியதரிசி ஜி. வெங்கடேசன், சுவாமிகளின் அருமை பெருமைகளைப் பற்றி உற்சாகமாகப் பேசக் கேட்டதுண்டு.

சுவாமிகள் தற்போது அடைந்துள்ள பெருமைகள் "விளையும் பயிர் முளையிலே" என்பது போல் அந்தக் காலமே விளங்கின. "எப்போதும் ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார்; பாடிக்கொண்டிருப்பார்; ஆங்கிலக் கவிதைகளுக்கு கர்நாடக ராகம் போடுவார்; தனிமையில் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார்; உலகை மறந்து உள்ளேயிருப்பார்" என்றெல்லாம் நண்பர் சொல்லுவார்கள். ஆண்டவன் அருள் பெற்ற மகான்கள் இன்னும் நமது நாட்டில் விளங்குவதற்கு சுவாமிகள் அத்தாட்சி. பள்ளி ஆசிரியர்களுக்கு அவர் வாழ்க்கை ஆவேச மளிக்கும்—அவர் ஆசிரியர்.

சுத்தானந்தக் கவிக் கனிகள்

"நடனம்"

கவியோகி ஸ்ரீ சுத்தானந்தரின் உள்ளம், இயற்கை யின்பத்தில் தோய்ந்து, இறை யின்பத்தில் பழுத்தது. இறையோடு கூடிய இயலின்பத்தில்தான் சாகாவரம் பெற்ற கவிக் கனிகளும், கலைக் கனிகளும் பழுத்துக் குலுங்குவதைக் காண்கிறோம். வியாசர், வான்மீகி, வள்ளுவர், கம்பர், சேக்கிழார், வேத ரிஷிகள், மாணிக்க வாசகர், அப்பர், துளசிதாஸ், கபீர், ஷேக்ஸ்பியர், ஹோமர், தாந்தே, கௌப்பர், ஷெல்லி போன்ற அருட் புலவர்களின் திருவாக்குகள் உலகில் இதுகாறும் உயிர்த்திருப்ப தேன்? அவர்கள் உள்ளம், ஆண்டவனுடனும் உலகில் அவன் அழகின்ப விளக்க மாகிய இயற்கை யுடனும் உறவு கலந்து, அருளறிவில் பொங்கித் ததும்புவதா லன்றோ?

இவ்வருட் புலவர்களே உலக சமுதாயத்தின் தீர்க்க தரிசிக ளாவர். இவர்தம் மணிவாக்குகள், எத்தனை ஆண்டுக ளாயினும், கால வெள்ளத்தில் அழியா திருப்ப துறுதி. சுத்தானந்தரின் கவிக்கனிகள், அருளழகும் பொருளணியும் மிக்கவை; அவை பழமைக்கும் புதுமைக் கும் பஞ்சாமிருதம் போன்றவை. அவற்றைச் சுவைத் தறியும்போது மனதிற் கின்பமும், வாழ்விற்கு ஒளியும், உயிருக்கு இனிமை யுணர்வும் நாம் எய்துகிறோம். இறையன்பும், உள்ளொற்றுமையும், உலகொற்றுமையும், மனித வாழ்வைப் புனித மாக்கும் நேரிய பண்பும், எளிமை யும் இனிமையும் ஒருங்கே செறிந்த அருட் கவிதையே சுத்தானந்தக் கவிக்கட லாகும். சுத்தானந்தக் கவிக்கனி யுருக்கும், தீஞ்சுவை யமுதைச் சிறிது நுகர்வோம்:

உலகோர் கனவு காண்பது ஒரு விதம்; அருட் கவிகளின் கனவு, மற்றொரு விதம். மாந்தர், தமது தினசரி வாழ்க்கையில் தமது கண் முன்னே தோன்றும் அமுத நிகழ்ச்சிகளைச் சிறிதும் கவனிப்பதே இல்லை. உலகைத் துன்பமயம் என்றும், பந்தவெள்ள மென்றும் மக்கள் ஒதுக்கி விடுவதை நாம் சாதாரணமாகக் காண்கிறோம். ஆனால் தீர்க்கதரிசிக ளாகிய வரகவிகளோ, நம்மைத் துன்பத் துயிலினின்றும் தட்டி எழுப்பி, நமது சுக துக்கங்களிலும், தினசரி வாழ்க்கையிலும் நம்மோடு பங்குகொண்டு தூய வழி காட்டி, வாழ்வை இன்பமய மாக்கி விடுகிறார்கள். சுத்தானந்தர் கவிதையின் இன்பக் கனவு, உலகோ டியைந்து நம்முடன் விளையாடுகிறது; நம் வாழ்வின் சுகதுக்கங்களில் பங்கு கொள்கிறது. இவ் வையம் முழுதும் நமது கவியோகிக்கு இன்ப மயமாகவே தோன்றுகிறது. அவர் கனவில் எங்கும் கலைவெள்ளம் பொங்குவதைக் காண்கிறோம்: குயில் அன்பென்று அகவுகிறது; பொன் மயில் ஆசைகொண் டாடுகிறது! இவற்றை யெல்லாம் எவ்வாறு துன்பமய மென்று முடிவு கட்டுவது? நம் முன்னே தோன்றும் இந்த வாழ்க்கை பொய்யா? இல்லை, இல்லை. அது அமுத மயமானது; காதலின் ஊற்று; தென்ற லிசைக்கும் திருவாய்மொழி!

"செங்கதிர்க் காலை மலரை—கொஞ்சும்
தென்றலி லேதிரு வாய்மொழி கேட்குது!
தங்க மலைநதிப் பாட்டில்—ஜீவ
தத்துவக் காவியம் தாவி வருகுது!"

என்று சுவாமிகள் பாடும்போது, கவியுடன் நாமும் சேர்ந்து, "ஆம், இன்பக் கனவிந்த வையம்" என்றே பாடிக் களிக்கிறோம்!

இயற்கை யழகு

இறைவன் திருமேனியே இயற்கையின்பப் பொலி வாகும். சுத்தானந்தரின் கவியுள்ளம், இயற்கைத் தோழனைகவே வணங்கித் துதிக்கிறது!

" பொன்னியற்கை உள்ளத்திற்
 புன்னகையே பூத்திருப்பான்;
என்னியற்கைத் தோழனவன்
 இன்பக் கவிதருமே!"

என்னும் போதும்,

" மாதர் மதிமுகத்தில்—அழகின்
 மங்கலம் வைத்தவன் யார்?
காதலினுல் உலகை—அமைக்கும்
 கருமச் சிற்பியிங் கார்?"

எனப் பாடும்போதும், நமது உள்ளம் இறையன்பில் பதிந்து விடுகிறது.

அழகு எங்கே மலரும்? இயற்கையில்! அவ் வியற்கை யில் காண்பதென்ன? எங்கும் தெய்வ சேதனமே! அச் சேதன விரிவு கவியின் கண்களுக்கு இனிய விருந் தளிக்கிறது.

" பாரினிலே யழகு — கண்
 பார்வையைக் கொஞ்சுதம்மா — அதன்
போர்வையை நீக்கிவிட்டால் — தெய்வப்
 பொலிவு காணுதம்மா!"

சிந்தனைக்குள், இயலழகு தேங்கிக் கிடக்கிறது; அது உலகியலில் விரிந்து பரவ வேண்டும். அதை விடுவிக்க வழி யுண்டா? உண்டு "மனப்பந்தனை யற்றுவிட்டால்,

அது பரந்து தாவுமம்மா" என்னும் வழியையும் காட்டி விடுகிறார், நமது அருளமுதக் கவிஞர்!

இயற்கையின் கவிதா விலாசமே 'இன்பம், இன்பம்' எனத் துடிக்கும் அருட் கவிகளின் உள்ளங்களுக்கு, மனக் கட்டுகளும், கவலைகளும் ஏது?

"காலச் சுருதியுடன் கூடி — ஒளி
கலந்த அருவியெனப் பாடி
நீலமணிப் பந்தலின் கீழே — என்றும்
நிருத்தஞ் செய்வதென தின்பம்!"

எனப் பாடும்போது, வாழ்வில் நமக்கும் அத்தகைய வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்குகிறோம்!

கடல்

கடலலை கர்ச்சனை செய்கின்றது. அவ் வலையொலி, நமது கவியின் செவியில் பட்டவுடன், வேதாந்த கர்ச்சனையாக மாறிவிடுகிறது!

"சச்சிதா னந்தப் பரம்பொருள் ஒன்றெனக்
கர்ச்சனை செய்கடலே — உலகிற்குக்
கர்ச்சனை செய்கடலே!"

* * *

"நாத வெளியினில் வேதப்பொருள் பாடி
நர்த்தனஞ் செய்கடலே!"

* * *

"உள்ள வமைதியில் ஓம்தத்ஸத் ஓமென
ஒலித்திடுங் கடலே!"

இந்தக் கடலலைகளின் ஓங்காரத்தைக் கேட்கும்போது நமது உள்ளமும் கவியுள்ளத்துடன் இணைந்து, இன்பக் கடலாடி, வேதாந்த முழக்கஞ் செய்கிறது!

சந்திரன்

வெள்ளித் திங்கள் உள்ளங் குளிர வருகிறது! அதன் கள்ளவிழ் அந்தி நகையில் உள்ளம் போக்கிய நமது கவியோகி, தமது கொஞ்சும் கவிக்கரங்களால் பித் தேற்றுஞ் சந்திரனை அழைப்பதின் அழகைப் பாருங்கள்: "ஏ, அமுதம் பொழியும் வெண்மதியே! விரைவில் வாராய்! உன் வரவு கண்டு சிறுவர் சிறுமியர் களிதுள்ளி ஆட வேண்டும்; தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு அம்புலி காட்டி அமுதூட்ட வேண்டும்; மனங் குளிர மகிழ்ந்து தனியின்பம் நாடும் வதுவரர், கூடி ஆடிப் பாடிக் களிக்க வேண்டும்! ஞாலத்திற்கு இதஞ் செய் மதியே! உன் வரவால் அல்லி மலர் துயிலெழ வேண்டும்; அது நின் வரவிற்காகக் காத்திருக்கிறது. தாமரைகள் கண்ணயர்ந்து சற்று உறங்க வேண்டாமா? அந்தி முல்லை மலர்ந்து மணம் வீச வேண்டும். வெள்ளி யன்னமே, வானக்கடலில் ஊர்ந்து செல்லும் வன்னத் தோணியே! வா, வா! நின் மோனப் புன்னகையால் உலகை மோகப் படுத்தி, தேனொத்த செந்தமிழ் அமுதம் பொழிய வாராய் திங்களே!" என்னும் கவிக் கனவுகள் கற்பனை கடந்த இயற்கைக் கவிச் சித்திர மாகும்!

"மீனார் மலர்க் குளத்தி னூடே — தவழ்
வெள்ளி யன்ன மெனவாராய்!
வானக் கடல் கடந்துமெல்லச் — செல்லும்
வன்னத் தோணியென வாராய்!
மோனப் புன்னகையி னாலே —எம்மை
மோகப் படுத்து முகங்காட்டி
தேனொத்த செந்தமிழ்போல் அமுதம் — பொழி
திங்கள் வருக, நலம் பொங்க!"

என்னும்போது, நமது மனம் நம்மாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்களில் ஈடுபட்டு இன்பவெறி கொள்ளுகிறது.

சுத்தானந்தர் கவிக்கனிகள் உகுக்கும் அருளமுதைப் பருகுவதென்றால், எல்லாப் பாடல்களையும் படித்துப் படித்து, அவற்றின் பொருளின்பத்தில் உள்ளந்தோய்ந்து அனுபவித்தே பயன் பெறவேண்டும். இறைவன் விளக்கமே இயற்கை. அருளில் திளைத்த மனமே இயற்கையில் கனிந்துருகும். ஆதலின் இயற்கையில் படிந்த உள்ளம், இறைவனை எளிதில் கண்டு களிக்கும். இவ்வுலகம் பெரிய திருக்கோயில். அதில் மாந்தர் ஒற்றுமையாய் வாழ வேண்டும். சித்தமும் செய்கையும் ஒன்றானால்தான் ஒற்றுமை நிலவும்; நாடு முன்னேறும். மாந்தர் எண்ணத்தை உயர்த்தி இனிது வாழ வேண்டும். வையத்தில் வாழ்வாங்கு வாழும் இன்ப வழியைத் துலக்கும் சுத்தானந்த வாக்கை வாழ்வில் ஓதியுணர்ந்து இன்புறுவோமாக!

"இன்பமின்ப மென்று பாடுவோம்—எங்கும்
இன்ப மோங்கத் தொண்டு செய்குவோம்!
அன்பெனும் அமுத முண்ணுவோம்!
அமர ஆற்றை யள்ளிப் பருகுவோம்!
துன்ப மில்லை அச்ச மில்லையே,
சோம்ப லில்லை தோல்வி யில்லையே;
தென்புலத் தரசன் பாசமும்—நம்மைத்
தீண்டாத தீயைத் தாண்டினோம்!"

மான யோகி !

வி. சூ. நடராஜன்

இராகம் : பிலகரி — திரிபுடை தாளம்

பல்லவி

மான வாழ்க்கை வாழும் யோகியே — ச
மான வாழ்க்கை — ரச
மான வாழ்க்கை — சரச
மான வாழ்க்கை — சமரச
மான வாழ்க்கை — ஏகரச
மான வாழ்க்கை வாழும் யோகியே ! (மான)

அநுபல்லவி

வான வெளியென, மோன வெளியினில்
ஞான வொளியென ஊனில் விளங்கியே (மான)

சரணம்

கன்னித் தமிழிசை மின்னிப் பொலியவே
கனிந்த முத்தமிழ் அணிந்து தந்தனை ;
அன்னையின் பணி தன்னுயிர் என
ஆற்றிடும் சுத்தானந்த தியாகியே ! (மான)

என்பும் உருகிடும் அன்பும் அருளுடன்
துன்பம் விலகிடும் இன்பப் பொருளுடன்
மன்பதை மகிழ் நின்பணித்தப் பல *
* ஐம்பதும்பொன் அம்பலந்தரும் (மான)

குறிப்பு: **"மான மாக வாழும்"** என்பதில் சுவாமிகளின் சிறந்த கொள்கை அடங்கியுள்ளது. சுவாமிகள் இன்றும் தமது தேவைகளைத் தாமே உழைத்தே அடைகிறார். எவரிடமும் யாசிப்பதில்லை. இல்லறத்தாரே துறவிகளுக்கு ஊணுடை தரவேண்டும் என்பது பழைய விதி. துறவிகளோ, இல்லறத்தார் வறுமை மடமை அடிமைத்தனங்கள் நீங்கத் தொண்டு செய்யக் கடமைப் பட்டவர்கள் என்பது சுவாமிகள் கொள்கை.

* **"பல ஐம்பது"** என்பதில் விசேடம்: சுவாமிகளுக்கு இது ஐம்பதாம் ஆண்டு; இன்னும் பல ஐம்பதாண்டுகள் வாழவேண்டும் என்பதொரு பொருள். இந்த ஐம்பதாம் ஆண்டிலேதான் சுவாமிகள் தமது பேறுப்பணியை முடித்துவிட்டு, அடுத்த திருவருட்பணிக்காக திருவருளை நினைத்து நிற்கிறார். அந்த நினைப்பு பலித்து, இந்த ஐம்பதாண்டுகள் எப்படி ஒரு நொடி கூட வீணாகாமல் பொதுநலத்திற்கே பயனானதோ, அப்படியே பல ஐம்பதாண்டுகள் பயனாக வேண்டும் என்பது கருத்து.